
தமிழரசு
16-9-1986
ரூ. 1



அதோ! அந்தப் பறவை போல வாழ வேண்டும்!
என்று அன்று பாடினார் புரட்சித்தலைவர்.
அதுபோல் இன்று...

வாழ்வெனும் வானில்
வளம்பெற வாழ்ந்திட
வட்டியை வாரி
வழங்கும் வங்கி...



எம். சி. சி. வங்கி

அனைவருக்கும் ஏற்ற வகையில்
அருமையான திட்டங்கள்-
அதிகபட்ச வட்டி தரும்
கவர்ச்சிமிகு திட்டங்கள்!

இன்றே நாடுங்கள்
இலட்சாதிபதியாக்கும் பிரியதரிசினி திட்டம்

இதுபோல் பல திட்டங்கள்

வாருங்கள்; வளம் பெறுங்கள்!

MCC BANK

சென்னை
மத்திய கூட்டுறவு வங்கி
சென்னை-600 108



அண்ணா அவர்கள் நமது நாட்டுக்கு ஒரு நிதி என்றுதான் சொல்ல வேண்டும். பகுத்தறிவாளர்; மூட நம்பிக்கையை ஒழிக்க என்னோடு இருந்து தொண்டாற்றியவர் ஆவார். பகுத்தறிவுக் கொள்கைப்படி, துணிந்து, இமயமலை அளவு எதிர்ப்பு இருந்தாலும் கவலையேதும் கொள்ளமாட்டார்.

–தந்தை பெரியார்

## தந்தை பெரியார்-பேரறிஞர் அண்ணா சிறப்பு மலர்

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். ஆயினும், மற்றப் பலரையும் விட அவருடன் இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்றும் அவைகளை நினைவிற்கொண்டு வரும்போது இனிமை பெறுகிறேன்.

–பேரறிஞர் அண்ணா




தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஆவணி 31

மலர் : 17 இதழ் : 6

16-9-1986

# அன்பின் ஊற்று

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

அரசியல் தலைவர்களுக்கில்லாத பல்வேறு அருங்குணங்களைப் பெற்ற அண்ணா அவர்களை வெறும் அரசியல் தலைவர் என்று மட்டுமே காண்பது பெருங்குற்றமாகும்.

பேரறிஞர் அண்ணா ஒரு நாடகாசிரியர், சிறந்த எழுத்தாளர், மிகச் சிறந்த பேச்சாளர், அனுபவமிக்க பத்திரிகாசிரியர், அற்புதமான நடிகர், மொழி வல்லுநர், பண்பாடு மிக்க மாபெரும் அரசியல் அறிஞர் என்பதெல்லாம் அவருடைய சிறப்புக்கள் என்றாலும், இவை எல்லாவற்றையும் விட தூய்மையான 'அன்புள்ளம் கொண்ட அண்ணா' என்று காண்பதிலேதான் முழுமை பெற்றதாக முடியும்.

ஆம். அவருடைய உள்ளம் அரசியல் உலைக்களத்திலே காய்ச்சிய உருக்கல்ல; அரசியல் பாலைவனத்திலே அன்பைச் சுரக்கும் ஊற்று அவரது உள்ளம். தன்னை அழிக்க எண்ணும் எதிரிகூடத் துன்பப்படக்கூடாது என்று எண்ணும் கருணை உள்ளம். அரசியல் இயக்கங்களிலே, கட்சித் தொண்டர்களைப் பலிகடாவாக்கி, அந்தத் தியாகிகளின் மீது தனது தலைமைக் கொடியைப் பறக்கவிட நினைப்பதுதான் அரசியல் தந்திரம். அப்படிப்பட்ட அரசியல் களத்தில் அண்ணா அவர்கள் தான் அரசியல் இயக்கத்தையே ஒரு குடும்பமாகக் கண்டார். குடும்பத்தில் காணப்படும் பாசம், பற்று வளரவேண்டுமென விரும்பி கட்சித் தலைவன் இயந்திர இதயம் உள்ளவனாகக் கூடாது என்று தன்னை ஒரு பெரிய குடும்பத்தின் தலைவனாக, ஒரு மூத்த அண்ணனாக





ஆக்கி, தன் கட்சியில் உள்ளவர்களைத் தம்பிகளாக ஆக்கினார்.

அவருக்குத் தன்னுடைய சக்தியில் முழு நம்பிக்கை உண்டு. எழுத்திலோ, பேச்சிலோ, இயக்கத்தை நடத்திச் செல்வதிலோ யாருக்கேனும் இடம் அளித்து விட்டால், அவர்கள் தன்னை அழித்து விடுவார்கள் – தன்னுடைய செல்வாக்கைப் பறித்து விடுவார்கள் என்ற எண்ணமே இல்லாதவர் அண்ணா. மாற்றாரின் திறமைக்கு மதிப்பளிப்பதிலே ஈடற்றவர் அண்ணா. இந்தப் பண்புதான் அவரைப் பெரியாரிடத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்ற வைத்தது. இந்தப் பண்புதான் பெரியாரையே எதிர்த்து வெற்றி காண வைத்தது.

தன்னுடைய குடும்பத்திலே ஒரு தம்பிக்கு – ஒரு பிள்ளைக்குப் புகழ், பாராட்டு கிடைத்தால், குடும்பத் தலைவன் எவ்வாறு இதயம் பூரிப்பானோ, அதைப்போல, தம்பிமார்கள் அடையும் சிறப்பைப் பார்த்துப் பார்த்து மகிழ்வார். இத்தகைய இதயத்தை எந்த அரசியல் தலைவரும் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று இருப்பதாகவே தெரியவில்லை.

அண்ணாவின் அன்புள்ளத்தின் முன்னால், தகுதி படைத்தவர்கள் தான் முதல் இடம் பெறுவார்கள். சமயம் வரும்போது அவர்களை உயர்வு படுத்துவதிலே அண்ணாவுக்கு நிகரானவர்கள் உண்டா என்று தேடிப் பார்க்கிறேன்.

அண்ணா அவர்களின் பாசமிகு குடும்பத்திலே ஓர் உறுப்பினனாக வாழும் பேறு பெற்றதை எண்ணி எண்ணி மகிழும் நேரத்திலே.. அண்ணன் பிறந்த இந்தப் பொன்னாளிலே நம்முடைய பாச உள்ளங்களை அவருடைய பாதங்களிலே படைத்து மகிழ்வோம்....

வாழ்க அமரர் அண்ணா நாமம்!



# அண்ணாவின் இலட்சியங்கள்


மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்

**திரு இராம. வீரப்பன்**


—கண்ணீர்த்துளிகள்
—கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
—எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
—மறப்போம், மன்னிப்போம்
—மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
—எங்கிருந்தாலும் வாழ்க
—வசவாளர்கள் வாழ்க
—ஒன்றே குலம் ஒருவனே தேவன்
—இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

இவைகள் ஏதோ சில பொருள்களைத் தரும் சாதாரண சொற்றொடர்கள் அல்ல.... ஒரு சமுதாயத்தை விழிக்க வைத்து, மறு மலர்ச்சி பெறச் செய்து புது உணர்வுகளை ஊட்டி, புதிய சமுதாயமாக ஆக்கிய ஆற்றல் மிக்கவைகள்....'அண்ணாயிசம்' என்ற ஒரு புனிதமான தத்துவத்தின் சின்னங்கள்.

ஒவ்வொரு சொற்றொடரும் மனோ தத்துவ ஆய்வாளர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய இலட்சியக் குறியீடுகள்... மனித வாழ்விற்கு அடிப்படை இலக்கணங்கள். தமிழக வரலாற்று அத்தியாயங்களின் தலைப்புக்கள்...இந்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் அறிஞர் அண்ணா அறிமுகப்படுத்திய பண்பாட்டுத் தத்துவத்தின் தலை எழுத்துக்கள்...அடுக்கு மொழிகளல்ல......... அறிஞர் பெருந்தகை அண்ணாவின் இதயத் துடிப்புகள்.....தமிழ்த் தாயின் தலைமைகளின் இலட்சிய விளக்கங்கள்.....தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரற்ற வழிகாட்டியின் வரலாற்றை விளக்கும் அடையாளங்கள்....அவருடைய வாழ்க்கை நெறிகள்....

உலக வரலாற்றிலேயே, பொது வாழ்க்கைக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட ஒரு தலைவனுக்கு, அறிஞர் அண்ணாவிற்கு ஏற்பட்டது போன்ற துயரம் மிகுந்த அனுபவம் ஏற்பட்டிருக்காது. இதயத்தைத் தூளாக்கும் ஏசல்கள்-இழிமொழிகள்-வசைகள் -ரத்தத்தைச் சூடேற்றும் நாராச-நரகல்



பிரெஞ்சு நாட்டு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பேட்டி அளித்தபோது..

நடைப் பேச்சுக்கள் - அழித்து ஒழிப்பதற்கான இடைவிடாத தாக்குதல்-தன்னை ஆளாக்கிய தலைவனிடமிருந்து, தான் வளர்த்து ஆளாக்கிய அன்புத் தம்பிகளிடமிருந்து, என்றும் எதிர்க்கும் எதிரிகளிடமிருந்து.....அவைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டார்..பொறுமைக்கு பூமியை இலக்கணமாகச் சொல்வார்கள்...அறிஞர் அண்ணாவோ பொறுமைக்குப் புதிய இலக்கியம் படைத்தார்.... பூமியையும் மிஞ்சினார்....எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று யாரோ ஒருபெரியவர் சொன்ன பொன்மொழிக்கு உயிரளித்தார்....உயிரோவியமாக வாழ்ந்து காட்டினார்....''மறப்போம்- மன்னிப்போம்'' என்றார்...ஆம்! இழைத்த கொடுமைகளை மறந்தார்...மாபெரும் உள்ளத்தால் மன்னித்தார்! வீழ்த்த முயன்றவர்களை - வெறிபிடித்து தாக்குதல் நடத்தியவர்களை வெட்கித் தலைகுனிய வைத்தார்!

திறமையாளர்கள் - நல்லவர்கள்-பண்பாளர்கள் தியாக உள்ளம் படைத்தவர்கள்—நாட்டுக்குழைத்தவர்கள் - எங்கிருந்தாலும்-எந்த முகாமில் இருந்தாலும் பாராட்டுகிற பண்பை வளர்த்தார்..பல கருத்துக்களைக் கொண்டவர்கள் - மாறுபட்ட எண்ணம் படைத்தவர்கள் ஒரே மேடையில் கூடமுடியும். ஒ ந்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்...மனித நாகரிகத்தை வளர்க்க முடியும். அரசியல் என்பது நாகரிகமுள்ள—நாணயமுள்ள - மனித உணர்வுகளின் அடிப்படையில் கட்டப்பட வேண்டிய பளிங்கு மாளிகையே தவிர, வெறுப்பு - பகை - பழி என்ற அநாகரிக அஸ்திவாரத்தின் மேல் கட்டப்படுகிற அரக்கு மாளிகை அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்....மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற சொல்லுக்குப் பொருள் கண்டவர்—புதிய இலக்கணம் படைத்தவர்.

அன்பும் அரவணைப்பும் அவரது வாழ்க்கை நெறி ..எல்லோரிடத்திலும் அன்பு காட்டி, இரக்கத்தைப் போர்த்தி, பாசத்தைக் கொட்டி குடும்ப உணர்வோடு உறவை வளர்த்து ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தை உருவாக்கிக் கட்டிக் காத்து வளர்த்தவர்-அற்புதங்கள் நிகழ்த்தியவர் பேரறிஞர் அண்ணா....

கலையுணர்வும்,பாச நெஞ்சமும் படைத்தவர்—தவறே செய்தாலும் கடிந்து கொள்ளப் பழகாதவர் - தண்டிக்க விரும்பாதவர் - பாலூட்டி வளர்த்த சேய் தாயையே வெட்ட முனைவது போல் தம்பிமார்கள் துரோகம் செய்து, தூற்றல் பாணத்தை எய்தபோதும், தன்னைத் தாக்க தம்பி இவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொள்கிறானே என்று வருந்தியவர். தன்னை எதிர்ப்பதால் தம்பியின் புகழ்உயரும் வாழ்வு வளமாகும் என்று இருந்தால் அப்படியாவது நன்றாக வாழட்டுமே என்று எண்ணியவர்...எங்கிருந்தாலும் வாழ்க என்று வாழ்த்தியவர் அறிஞர் அண்ணா!

வசவாளர்களும் வாழட்டும் என நெஞ்சார நினைத்து அவர்களையும் வாழ்த்தி வசவுகளை உரமாக்கிக் கொண்டு வளர்ந்தவர்!

இவைகளெல்லாம் பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களாக-அவர்கள் வகுத்துக் கொண்ட வழி முறைகள். வாழ்க்கை நெறிகள்!





# பண்பாட்டுச் சிகரம் தந்தை பெரியார்

மாண்புமிகு தொழிலமைச்சர்
திரு க. இராசாராம்

தமிழகம் இருண்டு கிடந்த காலம். சாதிச் சண்டைகள் மலிநத நேரம். சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு, தமிழ்ச் சமுதாயம் முன்னேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலேதான், தந்தை பெரியார் அவர்கள் சமுதாயத் தொண்டைத் தொடங்கினார்கள்.

1935-36ஆம் ஆண்டில் தந்தை பெரியார் ரஷ்யா போய்வந்து பல பெரிய புரட்சிகளைத் தமிழகத்திலே செய்யத் தொடங்கினார்கள். மேலை நாடுகளில் ஒரே மதம், ஒன்றே தேவன் என்ற வகையில், அனைவரும் ஏசுவையோ அல்லது முகமது நபியையோ கிருஸ்துவ மதத்தையோ அல்லது இஸ்லாமிய மதத்தையோ சார்ந்து வாழ்வதையும், எல்லோரும் மனிதர்களாகப் பழகுவதையும் கண்டு, அவர் ஒரு பெரிய புரட்சி வீரராகத் தமிழகத்திற்குத் திரும்பினார்.

அந்தக் காலத்தில் சுயமரியாதை மாநாடுகளில் போடப்பட்ட தீர்மானங்கள் இன்றைக்கும் மிகச் சிறப்பாகப் பல அரசுகளால் நிறைவேற்றப்பட்ட புரட்சித் திட்டங்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விடுதலைப் பதிப்பகத்தார் 'சுயமரியாதைத் தீர்மானங்கள்' என்ற ஒரு புத்தகமே வெளியிட்டிருக்கிறார்கள். எத்தனைப் பேர் அந்த வாசகங்களைப்படித்து அறிந்து இருப்பார்கள். அந்த வாசகங்களிலுள்ள உயர்ந்த கருத்துகளை இன்றைக்கு நினைவுகூர்ந்தாலும் புல்லரிக்கச் செய்யக்கூடியன.

இன்றைக்கு நாம் பஸ்களை தேசிய மயமாக்கியதை மிகப் பெரிதாகப் பேசுகிறோமே, தந்தை பெரியார் அவர்கள் 1935-ஆம் ஆண்டிலேயே அதை நாட்டுக்குச் சொல்லிவிட்டார்கள். நிலச் சீர்திருத்தம் பற்றித் தந்தை பெரியார் அவர்கள், அன்றே பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி எத்தனையோ கருத்துகளை அடுக்கிக்கொண்டே போக முடியும்.

தமிழகத்தைப் பொது உடைமைப் பூங்காவாக, சாதிகள் அற்ற புதிய மனித சமுதாயத்தை உருவாக்க ஐயா அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். மேல் சாதிக்காரனுக்கு ஒரு டம்ளர்; கீழ்ச்சாதிக்காரனுக்கு ஒரு டம்ளர் என்றிருந்த நிலையை மறையும்படிச் செய்தவர் தந்தை பெரியார்.

சாதியை ஒழிப்பதற்காகப் புராணங்களிலேகூட அவர் கைவைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சமுதாய மாற்றம் ஏற்படுவதற்காக இரண்டு மணிநேரம், இரண்டரை மணி நேரம் சின்னஞ்சிறு கிராமங்களில்கூட அவர் பேசுவதைக் கண்டு நாடே வியந்து பாராட்டியிருக்கிறது. பத்திரிகைகள் அவரை எந்த அளவுக்கு இருட்டடிப்பு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு இருட்டடிப்பு செய்தன. அதைப்பற்றிப் பெரியார் அவர்கள் கவலைப் பட்டது கிடையாது. போடப்பட்ட ''கார்ட்டூன்களில்'' அவரை மிகக் கேவலமாகச் சித்திரித்தார்கள். தந்தை பெரியார் கார்ட்டூன்களைப் பார்க்கும் போதெல்லாம் சிரிக்கத்தான் செய்வாரே தவிர, அந்தப் பத்திரிகை மீது அவர் கோபப்பட்டு நான் பார்த்ததே கிடையாது.

ஒருமுறை ஒரு பத்திரிகைக் கார்ட்டூனில் அவரை மிகக் கேவலமாகத் தாக்கியிருந்தது. அப்போது ஐயா அவர்கள் மீரான் சாகிப் தெருவில் குடியிருந்தார்கள். காலையிலே நான் அவரைப் பார்க்கப் போனபோது, அவர் ஒரு பத்திரிகையை வைத்துக்கொண்டு ரசித்துக் கொண்டிருந்தார். ''என்ன ஐயா பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று நான் கேட்டேன். அதற்கு ''இந்தா! இந்தக் கார்ட்டூனைப் பார்'' என்று என்னிடம் தந்தார்கள். கார்ட்டூனைப் பார்த்ததும், எனக்கு ஆத்திரம் பொங்கியது.

''அதை ஏன் ஐயா பார்க்கிறீர்கள்? இந்தப் பத்திரிகையே இப்படித்தான்'' என்று ஆத்திரம் தாங்காமல் திட்டினேன். அப்பொழுது பெரியார் அவர்கள் சிரித்துக் கொண்டேயிருந்தார்கள். சிறிதுநேரம் கழித்து, ''அடே பயித்தியக்காரா! இன்றைக்காவது என்னுடைய ஞாபகம் அந்தப் பத்திரிகைக்கு வந்ததே அதைப்பற்றிச் சந்தோஷப்படு!''என்று என்னிடத்திலேயே சொன்னார்கள்; எவ்வளவு பெரிய இருட்டடிப்பையும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கிறார்கள். எவ்வளவு பெரிய கேவலத்தையும் சாதாரணமாகத் தாங்கிக் கொள்கிறார்கள் என்று நான் வியப்படைந்தேன்.

''பொறுத்தவர் பூமி ஆள்வார்'' என்பது பழமொழி. அதனால்தான் தமிழ்நாட்டிற்கு வருகிறவர்களெல்லாம்''பெரியார்! பெரியார்'' என்று பேசுகிற காட்சியை நாடு கண்டு கொண்டிருக்கிறது.

எத்தனை ஆண்டுகள் பத்திரிகைகள் அவரை இருட்டடிப்பு செய்ததோ, அத்துணை ஆண்டுகளுக்கு மும்மடங்கு மேலாக இந்த நாடு பெரியார் அவர்களைப் பாராட்டி வருவதைக் கண்டு வருகிறோம். அவர் எவ்வளவு தீர்க்கதரிசனத்தோடு வாழ்ந்து வந்தார்கள் என்பதை இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறேன்.

ஐயா அவர்கள் மாற்றாரை மதிக்கின்ற உயர்ந்த குணமுள்ள மாமனிதர். தன்னை யார் பார்க்க வந்தாலும், எழுந்து நின்று வரவேற்பதில் அவருக்கு இணை அவரேதான். அந்தப் பண்புகளையெல்லாம் அவரிடத்திலேயிருந்து கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டுமென்று நாங்கள் எவ்வளவோ முயலுகிறோம் முடியவில்லை. வீட்டிலே அவர் மற்றவர்களை வரவேற்பது சர்வ சாதாரணம். பல நேரங்களில் அவரது செயல்கள் மூலம் அவர் எவ்வளவு உயர்ந்த பெரிய மனிதர் என்பது கண்டு வியந்து, வியந்து பாராட்டியிருக்கிறோம்.

மூதறிஞர் இராஜாஜியும், தந்தை பெரியாரும் மிகச் சிறந்த நண்பர்கள். மூதறிஞர் இராஜாஜி இயற்கை எய்தி விட்டார்கள். டில்லியிலிருந்து குடியரசுத் தலைவர் திரு வி.வி. கிரி அவர்கள் இராஜாஜியின் இறுதி யாத்திரையில் கலந்து கொள்ள வந்தார்கள்: சுடுகாட்டில் இராஜாஜியின் உடல் சிதையிலே வைக்கப்பட்டிருந்தது.

தந்தை பெரியார் சக்கர நாற்காலியில் வந்து சேர்ந்தார்கள். நானும், திரு சம்பந்தம், திரு வீரமணி போன்றவர்கள் ஐயா அவர்கள் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தோம். குடியரசுத்தலைவர் அவர்களும் இடுகாட்டுக்கு வந்து விட்டார்கள். இராணுவ மரியாதை முடிந்து, பிறகு மதச் சடங்குகள் சில நிறைவேற வேண்டியிருந்தது. அவை சுமார் இருபது நிமிடம் நடந்தது.

அந்த சமயம், சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த பெரியார் அவர்கள் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தார்கள். திடீரென்று என்ன தோன்றியதோ தெரியவில்லை, எங்களை அழைத்து தரையிலே என்னை உட்கார வையுங்கள் என்று சொன்னார்கள். சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த அந்தத் ''தலைவரை'' தரையிலே பிடித்து உட்கார வைத்தோம். எங்களை அழைத்து அந்தச் சக்கர நாற்காலியைக் கொண்டு போய் குடியரசுத் தலைவர் பக்கத்திலே நிறுத்தி,



''அவரை நான் அதில் உட்காரச் சொன்னதாகச் சொல்லுங்கள்'' என்று கூறினார்.

எங்களுக்கெல்லாம் என்ன செய்வதென்றே தோன்றவில்லை. நாற்காலியைக் கொண்டுபோய், குடியரசுத் தலைவரிடத்திலே நிறுத்தி, ''ஐயா அவர்கள் உங்களை இதில் உட்காரச் சொன்னார்கள்'' என்று கூறினோம். இதைக் கேட்டவுடன் குடியரசுத் தலைவரே அதிர்ந்து போனார்கள். குடியரசுத் தலைவர் எவ்வளவோ சொல்லியும், ஐயா அவர்கள், நாற்காலியில் உட்காரத்தான் வேண்டுமென்று கட்டளையிட்டு விட்டார்கள்.

தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோது, திரு வி.வி. கிரி போன்றவர்கள் அவரிடத்திலே சாதாரணமாக இருந்தவர்கள். ஆனால் ''ஒரு குடியரசுத் தலைவர் நின்று கொண்டிருக்கிற வேளையில், தான் நாற்காலியில் அமர்ந்திருக்கக்கூடாது'' என்பது ஐயா அவர்களின் எண்ணமாகும். இது நடந்த இடம் பெரியார் அவர்களின் வீடல்ல; இடுகாடு. எவ்வளவு பெரிய பண்புகள் இருந்திருந்தால் இப்படிப்பட்ட ஒரு எண்ணம் வந்திருக்குமென்று இன்றைக்கும் நான் எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்! வியப்பிலே மூழ்குகிறேன்!

இப்படிப்பட்ட ஒரு பெரிய தலைவரின் வாழ்க்கையை இளைய தலைமுறை அறிந்து பின்பற்ற வேண்டுமென்பது என்னுடைய அவா. உலக அரங்கில் மரியாதை மங்கிப் போயிருந்த கால கட்டத்தில், யார் யாருக்கு எப்படி மரியாதை கொடுக்க வேண்டும் என்பதைக் கற்றுத் தந்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

தந்தை பெரியார் அவர்களைப் பற்றி எத்தனையோ சம்பவங்களை எடுத்துச் சொல்ல முடியும். மனித சமுதாயம் முன்னேறப் பல அரிய செயல்கள் அவர் காலத்திலே அவரால் செய்யப்பட்டன. அவர் ஒரு ''செயல் வீரர்'' மனிதர்களை மதிக்கத்தெரிந்த''மாமனிதர்''.

அவர் நினைவு என்றைக்கும் என் நெஞ்சை விட்டு அகலாது.

வாழ்க தந்தை பெரியார்! வளர்க அவரது புகழ்!

# அமெரிக்காவில் மாண்புமிகு முதல்வர்



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அமெரிக்காவிலுள்ள நியூயார்க புருக்ளின் மருத்துவ மனையில் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதற்காக 2.9.1986 அன்று காலை விமானம் மூலம் புறப்பட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையார், முதல்வர் அவர்களது குடும்ப டாக்டர் திரு பி.ஆர். சுப்பிரமணியம், முதல்வர் அவர்களின் செயலாளர் திரு மு.பரமசிவம், இ.ஆ.ப., துணைச் செயலாளர் திரு.சம்பத், உதவியாளர் திரு மாணிக்கம், நரம்பியல் நிபுணர் டாக்டர் நரேந்திரன், டாக்டர் சந்திர மோகன், பாதுகாப்பு அதிகாரி திரு ஆறுமுகம் ஆகியோர் உடன் சென்றனர்.

சென்னை விமான நிலையத்தில், மாண்மிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களை வழி அனுப்பி வைத்தனர். விமானம் புறப்படும் முன்பு மேதகு ஆளுநர் அவர்களின் சார்பில் அவரது செயலாளர் திரு என். நாராயணன், இ.ஆ.ப., அவர்கள் மலர்ச்செண்டு ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார்.

அமெரிக்கா செல்லும் வழியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்றார். திருநெல்வேலி சட்டமன்றத்தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன்அவர்கள் டெல்லியில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். 3.9.1986 அன்று அதிகாலை மாண்புமிகு முதல்வர் அவர்களும் குழுவினரும் ஏர் இந்தியா விமானம் மூலம் அமெரிக்கத் தலைநகரான நியூயார்க்கிற்குப்புறப்பட்டனர். டெல்லி விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை வழிஅனுப்ப மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வந்திருந்தனர்.

8வது அணிசேரா நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள ஜிம்பாப்வே நாட்டின்அரோரா நகர் சென்றிருக்கும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு இராஜீவ்காந்தி அவர்கள் அங்கிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார்.

புதுடெல்லியிலிருந்து புறப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களும், குழுவினரும் 22 மணிநேர விமானப் பயணத்திற்குப் பிறகு 4.9.1986 வியாழனன்று அதிகாலை அதாவது அமெரிக்க நேரப்படி புதனன்று மாலை 4.20 மணிக்கு நியூயார்க் சென்றடைந்தார்கள்.

நியூயார்க்கில் புருக்ளின்' என்ற இடத்தில் உள்ள 'டவுன்சிப்டேட்' மெடிக்கல் சென்டர்' மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சிறுநீரக அறுவை செய்த டாக்டர் எல்லி பிரைட்மென் முதல்வரின் உடல்நிலையைப்பரிசோதித்தார். பல்வேறு விதமான மருத்துவப் பரிசோதனைகளை மருத்துவ நிபுணர்கள் நடத்தினர். முதல்வர் அவர்களின் உடல்நிலை திருப்திகரமாய் இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

டெல்லியில் இருந்து நியூயார்க் செல்லும் வழியில், துபாய், லண்டன் விமான நிலையங்களில் இந்தியத் தூதர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

நியூயார்க் நகரில் நரம்பியல் நிபுணர் டாக்டர் பிரைட்மென், டாக்டர் ஸ்ரீபாதராவ், டாக்டர் கலித்பட் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தனர். மேலும்சில மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படும் என டாக்டர்கள் தெரிவித்தனர். முதல்வர் அவர்களின் உடல்நிலை குறித்து அவருடன் சென்றுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயலாளர் திரு மு. பரமசிவம், இ.ஆ.ப., அவர்கள் அங்கிருந்து தமிழகஅரசுத் தலைமைச் செயலாளர் திரு.ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இத்தகவல்களைத் தெரிவித்தார்.





முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

# தந்தையா? மகனா?



தந்தை புகழால் மகனுக்குச் சிறப்பா, மகன் புகழால் தந்தைக்குச் சிறப்பா?

தந்தை புகழால் மகனுக்குச் சிறப்பு என்பதுதான் உலகறிந்த உண்மை. ஆனால் பண்டைத் தமிழர் இதனோடு மற்றொரு உண்மையையும் வழங்கியிருந்தனர். 'ஆந்தை' (ஆதன் தந்தை) என்ற சொல்லுக்குத் தனிச் சூத்திரம் வகுத்ததன் மூலம் தொல்காப்பியர் இதனைக் காட்டுகிறார். ஆதன் என்பவர் புகழால் அவர் தந்தையாகிய ஆந்தை இங்கே பாராட்டுப் பெறுகிறார். முதன் முதலில் கடவுளோடு நேரடியாகப் பழகிய ஆதாம் நபிகளின் தந்தையாகிய கடவுளை இப்பெயர் குறித்தது என்பர், நல்லாயர் கால்டுவெல்.

தந்தை பெரியாரின் அறிவு மகன் என்ற முறையில் அண்ணாவுக்குச் சிறப்பா, தலைசிறந்த அறிஞர் அண்ணாவைப் பெற்ற அறிவுத் தந்தை என்ற முறையில் பெருயாருக்குச் சிறப்பா என்று யாரும் கூற முடியாது!

இந்தியாவின் அரசியல் விடுதலைக்குப் பாடுபட்டது காங்கிரஸ் இயக்கம். ஆனால் இந்தியாவில், சிறப்பாகத் தென்னகத்தில் இன விடுதலை, சமுதாய விடுதலை, மொழி பண்பாட்டு விடுதலை ஆகிய எல்லா விடுதலைக்கும் பாடுபட்டு வரும் இயக்கம் திராவிட இயக்கம்.

'நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு'

-திருவள்ளுவர் இக்குறட்பாவில் ஒரு புதிய தேசிய தத்துவத்தையும் ஒரு புதிய தேசிய ஒருமைப்பாட்டுப் பண்பையும் தருகிறார். மக்கள் விரும்பும் வளத்தை அரசு நாட்டுக்குத் தருமானால், அது நல்ல நாடு, சிறப்புடைய நாடு அன்று, மக்களுக்குத் தெரியாத புதுப்புது வளங்களை அளிக்கும் நாடே சிறந்த நாடு என்பது வள்ளுவ அரசியல் தத்துவம். இதை மேலை அறிஞர் இன்று 'மக்கள் நல அரசு' ( Welfare State ) என்பர். அத்துடன் மக்களுக்குப் புதுப்புது வளங்கள் பற்றிய ஆசையை அரசு எழுப்பி வந்தால், அதுதான் வள்ளுவ தேசிய ஒருமைப்பாட்டுப் பண்பு.

இந்த இரண்டு அடிப்படைக் கொள்கைகளையும் வகுத்து, பிற்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட ஏழை மக்களும் நன்கு உணரும்படி பகுத்தறிவு முழக்கம் செய்தவர் மக்கட் பெருந்தலைவராகிய தந்தை பெரியார். அதனை ஒரு தேசிய திட்டமாக உருவாக்கி மக்களுக்கு வழங்கத் துவங்கியவர் அறிஞர் அண்ணா. ஆனால் இருவர் பண்பும் தொடர்ந்து, கலை மூலம் அப்பண்புகளை மக்கள் உள்ளத்தில் சித்திரமாகப் பதிய வைத்தவரும் அதைத் தத்தம் ஆட்சிப் பண்பாக ஆக்கி வருபவரும் அவ்விருவரின் வழிவநத பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களே.

—பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்

பெரியாரின் தொடக்கக் கால இயக்கமாகிய தன்மான இயக்கத்துல் அவருடைய விளக்கங்களுக்கு விளக்கமாக மக்கள் உள்ளத்துல் அவர் கருத்துகளைப் பதிய வைத்த பகுத்தறிவுக் கலைஞர் இருவர். அவர்களே கலைவாணர் என.எஸ்.கிருஷ்ணன், நடிகவேள் எம்.ஆர். ராதா ஆகியவர்கள். இவர்களோடு அறிஞர் அண்ணாவும் நடிகர் திலகம் சிவாஜிகணேசனும் கூட நாடகங்கள் மூலம் பெரியாரின் கருத்துக்களை நாடெங்கும் பரப்பினர். ஆனால் இந்தக் கலைஞர்களைத் தொடர்ந்து பொன்மனச் செம்மல் கலை உலகத்திலும், கருத்துலகத்திலும் ஆட்சியிலும் செய்த செயல்கள் தான் தேசிய சாதனைகளாகவும் உலகச் சாதனைகளாகவும் திகழ்ந்துள்ளன. கலைமூலம் பெரியாரும், அண்ணாவும் கண்ட முழு ஆட்சிக் கனவு மக்களுக்கு விளக்கப்பட்டது. ஆட்சி மூலம் பசுமைப்புரட்சியிலும் குடும்பக் கட்டுப்பாட்டிலும இன்னும் பல துறைகளிலும் தமிழகம் இந்தியாவின் முன்னணி முதல் மாநிலமாக மலர்ந்து வந்துள்ளது. மூன்றாவதாகக் கலை மூலமே இவ்வளவும் நடைபெற்றது என்பதைப் புரட்சித் தலைவர் ஆட்சியே உலகத்திற்கு எடுத்துக் காட்டி உலகுக்கே ஒரு புது வழி திறந்துள்ளது. இந்தியாவில் அவரது ஆட்சி, புகழின் எதிரொளியாக அமெரிக்காவில் ரீகனின் கலை ஆட்சியும், ஆந்திராவில் மாண்புமிகு முதல்வர் என். டி. ராமாராவின் ஆட்சியும் கலங்கரை விளக்கங்களாக விளங்கி உள்ளன.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியவரின் மரபு சமயத்துறையில் இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரது மரபை ஒத்தது. பெரியார், அண்ணா மரபுக்குப் பின் தொடர்பாகப் பொன்மனச் செம்மல் ஒளி விளக்கம் அமைந்திருப்பது போல, அதற்கு ஒரு மூல மரபு விளக்கமும் உண்டு. பெரியார், அண்ணாவுக்குத் தலைவராகும் முன் காந்தியடிகளின் பக்தராகவே வாழ்க்கையைத் தொடங்கியவர். உலகச் சாதனைகள் புரிந்த காந்தியடிகள், புகழின் புதிய தொடர்ச்சியே பெரியார் இயக்க மரபு ஆகும். காந்தியடிகளின் புது இயக்கமோ உலகில் பேரறிஞர் டால்ஸ்டாய், பேரருளாளர் வெஸ்லி ஆகியோர் சாதனைகள் மூலம் திராவிட இயக்கத்தைப் பண்டை உலகப் பேரறிஞராகிய திருவள்ளுவரின் கருத்துடன் இணைக்கிறது.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் வரலாறு இவ்வாறாக ஒரு பெரிய உலக வரலாற்றின் ஒருமைய ஒளிவட்டமாகத் திகழ்கிறது.

# இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

# நாக்குப் புழுக்களை அழிக்கிறது. நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்.

கால்நடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால்நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது
100 மி.லி, 500 மி.லி. மற்றும்
4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய கால்நடைக்கு
மாத்திரைகள்.




பெரிய கால்நடைக்கு
உருண்டைகள்.

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ ஃபைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க் **pfizer** கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.



# பெரியாரின் இனி வரும் உலகம்

—ஏ. பி சனார்த்தனம்

**1934**லிருந்தே பெரியாரின் சிந்தனைகளை, ஆணித்தரமான கருததுக்களை, எதிர்காலம் குறிதத எண்ணங்களை, இனி வரும உலகம் எப்படி எல்லாம் இயங்கும் என்று ஊடுருவும் தொலைநோக்குப் பேச்சை, எழுத்தை, அவரது இறுதி நாட்கள் வரை தெரிந்து, ஆராய்ந்து தமிழில், தெலுங்கில, ஆங்கிலத்தில் சென்னை முதல் டோக்கியோ வரை பெருமிதத்துடன பறைசாற்றியிருக்கிறேன.

அவருடைய தொண்டனாக, அவரது ஏட்டில் துணை ஆசிரியனாக, அவருடன பல்லாண்டுகள் பயணம் செய்து அவரது பாய் புலியாக, அவராலேயே என் திருமணமும நடைபெற்று அவரது அன்பை இறுதிவரை பெற்று, அவரது பகுத்தறிவு வழியில் நடநது, இன்னும அவரது சிறப்புக்களை நன்றியுடன் பறைசாற்றியபடி இருக்கிறேன்.

1937லிருந்தே பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரின் சீரிய புதுப்புதுச் சிந்தனைகளை, பலப்பல துறைகளில் எப்படி மாறுதல்கள் மனித வாழ்வை வளப்படுத்தும் என்பதை, வேர்ன், பெர்னாட்ஷா, எச்.ஜி. வெல்ஸ், ரசல், ஐன்ஸ்டின் போன்ற தொலை நோக்காளருடன் ஒப்பிட்டு எனக்கு தனக்கே உரிய அன்புடன் அந்நாளில் கிடைத்த ஆர்வமிக்க தம்பியாக என்னைக் காஞ்சியிலும் சென்னையிலும் தாலாட்டி, தட்டிக்கொடுத்து நான் அவைகளைப் படித்துப் பெரியாரை அழகு ஆங்கிலத்தில் கல்லூரி மேடைகளில் பேச வேணடும் என்று சொல்லித் தந்தார்.

மேற்கோள் மயக்கம், சொல் விளையாட்டு, அழகு, அணி, அடுக்கு ஏதும் இல்லாமல் எழுத்துச் சீர்திருத்தத்திலிருந்து சோதனைக் குழாய்க் குழந்தை வரை அத்தனையும் நேராக மக்கள் உடனே புரிந்து கொள்ளும்படி பெரியார் இனி வரும் உலகம் குறித்த வரைவு ( Blue Print ) தந்தார்.

பெரியாரின் கற்பனைச் சுரங்கத்திலிருந்து வெளிப்பட்ட தங்கக் கருத்துக்களை தூய்மைப் படுத்தி அழகுபடுத்தி, அடுக்குத் தாலாட்டு நடையில் அறிஞர் அண்ணா அவர்கள் தந்தார்கள்.

தனித்தனி சமையல்கட்டுகள்-ஏன்? பொதுச் சமையல் கூடம் இருந்தால் எவ்வளவு உழைப்பு, நேரம், செலவு மிச்சம்?

'அத்தனையையும் பகிர்ந்து கொண்டு, எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான வாழ்க்கை வரத்தான் போகிறது;' என்று பெரியார் முரசறைந்தார்.

ரஷ்யாவுக்குப் போய் வந்து இங்கே லெனினைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தினார்.

தோழர் மா.சிங்காரவேலர், எஸ. ராமநாதன், குத்தூசி குருசாமி, தோழர் ஜீவானந்தம் போன்ற சமதர்ம வீரர்களைத் தன் ஏடுகளில் எதிர்கால உலகம் குறித்து எழுத வைத்தார்.

குடும்பக் கட்டுப்பாடு இந்தப் பகுதியில் பெருவெற்றி பெறுவதற்குப் பெரியாரும் அவரது தோழர்களும் அந்நாளில் பட்ட பாடுதான அடிப்படை.

எதிர்காலத்திலும் பெரியாரின் சிந்தனைகள் நமக்கு வழிகாட்டுபவை என்பதைப் பெரியார் பாவட்டம், பெரியார் பொன் மொழிகள் தாங்கும் நினைவுத் தூண்கள், பெரியார் வரலாறு, குழந்தைகளுக்குப் பெரியார் வாழ்க்கைப் பாடநூல்கள், இத்தனைக்கும் பெரியார் வல்லுநர் குழு வாயிலாக, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலரைத் தலைவராக அமர்த்தி, பெரியாருக்குக் கிண்டியில் அறிவியல் கூடம் அமைக்க வழி செய்த புரட்சித் தலைவருக்குப் பெரியாரின் பேரன்பர்கள் என்றும் நன்றி செலுத்துவார்கள்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பெரியாரின் தொலைநோக்குக் கருத்துக்கள் செயல் வடிவம் பெற்று மனிதன் புதுக்கலங்களில் வேறு கோள்களில் குடியேறிய பின்னும் வழிகாட்டும்.

வாழ்க பெரியார் சிந்தனைகள்!

## நல்ல பேச்சின் நிலை

**ம**லர்மாலை மதயானை முன் வீசப்பட்டு அதன் காலில் மிதி படுவதுபோல, நல்ல பேச்சுக்குப் பொல்லாத காலம் வருவதுண்டு. முகர்ந்து, ரசித்துக் கூந்தலிற் செருகி, இன்புற்று மகிழும் மாதரிடம் மலர் சென்று பெருமையும் பயனும் பெறுவதுபோல, நல்ல பேச்சு, சுவையும் பயனும் கண்டறிந்து பெறக் கூடியவரிடம் போய்ச் சேர்வதும் உண்டு.

—பேரறிஞர் அண்ணா



# பாசம் மிக்க அண்ணா

—டாக்டர் சத்தியவாணிமுத்து

பேரறிஞர் அண்ணா அவர்களின் 77-வது பிறந்த நாள் விழாவுக்குத் 'தமிழரசு' வெளியிடும் மலரில் நானும் எழுத வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அண்ணா அவர்களின் பிறந்தநாள் இறந்தநாள் என்ற நாட்களில் மாத்திரம் நினைப்பவள் அல்ல நான். என் தாய் தந்தையருக்கு மேலாக அண்ணாவை நினைப்பவள். என்னை அரசியலில் பிரகாசிக்கச் செய்தவர். என் சமுதாய மக்கள் மத்தியில் என்னை மிக உயர்ந்த பீடத்தில் அமர்த்தியவர், எனக்காகவே அரிசனநலத்துறை என்ற ஒரு இலாக்காவை உருவாக்கி தனி அமைச்சகமாக ஏற்படுத்தியவர்.

காரணம், என்னால் என் மக்களுக்கு உயர்வளிக்க முடியும் என்று நம்பினார். அந்த நம்பிக்கை வீண் போகாமல் நானும் செய்தேன். பல நேரங்களில் எனக்கு ஆதரவும் தந்தார். அவரை இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்றும் மறக்காது.

அரசியலில் தொண்டு, தியாகம், உழைப்பு, துணிவு இவற்றிற்கெல்லாம் அண்ணா அவர்கள் மதிப்பளித்தார்கள். சுயநலம், வெளிப் பகட்டு, வீண் நடிப்பு, இச்சகம் பேசுதல் இவைகளெல்லாம் அண்ணா விரும்பியது கிடையாது.

யாராவது அண்ணா அவர்களைப் பார்க்க வந்தால் அவர்களிடம் சில மணித்துளிகள் நேரம் பேசினாலும், அவர்கள் சென்றவுடன் அவர்களைப் பற்றி முழு விவரங்கள், குண நலன்கள், எதற்காக வந்தார்கள், அவர்கள் உள் நோக்கம் என்ன என்ற பல விவரங்களை உடனே எங்களிடம் உடன் இருப்பவர்களிடம் கூறிடுவார்-சில நேரங்களில் அவர்கள் அணிந்து வந்த ஆடைகள், என்ன கரை வேட்டி, ஆபரணங்கள், மோதிரம், வாட்ச் போன்றவைகள் கூடக் கூறிடுவார். எங்களுக்கு ஆச்சரியமாகயிருக்கும். அவ்வளவு, பிறரை எடை போடுவதில் வல்லவர். எனவே தான், யாருக்கு எந்த இடம் என்று அவர் கட்சியில் வைத்திருந்தார். அவர் மனதிலும் வைத்திருந்தார். பிறரது தோற்றத்திலேயே அவர்களை மதிப்பிட்டு விடுவார்.

எல்லோரிடத்திலும் பாசமிகுந்த அண்ணனாகவே இருந்தார். எனக்கு அவரது அரவணைப்பும் அன்பும் இறுதி வரையில் இருந்தது. அவைகளை நினைக்கும் போதெல்லாம் நான் கண்ணீர் விடாமல் இருந்ததில்லை.

நல்ல வேளையாக புரட்சித் தலைவர் அவர்கள் புதிய கட்சியை அண்ணாவின் பெயரால் துவக்கி, அதற்கு அண்ணாவின் உருவம் பொதித்த கொடியினை உருவாக்கித் தந்தார்கள். இன்றேல் மக்கள் அண்ணாவை மறந்திருப்பார்கள்.

அண்ணா அவர்களின் கொள்கைகளை நித்தம் நித்தம், நிறைவேற்றி வருகிறார். ஏழை எளிய மக்கள் நம் தலைவரைத் தன் சொந்தப் பிள்ளையாகவே கருதுகிறார்கள். அதன் விளைவுதான், இன்றும் நாம் நெல்லை, அருப்புக் கோட்டையில் பெற்ற வெற்றியாகும்.



# பெரியார் ஒரு சகாப்தம்

**திருமதி சுலோசனா சம்பத்**
தலைவர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

நாடு அடிமைத் தளையில் சிக்குண்டு, அறியாமை - மூடநம்பிக்கை, பிற இழிவுகளாலே தள்ளப்பட்டு - இருண்ட சமுதாயமாக இழிந்து கிடந்த காலத்தில் அண்ணல் காந்தியடிகள் அரசியல் விடுதலைக்காகக் கொதித்தெழுந்தார். அரசியல் விடுதலையோடு சமுதாய, பொருளாதார விடுதலையும் மிக முக்கியம் எனக் கருதிய தந்தை பெரியார் அவர்கள் - சமுதாய ஏற்றத் தாழ்வுகள், அறியாமை, மூடநம்பிக்கைகளை எதிர்த்து ஆவேசப் புயலாக உருவெடுத்தார்.

தந்தை பெரியார் அவர்களின் பொது வாழ்க்கைத் தொடக்கம் என்பது தேசிய இயக்கத்திலேதான் துவங்கியது. தமிழ்நாடு காங்கிரஸ் இயக்கமே அக்காலத்தில், ஈரோட்டில் அவரது இல்லத்துத் தாழ்வாரத்தில்தான் தளர் நடைபோட்டது. 1917-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்தார். எடுத்த காரியத்தை அதன் இயல்புகளுக்கேற்ப முழு உத்வேகத்துடன் செயலாற்றுவது என்பதில் தந்தை பெரியார் அவர்கள் கண்டிப்புடன் காணப்படுவார். அப்படித்தான் காங்கிரஸ் இயக்கத்திற்கு அவர் தலைமை தாங்கிய அந்தத் தொடக்க காலத்திலும் உணர்வு பூர்வமாக விளங்கினார்.

கதர் இயக்கத்தின் முன்னோடியே தந்தை பெரியார்தான்; தாம் முரட்டுக் கதர் துணியை அணிந்ததோடு, கதர் துணி மூட்டை சுமந்து ஊர் ஊராக விற்று கதர் இயக்கத்தைத் தீவிரப்படுத்தினார்.

மது ஒழிப்பிலும் அவர் காட்டிய தீவிரம் ஈடு இணையற்றது. கள்ளுக்கடை மறியலை அவரே தொடங்கினார். முன்னுதாரணமாகத் தமது தோப்பு துரவுகளில் நெடிதுயர்ந்து நின்ற ஆயிரக்கணக்கான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். கள் இறக்குவதற்கு அவை சாதனமாகிறது என்ற கருத்தில் முதலில் தனக்குக் கடும் நட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

கள்ளுக்கடை மறியல் களத்தில் தாம் மட்டும் ஈடுபடாது, தமது துணைவியார், சகோதரி ஆகிய இல்லத்துப் பெண்மணிகளைப் போராட்டக் களத்தில் கொண்டு போய் நிறுத்தினார். அன்று 'கள்ளுக்கடை மறியல்' கிளர்ச்சி காட்டுத் தீயெனப் பற்றியெரிந்தது. அடக்க முடியாது தவித்த அன்னிய ஆட்சி, அதன் கவர்னர் மூலம் காந்தியடிகளை பம்பாயில் சந்தித்துத் தமிழ்நாட்டில் நடக்கும் கள்ளுக்கடை மறியலை வாபஸ் பெறச் செய்யுமாறு கோரியது.

ஆனால், காந்தியடிகளோ- அதற்கு அளித்த பதில் : "தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் கிளர்ச்சியை வாபஸ் பெறுவது என்பது என் கரத்தில் இல்லை. நாகம்மை - கண்ணம்மை என்ற இரு பெண்மணிகள்தான் முடிவு செய்ய முடியும்" என்று சொன்னார்.

அந்த அளவிற்குப் பெரியார் தனது குடும்பத்தையும் பக்குவப்படுத்தி வைத்திருந்தார். 'சொல் வேறு - செயல் வேறு' என்பது தந்தை பெரியார் அவர்களுக்குக் கட்டோடு பிடிக்காது. சொல்வார் - சொல்வதையே செயல்படுத்துவார். தாம் மட்டும் சீர்திருத்தவாதியாக இருந்துகொண்டு, குடும்பத்தார் எப்படியும் இருக்கலாம் என்று எண்ணமாட்டார். குடும்பத்தாரும் அந்தக் கொள்கைப்படி நடக்க வேண்டும் என்பதனை - வற்புறுத்தலால் அல்ல; உணர்த்திச்

சீர்திருத்திப் பக்குவப்படுத்தி முழுமையாகத் தம்மைச் சீர் திருத்திக்கொண்டே நாட்டையும் சீர்திருத்தக் களத்தில் இறக்கினார்.

சமூக சீர்திருத்தம் பற்றி உலக மேதைகள் பலர் கருத்துக்களைக் கூறியதுண்டு; இங்கர்சால் முதல் பெர்னாட்ஷா வரை மேதைகள் இக்கருத்துக்களை நூல்களாக வடித்ததுண்டு; ஆனால், அத்தோடு அவர்கள் பணி முடிந்தது.

தந்தை பெரியார் ஒருவர்தான் சமுதாய சீர்திருத்தப் புரட்சிக் கருத்துக்களை எடுத்து வைத்ததோடு அதனை நடைமுறைப்படுத்த இயக்கம் ( Movement ) கண்டார். காடு மேடு சுற்றினார்; கடும் பயணம் மேற்கொண்டார்; இழிவான எதிர்ப்புகளையும், ஏளனங்களையும் தாங்கினார்.

பெரியார் ஒரு சகாப்தம் — இதனை வெறும் வார்த்தைகள் அளவில் தள்ளிவிட முடியாது. தந்தை பெரியார் அவர்கள் தோன்றியிருக்காவிடில் - தமிழகத்தின் நிலை என்னவாகியிருக்கும்; சமுதாயம் எங்கே தள்ளப்பட்டிருக்கும் என்பதனைக் கண நேரம் உள்ளசித்தியோடு சிந்தித்தால்தான் உண்மை தெரியும்.

இன்று, இந்தச் சமுதாயம் நாகரிகம் பெற்றிருக்குமா? சாதி மதக்கொடுமைகள் நீங்கியிருக்குமா? சனாதனிகள் ஆதிக்கம் மறைந்திருக்குமா? ஏற்றத் தாழ்வுகள் நீங்கியிருக்குமா? இவ்வளவு பேர் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வி-உத்யோக வாய்ப்புகளைப் பெற்றிருக்க முடியுமா?

வடக்கே இன்னமும், பல மாநிலங்களில் பகுத்தறிவுக் கதிர்களே பரவவில்லை. மதக் கொடுமைகள், மதக் கலவரங்கள் அதனால் ஏற்படும் அமளிகள், கொலைகள், பயங்கரவாதம் தலைவிரித்தாடும் நிலை;இராணுவம் அல்லவா அழைக்கப்படுகிறது ஆனால், தமிழகத்தில் அந்த நிலை இல்லை; காரணம், தமிழர்கள் - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரால் பக்குவப்படுத்தப்பட்ட தமிழகம்! இதனை ஒப்புணர்ந்து நோக்கினால் உண்மை புரியும்.

தந்தை பெரியார் அவர்களுக்குப் புரட்சித்தலைவர் அரசு உன்னதப் பெருமைகளை ஆக்கித் தந்திருக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் பெயரிலே அவர் தோன்றிய ஈரோட்டுத் திருநகரைத் தலைநகராக்கித் தனி மாவட்டம் கண்டது புரட்சித் தலைவர் அரசு.

தந்தை பெரியார் வலியுறுத்திய எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறையாக்கியது புரட்சித் தலைவர் அரசு.

தந்தை பெரியார் அவர்களது பிறந்த நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுதும் - 'நாடெங்கெனும் அரசு விழாக்களாகக் கொண்டாடியது புரட்சித் தலைவர் அரசு.

பெரியார் நினைவு போற்றும்-நினைவுச் சின்னங்கள்; பண்பாட்டு மையங்கள். இப்படி எண்ணற்ற ஏற்றமிகு ஏற்பாடுகள் - தந்தை பெரியார் நினைவு போற்றும் சிறப்புமிகு செயல்கள்.

கால காலங்களுக்குப் பெரியார் துணை நிற்பார் - அவர்தம் புரட்சிக் கருத்துக்களால்! அந்த ஈட்டி முனைக் கருத்துக்கள் உள்ள வரை தமிழகம் வாழும், உயரும்! உன்னதம் பெறும்!

---


# டான்சி

## தரமேன்மையான பொருட்களுக்கு நம்பகமான அறிமுகமான பெயர்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும், அலுவலகங்கள், இல்லங்கள், தொழிற்கூடங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரித்து வழங்குவதில், நாடு முழுவதிலும் பொதுத்துறையில் டான்சி தனித் தன்மையுடன் விளங்குகிறது.

- கனரக மற்றும் இலகு எஃகு கட்டுமானங்கள்.
- முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண்ணலைக் கோபுரங்கள்.
- தொழிற்சாலைக்கான இயந்திரங்கள்.
- இல்லங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கான உறுதிமிக்க பாதுகாப்புப் பெட்டிகள், எஃகு மற்றும் மர பர்னிச்சர்.
- வார்ப்படக் குழாய்கள், அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.
- ஆழ்கிணறு கை குழாய்கள்.
- பிரஞ்சு பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.



**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014.

தொலைபேசி : 82161 தந்தி : TANSI டெலக்ஸ் : 41-7496 TNSI

DIPR/86 (R)

# சலுகை வட்டி
# கடன் உதவித் திட்டம்



**குறிக்கோள்**

கிராமம் மற்றும் நகர்புறத்தில் உள்ள நலிந்த பிரிவினர் ஆதி திராவிடர் போன்றவர்களுக்கு வாணிபம் மற்றும் சிறு தொழில் செய்வதற்கு கடன் உதவி அளித்து முன்னேற உதவுதல்.

**கடன் பெற தகுதி**

அ. ஆண்டு வருமானம் ரூபாய் இரண்டு ஆயிரத்திற்குட்பட்ட கிராமப்புற மக்கள்.

ஆ. ஆண்டு வருமானம் மூவாயிரத்திற்கு குறைவாக உள்ள நகர்ப்புற மக்கள்.

இ. மலை ஜாதியினர், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதி திராவிடர்.

**கடன் தொகை**

அதிகபட்ச கடன்

| | |
|---|---|
| காலக் கடன் | ரூ. 5,000 |
| நடைமுறை மூலதனம் | ரூ. 1,500 |
| | ரூ. 6,500 |

**தவணை**

36 மாதங்கள்

**வட்டி விகிதம்**

4%

**தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்**

மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
வட்டார வளர்ச்சி அலுவலர்

**சாதனை**

30.6.1985 வரை, 4.07 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் தொகை நிலுவை ரூ. 37.90 கோடியாகும்.

நலிந்தோர் வாழ்வு மலர
அரசும் கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளும் கடனுதவி அளிக்கின்றன
பயனடைவீர்!




நிருவன நிதித்துறை சென்னை 600 009.



# ஈரோட்டுச் சிங்கம்!



கவிஞர் ஆற்றலரசு

ஞானவுரை தந்துநின்ற சித்தன்—உயர்
ஞாலமிதில் வந்துதித்த புத்தன்—ஒளி
ஞாயிறென வையகத்தில்
ஞானியாக வாழ்ந்தவரே
பெரியார்—ஈரோட்டுக்(கு)
உரியார்!

ஞானமிருள் கொண்டிருப்பின் மூடம்—அஞ்
ஞானமதை நீக்கிநின்ற பாடம்—நீல
வானமீது மின்னுகின்ற
வலியகதிர் ஒளியெனவே
பிறந்தார்—செயலில்
சிறந்தார்!

புரட்சிக்குயிலைப் பாடவைத்த தென்னன்—அறிவுப்
புத்தகமாய் மின்னிநின்ற பொன்னன்—தீய
புரட்டுகளை உருட்டல்களை
புல்லர்களின் ஆணவத்தை
சாய்த்தான்—நஞ்சை
மாய்த்தான்!

திரட்டிவைத்த செல்வமெனத் திகழ்ந்தார்—தமிழர்
திறமையை நன்றுயர்த்திப் புகழ்ந்தார்!—நம்மை
மிரட்டிவந்த இருளதனை
மிரளும்படி செய்துநின்ற
தலைவன்—பண்ணில்
புலவன்!

குற்றங்களைக் கண்டுரைத்த தீரன்—சமூகக்
குறைகள்தமை நீக்கவந்த வீரன்—நிலா
முற்றமதில் ஆயிரமாம்
முழுநிலவைக் கண்டுயர்ந்த
ஞானி -சுறுசுறுப்புத்
தேனீ.

கைத்திறனால் மடமைதனை எதிர்த்தார்—புவியில்
கைம்பெண்ணின் மறுமணத்தை உதிர்த்தார்—என்றும்
கயவர்களை மாய்ப்பதற்குக்
காலமகள் ஈன்றளித்த
தங்கம்—ஈரோட்டுச்
சிங்கம்!

கைவல்ய சாமிஇவர் ஆசான்—இவன்
கைமாறாய் ஏதும் வேண்டிப் பேசான்—நிதம்
கைகாட்டி எளியோர்துயர்
களைந்திங்கு நன்மைதந்த
சாமி—இராம
சாமி!



## "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் — இனிய காட்சிகள் நிறைந்த தமிழகத்திற்கு உங்களை அழைக்கிறது"



ARIES/DIPR

பளிச்சென வீசிடும் சூரியனும், எங்கும் நிறைந்திடும் பசுமையும், சில்லென வீசிடும் தென்றலும் நிறைந்த தமிழ்நாடு. பார்புகழ் பண்பாடு, கலை, மரபு — யாவும் கலையார்வத்துக்குக் களிப்பூட்டும் அம்சங்கள். வைகறைப் போதினில் ஒலித்திடும், அதன் ஆயிரமாயிரம் ஆலயமணியோசைகள் உங்களை வரவேற்கும் பாக்கள். அலைகள் வீசிடும் கடற்கரைகளும், அமைதி தவழும் நீர்க்கழிகளும், உங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மயங்கவைத்திடும். பனிமேகங்கள் சூழும் அழ்கிய மலைக் குன்றுகளும், இயற்கையன்னை அளித்திட்ட அரிய வனவிலங்குகளும் உங்களை மகிழ்வூட்டி ஆட்கொள்ளும். உற்சாகமும்,கனிவும் நிறைந்த விடுதிகளும், அறுசுவை உணவும், உல்லாசம் நிறைந்த மக்களும் உடைய தமிழ்நாடு.

**உணவு விடுதிகள், வாகன இல்லங்கள், இளைஞர் விடுதிகள் போன்ற வசதிகள் பெருக்கி விருந்தோம்புதலின் முன்னணியில் நிற்கும்**

**'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' — வழங்கிடும் சுற்றுலாக்கள் :**

★ ஏழுநாள் தமிழகச் சுற்றுலா —சனிக்கிழமைதோறும் சென்னையை விட்டுப் புறப்படுகிறது.

★ ஏழுநாள் தென்னிந்திய சுற்றுலா — சனிக்கிழமை தோறும் சென்னையை விட்டுப் புறப்படுகிறது.

★ வாரக்கடைசி சுற்றுலா — தஞ்சை, வேளாங்கண்ணி, நாகூர், திருநள்ளாறு, பூம்புகார், வைத்தீஸ்வரன் கோயில், சிதம்பரம், பிச்சாவரம், பாண்டிச்சேரி — பிரதி வெள்ளிக்கிழமை தோறும் புறப்படும் (இரண்டு நாட்கள்).

★ திருப்பதி சுற்றுலா — எல்லா நாட்களிலும் (குளிர்சாதன அல்லது சாதாரண ஊர்திகள்)

★ மாமல்லபுரம் சுற்றுலா — எல்லா நாட்களிலும்.

★ சென்னை நகர் காணும் சுற்றுலா — எல்லா நாட்களிலும்.

★ முட்டுக்காடு படகுத்துறை கண்டு திரும்பல் — சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்.

★ மாமல்லபுரம் கண்டு திரும்புகையில் முதலைப்பண்ணை, முட்டுக் காடு படகுத்துறை — எல்லா நாட்களிலும்.

★ நகரச்சுற்றுலா — வண்டலூர் அறிஞா அண்ணா உயிரியல் பூங்கா (எல்லா நாட்களிலும்).

★ சக்தி சுற்றுலா — மேல்மருவத்தூர், மாங்காடு மற்றும் திருவேற்காடு கண்டு திரும்பல் (செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு தோறும்).

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகங்கள், வாகன இல்லங்கள், இளைஞர் விடுதிகள், கடற்கரை இல்லங்கள் மற்றும் ஓய்விடங்கள் ;

★ கோவை ● மதுரை ● சிதம்பரம் ● ஓகேனக்கல் ● கன்னியாகுமரி ● இராமேஸ்வரம் ● தஞ்சை ● திருச்செந்தூர் ● திருச்சி ● கோடைக்கானல ஊட்டி ● ஏற்காடு ● கிருஷ்ணகிரி ● ராணிப்பேட்டை ● உளுந்தூர்பேட்டை ● மாமல்லபுரம் ● பிச்சாவரம்

★ தொலைநோக்காடி இல்லங்கள் — கோடைககானல், தொட்டபெட்டா மற்றும் ஏற்காட்டின் தொலைதூர அழகுக் காட்சிகளைக் கண்டு களித்திட.

★ சென்னையில் — ஊர்தியில் அமர்ந்துண்ணும் உணவகம்.

★ ஊட்டியில — சிறுவர் இரயில் வண்டி, காபிககூடம், மற்றும் வீடியோ விளையாட்டுக்கள். ★ குளிர்சாதன வசதிகள் பொருந்திய மற்றும் பொருத்தப்படாத அம்பாசடர் மற்றும் டாட்சன் ஊர்திகள்.

மேலும் விவரங்கள் பெற்றிட :

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.,**

(தமிழக அரசின் பொறுப்பேற்பு)

143, அண்ணாசாலை, சென்னை - 600 002.

தொலைபேசி : 849803.

# அறிஞரைக் குறித்து அறிஞர்கள்




அண்ணா துரை இம் மதிப்புமிக்க மாமன்றத்தின் மேலவையில் உறுப்பினராக இருந்தார். மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று விலகிச் சென்று தமிழ் நாட்டின் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையிலிருந்த உறவு முறையில் அவர் நடுநிலையோடு நடந்து கொண்டார். மாறுபட்ட அரசியல் கட்சியில் இருப்பினும்கூட அதை அவர் வெளிக்காட்டவில்லை. அவர் சிறந்த நாட்டுப்பற்றாளர், புகழ்மிக்க இந்தியர்.

**—திருமதி இந்திராகாந்தி**
**முன்னாள் இந்தியப்பிரதமர்**

காலஞ்சென்ற தலைவர் திரு அண்ணாதுரை மிகுந்த கட்சிப் பற்றுடன் ஒரு கட்சியையே அமைத்து அது மக்களின் ஆதரவைப் பொதுத் தேர்தல்களில் பெறக் கூடிய சக்தியை அதற்கு அளித்த போதிலும் மற்ற அரசியல்வாதிகளிடம் சுமுகமாகவே பழகி வந்தார். அவரே குறிப்பிட்டதுபோல் நாகரீக அரசியலுக்கு வழி காட்டினார். தமிழில் மிகுந்த பற்றுக் கொண்டவர். அதோடு ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். அவர் இளைஞர்களைச் சிறுவயதிலிருந்தே கவர்ந்தது இனிமையும் வல்லமையும் நிறைந்த பேச்சுத்திறனால்தான். எழுத்திலும் அறிஞர் அண்ணா வல்லவராக இருந்தார். பல்லாண்டுகளாக அவரும் நானும் ஒரே மேடையில் சந்தித்த போதெல்லாம் கருத்து வேற்றுமை எங்களுக்குக் குறுக்கே நிற்க இடம் கொடாமல் ஒற்றுமையைக் காட்டும் வகையிலேயே அவர் உரையாற்றியது என் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது.

அவரும் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் கூட ஆகவில்லை என்றாலும், இந்தக் குறுகிய காலத்தில் திரு அண்ணாதுரையின் உயர்ந்த பண்பாடு மக்கள் அனைவரின் பாராட்டுதலை ஈர்த்தது. தம் ஆட்சியில் தவறுகள் ஒன்றும் நடைபெறக் கூடாது என்ற கவலை அவருக்கு எப்பொழுதும் உண்டு. மாறுபட்ட கருத்துடையவர்களாயினும் பிறரின் பெருமையை உணர்ந்து பாராட்டுவதில் அவர் தலைசிறந்த நல்ல மனிதர் என்பதை எடுத்துக் காட்டியது.

**— எம். பக்தவுத்சலம்**
**தமிழக முன்னாள் முதல்வர்**

தண்ணார் தமிழ்தழைக்கச் சாந்திச்
சிறைசார்ந்த
பண்ணார் தமிழ்சோலைப் பைங்கிளி
யாம்''அண்ணா''
மறைந்தா ரிலையேஇம் மாந்தருளம்
எல்லாம்
நிறைந்தாரே என்றும் நிலைத்து.

**— திருமுருக கிருபானந்தவாரியார்**

அண்ணா துரையென்னும் அண்ணல்
தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழி
யில்—பண்ணாவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு
நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு.

**— திரு.வி. கலியாணசுந்தரனார்**

திருவாளர் சி.என். அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவர்களைத் தெரியதவர் யாரும் இரார்.

இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உள்ர். எனில், எழுத்திலும், பேச்சிலும் பழுத்த மொழி ஆட்சியிலும் திறனுடையார் மிகச் சிலரே! அத்தகைய நல்ல நடை வல்லார்தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையார் இவர். தமிழினிலோ, அமிழ்துமிழும்

சொல்வளமும், உணர்வெழுப்பும் தொடர்ச் செறிவும், குரவரிடம் கல்லாமல் தான் பயின்று திறம் பெற்ற சொல்லின் செல்வர்.

தமிழ் உயர்வும், தமிழர் தமது உரிமையையும் பெற ஊன்றும் மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராவார். முடிசூடா மன்னனென இளந்தமிழர், எழுத்தாளர் புகழ் புலவர்.

—நாவலர் ச. சோமசுந்தரபாரதியார்

இளந்தமிழகத்தில்-எழுகின்ற தமிழகத்தில் -இன்று 'அண்ணா' என்று அருமையாக அழைக்கப்படுகின்றவர் தோழர் திரு அண்ணாதுரை. அவர் 'திராவிடநாட்'டின் ஆசிரியர். ஆயிரம் மேடையேறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணாதுரை கலையறிந்தவர்; தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர்.

தமிழர் வாழவேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெரும் குறிக்கோளுடைய 'அண்ணா அவர்கள் நீடுழி வாழ்க' என வாழ்த்துகிறேன்.

—சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை

திருச்சிராப்பள்ளியில் 'ஓர் இரவு'என்னும் நாடகத்தைப் பார்த்தேன்; பார்த்ததன் பயனாக, "இதோ ஒரு பெர்னார்ட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார். இப்ஸனும் இருக்கிறார். இன்னும் கால்ஸ்வொர்த்தியும் கூட இருக்கிறார்"என்று தோன்றியது.

திராவிடக் கட்சி-சுயமரியாதைக் கட்சி-ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலைசிறந்து விளங்குகிறவர் திரு சி.என். அண்ணாதுரை அவர்கள். அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். சொற்பொழிவு என்றால் இது வல்லவா சொற்பொழிவு. தட்டித் தடுமாறிச் சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே என்று எண்ணத் தோன்றும்.

— 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி



அரசியலோடு நாகரிகத்தை - அரசியலோடு நாணயத்தை - அரசியலோடு நல்ல நோக்கத்தை -அரசியலோடு சனநாயகத்தை அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை இணைத்துத் தந்த நல்ல சனநாயகவாதி அண்ணா அவர்கள்.

நல்ல உள்ளத்தால் அரசியல்வாதி ஆவது இயற்கை. ஆனால் அண்ணா அவர்கள் கடவுள் தன்மை படைத்தவராகவே விளங்கினார். அன்பு அரவணைப்பு-பாசத்தினால் தம்மோடு இணைந்தவர்களையெல்லாம் உடன் பிறப்புக்களாக் மாற்றிய தலைவர் அண்ணா அவர்கள்தான் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

மக்களுடைய எண்ணத்தை அவர் புறக்கணிக்காமல் ஒரு விதத்தில் அதிலும் உண்மைகள் இருக்குமென்றும் அதையும் கேட்டு எண்ணிப் பார்த்தார். அவர்களையும் மதித்தார்; அதனால்தான் அவர்களும் மரியாதை செலுத்துகிறார்கள்.

— காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப்

இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்குச் செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவிதக் கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை "சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்துப் புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை" எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

— ப. ஜீவானந்தம்

உருவத்தில் தமிழன்; உயர்குணத்தில் தமிழன்; அன்பு எனும் பண்பில் தமிழன்; அடக்கத்தில் தமிழன்; ஆண்மையில் தமிழன் நம் அண்ணா. பரந்த நெற்றி, குறுக்கான மெல்லிய மீசை, விசாலமான முகம், கட்டுமஸ்தான உடற்கட்டு, பந்தயக் குதிரை போன்ற விறுவிறுப்பான நடை, பணிவான நடவடிக்கை, வீர உள்ளம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் தோழர் அண்ணாதுரை.

—கலைவாணர் என்.எஸ்.கே.

# அண்ணாவின் வாழ்விலே.



**(15.9.1909—3.2.1969)**

**1909** செப்டம்பர் 15.காஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் தோற்றம். தந்தையார் நடராசர். தாயார் பங்காரு அம்மையார்.

**1914** ஐந்து வயதில் பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து பள்ளியிறுதித் தேர்வுவரை அதில் பயின்று தேர்வடைதல்.

**1927** பள்ளிப் படிப்பிற்குப்பின் சிறிதுகாலம் காஞ்சி நகராட்சி அலுவலகத்தில் எழுத்தர் பணி.

**1928** பிற்பட்ட வகுப்பினர்க்குரிய சலுகை பெற்றுச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் சேர்தல்.

**1930** பி.ஏ. ஆனர்சு வகுப்பில் சேர்தல். ராணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக அண்ணா அடைதல். சென்னையில் புதிதாக அமைக்கப் பெற்ற சுயமரியாதை இளைஞர் மன்றக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல்.

**1931** 'தமிழரசு' என்னும் ஏட்டில் கட்டுரை எழுதுதல்.

கல்லூரிப் பொது மன்றத்தின் செயலாளராக அண்ணா தேர்வு. பல பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெறுதல்.

**1933** கல்லூரிப் பொருளியல் மன்றத் தலைவராக விளங்குதல்.

**1934** பி.ஏ. ஆனர்சு தேர்வில் வெற்றிபெறல்.

**1935** காலந்தாழ்த்த முறையில் எம்.ஏ. பட்டம்பெறல்.

சென்னை கோவிந்தப்ப நாயக்கர் நடுத்தரப் பள்ளியாசிரியராகப் பணியேற்றல்.

தந்தை பெரியாரைத் திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டில் சந்தித்தல்.

சென்னை பெத்துநாயக்கன்பேட்டைத் தொகுதியில் நீதிக்கட்சியின் சார்பில் மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைதல்.

ஒய்.எம்.சி.ஏ.வின் சார்பில் நடைபெற்ற 'வார்தா' கல்வித்திட்டத்தைப் பற்றிய விவாதத்தில் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரின் முன்னிலையில் அண்ணா கலந்து உரை நிகழ்த்துதல்.

**1937** 'நவயுகம்' என்ற கிழமை இதழ் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரல்.

**1938** இந்தி தமிழ்நாட்டில் கட்டாய பாடமாகத் திணிக்கப்பட்டதை எதிர்த்து முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்தல். போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அண்ணா 4 மாதச் சிறைத் தண்டனையடைதல்.

**1939** தந்தை பெரியாருடன் நெருங்கிய தொடர்பு கொள்ளல்.

நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராதல்.

டிசம்பர் 10. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற இயக்கம் தொடங்குதல்.

1940 திருவாரூர் நீதிக்கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற தீர்மானத்தை அண்ணா வழிமொழிதல்.

அண்ணாவின் முதல் புதினமான குமாஸ்தாவின் பெண் அல்லதுகொலைகாரியின் குறிப்புகள் என்னும் நூல் வெளியாதல்.

1942 தம் சொந்தக் கிழமை ஏடான 'திராவிடநாடு' இதழை அண்ணா தொடங்குதல்.

1943 அண்ணா தம் முதல் நாடகமான 'சந்திரோதயம்' என்னும் நாடகத்தை அரங்கேற்றித் தாமும் அதில் நடித்தல்.

1944 சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் கட்சியின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என்று மாற்றும் தீர்மானத்தை அண்ணா முன்மொழிதல்.

1945 திருச்சி திராவிடர்கழக முதல் மாநாடு 'கருஞ்சட்டைப்படை' தீர்மானம்: பெரியார்-அண்ணா கருத்துமாறுபாடு.

1946 கழகச் செயற்குழுக்கூட்டம்-அண்ணா கருஞ்சட்டை அணிந்து கொண்டு அதில் கலந்து கொள்ளுதல்.

1947 ஆகஸ்ட் 15. நாட்டு விடுதலை நாளை துக்கநாளாகக் கொண்டாட வேண்டுமென்ற கருத்தை வெளிப்படையாக அண்ணா மறுத்ததால் இருவரிடையே பிளவு தோன்றுதல்.

1948 சூலை 17. தமிழ்நாட்டில் மீண்டும் இந்தி கட்டாய பாடமாக ஆக்கப்படுதல், அதை எதிர்த்துப் போராடி அண்ணா சிறைசெல்லல்.

அக்டோபர் 23-24. பெரியாருடன் மாறுபட்ட பிறகும் ஈரோட்டுத் திராவிடர் கழகத்தனிமாநில மாநாட்டிற்கு அண்ணா தலைமை தாங்குதல்

1949 சூலை 9. பெரியார்-மணியம்மை திருமணம். திராவிடர் கழகத்தில் பிளவு, அண்ணா தலைமையில் முற்போக்குவாதிகள் பிரிதல்.

ஆகஸ்ட் 10. புதிய நிலையை விளக்க 'மாலைமணி' நாளிதழ் தொடங்கப்பெறுதல். ஆசிரியர் அண்ணா.

செப். 17. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாள்-அண்ணா பொதுச் செயலாளராதல்.

1950 மே. சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியல் நடத்துதல்.




செப். 18. 'ஆரிய மாயை' என்னும் நூல் எழுதியமைக்காக அண்ணாவுக்குச் சிறைத் தண்டனை.

1951 சென்னையில் தி.மு.கழக முதல் மாநில மாநாடு.

1953 சூன் 15. கட்சி அலுவலக ஏடான 'நம் நாடு' நாளிதழ் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரல்.

சூலை 15. மும்முனைப் போராட்டம்-நேருவுக்குக் கருப்புக்கொடி - 'டால்மியாபுரம்' என்ற பெயர் 'கல்லக்குடி' யென மாறவேண்டுமென்ற போராட்டம்-புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம். அண்ணா 3 மாதச் சிறைத்தண்டனையேற்றுச் சிறை செல்லுதல்.

அக். 2. கழகத் தோழர்கள் நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டல்.-

1956 மே 17-20. திருச்சி மாநில மாநாடு தி.மு.க.-பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று பொதுமக்கள் அறிவிப்பு.

1957 பிப். காஞ்சித் தொகுதியிலிருந்து அண்ணா சட்டமன்றத்திற்குத் தேர்வு

1958 சன. 6. நேருவுக்குக் கருப்புக் கொடி-அண்ணா 5 நாள் சிறை.

ஏப். 23 காவல்துறை தடையை மீறிய குற்றத்திற்காக அண்ணாவும் மற்றும் பதின்மரும் சிறைசெல்லல்.

1959 பிப். சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. வென்று மாநகராட்சியைக் கைப்பற்றுதல்.

1960 சூலை 31. கோடம்பாக்கம் 'அண்ணா நகரில்' இந்தி எதிர்ப்பு மாநாடு.

ஆக. 'இந்திஎதிர்ப்புப்போர்' அறிவிப்பு

1961 திருப்பரங்குன்றத்தில் மூன்றாவது மாநில மாநாடு.

**1962** பிப். பொதுத் தேர்தலில் அண்ணாவுக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டாமை. நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக அண்ணா, தேர்ந்தெடுக்கப் பெறல்

**1962** மே. 1. நாடாளுமன்றத்தில் அண்ணாவின் முதல் முழக்கம்.

சூலை 19. 'விலைவாசி உயர்வுப் போராட்டம்' அண்ணா சிறை செல்லல்.

அக். 24. அண்ணா விடுதலை.

**1963** நவ.17.இந்தி எதிர்ப்புப்போராட்டம் அண்ணா ஆறுமாதச் சிறைத்தண்டனை பெறல்.

**1965** சன. 26. இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து 'குடியரசு நாளை'த் துக்க நாளாகக் கொண்டாடுமாறு அண்ணா கூறியதால் சிறைபுகல்.

சூலை. மலேசியா, சப்பான், சிங்கப்பூர் போன்ற கீழை நாடுகளில் அண்ணா சுற்றுப் பயணம்.

**1967** சன. சென்னை விருகம்பாக்கம் மாநாடு. காங்கிரசைப் பொதுத்தேர்தலில் வீழ்த்துவதற்குகாக அண்ணா எதிர்க் கட்சிகளைக் கூட்டிக் கூட்டணி அமைத்தல்.

பிப். பொதுத் தேர்தல் வெற்றி.
மார்ச். 6. அண்ணா தலைமையில் முதல் அமைச்சரவை பதவி யேற்றல்.

ஏப்.14. 'படியரிசித் திட்டம்' நடைமுறைக்கு வரல்.

சூலை 18. 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம் சென்னைச் சட்டமன்றத்தில் நிறைவேறல்.

**1968** சன.3. சென்னையில் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டை அண்ணா சீரும் சிறப்புமாக நடத்தி வைத்தல்..

ஏப். 15. அமெரிக்க யேல் பல்கலைக் கழகத்தில் ''சப் ஃபெலோசிப்'' பெற்று அண்ணா அமெரிக்கா முதலிய மேலை நாடுகட்குச் செல்லல்.

மே. 13. உலகச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்புதல்.

செப்.10. புற்று நோய்ச் சிகிச்சைக்காக அண்ணா அமெரிக்கா செல்லல்.

செப்.15, அண்ணா 60ஆம் ஆண்டுத் தொடக்க விழாவைத் தமிழகம் முழுவதும் வெகு சிறப்புறக் கொண்டாடுதல்.

நவ.6.அறுவை வெற்றியுடன் செய்யப் பெற்றுச் சென்னை திரும்புதல்.







டிச. 1. 'தமிழ்நாடு' பெயர் மாற்ற விழாவில் கலந்து கொண்டு அறுவைக்குப் பின்பு முதல் சொற்பொழிவு நிகழ்த்துதல்.

நீதிக்கட்சியின் பொன்விழாவில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் அண்ணா பேசினார். அதுவே அவர் ஆங்கிலத்தில் கடைசியாக ஆற்றிய சொற்பொழிவு.

**1969** சன.14. 'கலைவாணர் சிலைத்திறப்பு விழா'வில் அண்ணா கலந்து கொள்ளுதல். அவர் கலந்து கொண்ட இறுதிப் பொது நிகழ்ச்சி.

சன.20. புற்று நோயின்வலி தாளாது அடையாறு மருத்துவ மனைக்குச் செல்லல்.

சன.25. இரண்டாம்முறையாக அமெரிக்க டாக்டர் மில்லர் அண்ணாவிற்கு அறுவைச்சிகிச்சை அளித்தல்.

பிப்.2. நள்ளிரவு 12.22 மணி 'தமிழ்ப் பேரொளி' அணைந்தது.

பிப். 3. அண்ணாவின் பொன்னுடல் மக்கள் பார்வைக்காக இராசாசி மண்டபத்தில் வைக்கப்பெறுதல்.

பிப்.4 அடக்கத்திற்காக அண்ணாவின் உடல் ஊர்வலமாக மெரீனா கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பெறுதல். சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்திற்கு முன்னால் கம்பர் சிலைக்குப் பின்னால் உடல் அடக்கம் செய்யப்படல். ''எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'' என்ற சொற்றொடரைத் தாங்கியுள்ள கல் பொறிக்கப்பெற்ற பளிங்கு மேடையினடியில் 'தமிழ்ப் பெரொளி' மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துள்ளது.

**1980** செப்டம்பர் 16 காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா வசித்து வந்த இல்லத்தை தமிழக அரசு விலைக்கு வாங்கி நினைவு இல்லமாக்கியது.

**1985** செப்டம்பர்15 திண்டுக்கல்லைத் தலை நகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் தொடங்கப்பட்டது.

—நன்றி : 'தமிழ்ப்பேரொளி'
(சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு)

# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப் பெற தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை. மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள். மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன் படுத்திக்கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில் பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

# விஜய்
## உரங்கள்

# 17-17-17




# 14-28-14




# டி.ஏ.பி




# யூரியா




பருத்தி — ஏக்கருக்கு/கிலோ

| வகைகள் | அடியுரம் | | | மேலுரம் |
|---|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| எம்.சி.யு. 7 | 70 | — | — | 25 |
| எம்.சி.யு. 5, 9 எம்.சி.யு. 5 வி.டி. சுவின், டி.என்.பி-1 | 95 | — | — | 35 |
| ஜெயலட்சுமி | 140 | — | — | 55 |
| அல்லது | | | | |
| | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| எம்.சி.யு. 7 | 40 | 15 | 10 | 30 |
| எம்.சி.யு. 5,9 எம்.சி.யு. 5 வி.டி. சுவின், டி.என்.பி-1 | 60 | 20 | 15 | 35 |
| ஜெயலட்சுமி | 85 | 10 | 20 | 70 |
| அல்லது | | | | |
| | விஜய் டி.ஏ.பி. | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| எம்.சி.யு. 7 | 25 | 15 | 20 | 25 |
| எம்.சி.யு. 5,9 எம்.சி.யு. 5 வி.டி. சுவின், டி.என்.பி-1 | 35 | 20 | 25 | 35 |
| ஜெயலட்சுமி | 50 | 15 | 40 | 70 |



மிளகாய் — ஏக்கருக்கு/கிலோ

**அடியுரம்**
விஜய் 17-17-17 — 105 கிலோ
**மேலுரம்**
விஜய் யூரியா — 80 கிலோ*

அல்லது

**அடியுரம்**
விஜய் 14-28-14 — 65 கிலோ
விஜய் யூரியா — 20 கிலோ
பொட்டாஷ் — 15 கிலோ
**மேலுரம்**
விஜய் யூரியா — 80 கிலோ*

அல்லது

**அடியுரம்**
விஜய் டி.ஏ.பி. — 40 கிலோ
விஜய் யூரியா — 25 கிலோ
பொட்டாஷ் — 30 கிலோ
**மேலுரம்**
விஜய் யூரியா — 80 கிலோ*

* விஜய் யூரியா 80 கிலோவை நட்ட 30-ஆம் நாள் 30 கிலோவும், 60-ஆம் நாள் 25 கிலோவும், 90-ஆம் நாள் 25 கிலோவும் பிரித்து இடவும்.



## சமச்சீர் உரமிட
# விஜய்



MFL-2006

மேலும் விவரங்களுக்கு :
வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**
மணலி, சென்னை 600 068

VIJAY
MADRAS FERTILIZERS


அண்ணா மாவட்ட
ஓராண்டு வளர்ச்சிப் பணிகள்
வேடசந்தூர் வட்டம்
பழனி வட்டம்
கொடைக்கானல் வட்டம்
திண்டுக்கல் வட்டம்
நிலக்கோட்டை வட்டம்
கேரள மாநிலம்
என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!
அண்ணாவின் வழியில் என்னை நடத்திச் செல்லும் பெரியோர்களே!
என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே!
மிக்க நன்றி! வணக்கம்!
—மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்
(15.9.85 அன்று அண்ணா மாவட்டத் தொடக்க விழாவில்)



# அரிய வரலாறு படைக்கும் அண்ணா மாவட்டம்


**திரு எம். மாதவன் நம்பியார்**
**இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**அண்ணா மாவட்டம்**


அண்ணா மாவட்டம் 1985ஆம் ஆண்டுசெப்டம்பர் திங்கள் 15ஆம் நாளில் உருவாகி இன்று ஓராண்டினை நிறைவு செய்கிறது. இந்த ஓராண்டுக் காலத்தில் வளர்ச்சிப் பணிகளில் கணிசமான முன்னேற்றத்தை அண்ணா மாவட்டம் பெற்றுள்ளது.

அண்ணா மாவட்டம் துவக்கப்பட்டபோது கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை மாவட்டத் தலைநகரான திண்டுக்கல்லில் நிலவியது. பேரணையிலிருந்து திண்டுக்கல்லுக்கு லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. திண்டுக்கல் நகருக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காக அரசு நாளொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவிட்டது.

மாவட்டம் அமைக்கப்பட்ட பின்பு, எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாகத் திண்டுக்கல் நகருக்கான குடிதண்ணீர் வழங்கும் பணி சீராக்கப்பட்டது. குடிதண்ணீரே பெறப்படாத நிலையில் பல ஆண்டுகளாக அவதியுற்ற புதிய பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் குடிநீர் வழங்கலுக்கு ஆதாரமான காமராஜ் சாகர் அணையில் நீரே இல்லாத அளவில் நீர்மட்டம் குறைந்த நிலையும், மிகக் குறைவான மழையும் நிலவும் இத்தருணத்திலும் சீரமைக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோக முறைகளினால் கடுமையான குடிதண்ணீர்ப் பற்றாக்குறையினைத் திண்டுக்கல் நகர மக்கள் உணரவில்லை.

திண்டுக்கல் நகரின் தண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கவல்ல பேரணை குடிதண்ணீர்த் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் துவக்கி வைத்தார். ரூ.9 கோடி செலவினத்தில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் பணி துவக்கப்பட்டு விரைந்து செயலாக்கப்படுகிறது. சித்தர்கள் நத்தம் கிராமத்தில் வைகை நதியில் ஆறு ஊடுருவு நீர்க் கிணறுகள் தோண்டும் பணிகள் முடிவு பெற்றுள்ளன. முதல் கட்டப் பகுதிக்குத் தண்ணீர் அனுப்பும் நிலையத்திலிருந்து குழாய்கள் பதிக்கும் பணிகளும் துவங்கிவிட்டன. இரண்டாவது கட்டப் பகுதிக்குக் குழாய்கள் பதிப்பதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை ரூ.2.50 கோடி இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் ஆணையிட்டுள்ளபடி, 1987ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் திண்டுக்கல் நகரம் முன்னோடி குடிதண்ணீர் வழங்குதலைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதே போன்று கொடைக்கானல் நகரியமும் ஒவ்வொரு கோடை காலத்திலும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைச் சந்தித்து வந்தது. அரசு கொடைக்கானல் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற ரூ. 2.50 கோடி மதிப்பீட்டிலான திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனை நிறைவேற்ற ஒரு செயற் பொறியாளர் மற்றும் மூன்று துணைக் கோட்டங்களடங்கிய ஒரு கோட்டத்திற்கு அரசு அனுமதித்துள்ளது. கொடைக்கானல் நகரிய மக்களுக்கு 1987 ஜூலைத் திங்கள் முதல் குடிதண்ணீர் வழங்குதல் துவங்கும்.

மாவட்ட நிர்வாகம் முக்கியநகரங்களில் காணும் ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்குச் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொடைக்கானலில் மாவட்டம் பிரிக்கப்பட்ட உடனேயே கொடைக்கானல் ஏரிப் பகுதியைச் சுற்றிலுமுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுத் தூய்மைப் பணிகள் துவங்கப்பட்டன. அதே போன்று கொடைக்கானல் வளர்ச்சிக்கான திருத்தப்பட்ட பெருநகர்த் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க, ஒரு நிபுணரை அரசு நியமித்துள்ளது. இத்திட்டமானது இப்பழமையான மலை வாசஸ்தலத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் அவசியத்தைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படும்.

இதே போன்று பழனியில் மிக அதிகமான ஆக்கிரமிப்புகளால், இங்குவரும் பக்தர்களுக்கு அதிகத் தொல்லைகள் ஏற்படுகின்றன. பழனியிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து நகரம் அகலமான சாலைகளைப் பெற்றுள்ளது. பக்தர்கள் வசதியுடன் நகரைச் சுற்றி வரமுடிகிறது. திண்டுக்கல் நகரில் கூட ஆக்கிரமிப்புகள் படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் நகரிலுள்ள பழைய பேருந்து நிலையத்தில் ஒரு அங்காடித் தொகுப்பு கட்டுவதற்கு ரூ. 30 இலட்சமும், குமரன் பூங்காவைச்சீர்ப்படுத்துவதற்கு ரூ. 3 இலட்சமும் செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது.

திண்டுக்கல் நகரில், ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கலை அரங்கம் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் வளாக முதற்கட்டப் பணிகளை நிறைவேற்ற 150 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் பிற கட்டடங்களைக் கட்டுவதற்கு ரூ. 1.70 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கும்.

# வரலாற்றில் திண்டுக்கல்

திண்டுக்கல் நகரம் பூகோளத் தினபடி 78 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகையிலும், 10 டிகிரி வடக்கு அட்சரேகையிலும் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் அநேகமாக மத்திய பகுதியில் இருக்கிறது. மைசூர் யுத்தத்தின் போது இந்த நகரம் சரித்திரத்தில் ஒரு முக்கிய மான பிரதேசமாக இருந்துள்ளது. இந்நகரின் மேற்கேயுள்ள மலைக் குன்றில் திப்புசுல்தான் மேற்படி யுத்தத்தின்போது சேனைகள் தங்குவதற்குப் பாசறை, அதைச் சுற்றி ஒரு கோட்டை ஆகிய வற்றை நிறுவினார். மலையில் உள்ள கோவிலும், புகழ்வாய்ந்த இராணுவப் பாசறைகளும் இந்த நகருக்கு வரும் பயணிகளை மிகவும் கவருகின்றன. மலை உச்சியி லிருந்து நகர் முழுவதையும் மிகத் தெளிவாகக் காணலாம்.

இந்நகர் திண்டுக்கல் எனப் பெயர் பெற்றதற்குக் காரணம் இம்மலைக் கோட்டை ஒரு 'திண்டு' போல் இருப்பதேயாகும். சுற்றிலும் மலைகளால் சூழப் பட்டு உடல் நலத்திற்கு உகந்த சீதோஷ்ண நிலையில் கடல் மட் டத்திலிருந்து சுமார் 1000 அடி உயரத்தில் உள்ளது. குறிப்பாக காச நோயாளிகளுக்கு இது ஒரு சுகவாசஸ்தலமாக விளங்குகிறது. 1866ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி சென்னை மாநிலத் தில் பிரகடனப்படுத்தப்பட்ட 29 நகரங்களில் இது ஒன்றாகும்.

1602-ஆம் ஆண்டிலிருந்து 1609ஆம்ஆண்டுவரை மதுரையை ஆண்ட முத்துக்கிருஷ்ணப்ப நாயக் கரால் 1605-ல் திண்டுக்கல் கோட்டை முதல் முதலாகக் கட் டப்பட்டதாக வரலாறு கூறு கிறது. 1815ஆம் ஆண்டில் வந்த டார்ன்புல், சீஸ் என்ற எழுத் தாளர்கள், 'பக்தர்கள் பெயரால் ஒற்றர்கள் கோட்டைக்குள் நுழைந்து உளவு அறிய ஏதுவா கும்' எனச் சந்தேகித்த திப்புசுல் தான், மலைக்கோட்டையில் நடு வில் கோயில் கொண்டிருந்த (அபி ராமி அம்மன்) விக்கிரகத்தை எடுத்து மலையின் கீழே இப் போது ஊருக்குள்ளிருக்கும் கோயி லில் பிரதிஷ்டை செய்யக் கட் டளையிட்டார்' என்று எழுதி யிருக்கிறார்கள்.

திண்டுக்கல் நகர்மன்றம் 118 ஆண்டுகளைக் கடந்துள்ள இந் நாளில் சுமார் 360 ஆண்டுக்குமுன் கட்டப்பட்ட கோட்டையைப் பார்க்கிறோம். என்றும் அழியாத நினைவுச் சின்னமான இக்கோட் டையை, கல், மண் கலந்து கட் டப்பட்டதென நம்பவே முடியா யாதவாறு பிரமாண்டமான உருக்குக் கோட்டையாகத் திகழ் கிறது.

இது கட்டப்பட்ட காலத்தில் இக்கோட்டையைச் சுற்றியும், ஓட்டியும் ஒரு அகழியிருந்ததாக பிரான்சிஸ் எழுதியுள்ள மதுரை மாவட்ட கெஜட்டியரில் கூறப் படுகிறது. இன்று அந்த அகழி தூர்ந்துவிட்டது.

சுமார் 1209 அடி நீளமும், 900 அடி அகலமும், 280 அடி உயரமும் கொண்ட இம்மலையி லுள்ள கோட்டையைப் பிடிக்க, மைசூர் மன்னர்களும், ஆங்கிலே யர்களும் மாறி மாறிப் பலமுறை முயன்று, கோட்டைவிட்ட சுவை யான வரலாறு உண்டு.

1736ஆம் ஆண்டு நாயக்கமன்ன ரிடமிருந்து சந்தாசாகிப் என்ப வர் திண்டுக்கல் கோட்டையைப் பிடித்துத் தன்னுடைய இளைய சகோதரர் சதக் சாகிப் என்ப வரைப் பரிபாலிக்கக் கட்டளை யிட்டார். பின்பு 1747ல் மராத்தி யர் ஒரு பக்கமும், உத்தம பாளையத்திலிருந்து ராமநாயக் கர் என்ற பாளையக்காரர் மற் றொரு பக்கமும், மைசூர் பர்க்கி வெங்கிடராவ் வேறொரு பக்க மும் தாக்கினார்கள். ஆனால், இறுதியில் மைசூர்க்காரர் வச மானது.

மைசூர்க்காரரைப் பாளையக் காரர்கள் அடிக்கடி துன்புறுத்தி வந்தார்கள். ஆகவே, 1755ல் பாளையக்காரரை அடக்க ஹைதர்அலி திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்டார். 1767ல் ஆங்கிலக் கம்பெனியின் தளபதி முகம்மதுயூசுப் என்பவரால் ஹைதர்அலி விரட்டப்பட்டு, கோட்டை ஆங்கி லேயர் வசமானது. ஆனால், மறுவருடமே ஆங்கிலேயரைத் துரத்தியடித்தார் ஹைதர்அலி. ஹைதர்அலி மனைவியின் சகோதரி அமருனுஸ்ஸாபீகத் தின் கணவர் மீர்ராஜாலிகான் என்பவர் 1772லிருந்து 1782 வரை 10ஆண்டுகள் திண்டுக்கலில் ஹைதரின் பிரதிநிதியாக இருந்து தார்.

1773ல் அமருனுஸ்ஸா பீகம் இறந்துவிட்டார்.

திண்டுக்கல் மலைக்கோட்டைக் குத் தென்புறம் ஒரு மசூதி இருக் கிறது. அதில் ஒரு பாரசீகக் கல் வெட்டிலிருந்து, அந்த மசூதி யின் அமருனுஸ்ஸாபீகம் என்ப வர் சமாதி இருப்பதாகவும், அதைப் பராமரிப்பதற்காக இனா மாக விடப்பட்ட இடம்தான் 'பீகம்பீர்' என்று அழைக்கப்படுவ தாகவும் வரலாற்றுச் சான்று கூறு கிறது. 'பீகம்பீர்' என அழைக்கப் பட்ட இடம்தான் இன்று 'பேகம் பூர்' என வழங்கப்படுகிறது.

1783ல் ஆங்கிலேயர் திரும்ப வும் திண்டுக்கல் கோட்டையைக் கைப்பற்றினார்கள். 1784ல் ஆங்கிலேயருக்கும், மைசூர்க்கார ருக்கும் மங்களூரில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி ஆங்கிலேயர் மறு படியும மைசூர்க்காரர் வசமே ஒப்படைத்தார்கள். 1788ல் திப்பு சுல்தான் திண்டுக்கல் வந்தார்.

1790ஆம் ஆண்டில் இரண்டா வது மைசூர் யுத்தத்தில் மீண்டும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1947 ஆகஸ்டு 14 வரையில் ஆங்கி லேயரின ஆளுகையில் தான் இருந்திருக்கிறது. 1947 ஆகஸ்ட் 15ல் பாரதம் வெள்ளையர் பிடியி லிருந்து விடுபட்டுச் சுதந்திர மடைந்தது. ஆக, சுமார் 157 வருடங்கள் திண்டுக்கல் கோட்டை ஆங்கிலேயருடைய ஆட்சியிலிருந் திருக்கிறது. இந்தியாவில் ஆங்கி லேயர் அடியெடுத்து வைத்த காலை, மதுரை மாவட்டத்தில் முதன் முதலாக அவன் இரும்புக் கரங்களுக்குக் கிட்டிய பகுதியும் திண்டுக்கல்தான்.

திண்டுக்கல்லிலிருந்து வடக்கே 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள தாடிக்கொம்பு கிராமம் ஒரு காலத்தில் திண்டுக் கல் வட்டத்தலைமை இடமாக இருந்ததாகவும், ஆங்கேயே மாவட்ட ஆட்சியரின் விசாரணை கள் நடந்ததாகவும், சரித்திரம் கூறுகிறது. இங்கு அமைந்துள்ள அழகர் என்ற சுந்தர்ராஜ பெரு மாள் கோவிலைச் சுற்றியுள்ள சிற்ப வேலைப்பாடுகள் மதுரை திருமலைநாயக்கர் காலத்தின்சிற் பங்களைப் பிரதி பலிக்கின்றது. இந்தக் கோவிலின் சிற்ப வேலைப் பாடுகளும் முன்னால் அமைந் துள்ள மண்டபமும்மிகவும் சிறப்பு பெற்றவையாகும்.

அண்ணா மாவட்ட முதலாண்டு
நிறைவுக்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்

Anil

அணில் ISI

Phone : 4156



6 HP — 8 HP — 10 HP

## பி.எம். சோர்ணம் பிள்ளை சன்ஸ்

59, மேற்கு ரத வீதி,
திண்டுக்கல்-624001.

DEALERS IN

"அணில்" ISI ஆயில் இன்ஜின்

தொலைபேசி எண் : 4148

அண்ணா மாவட்டத்தின் ஓராண்டு நிறைவு விழாவும்
அரசுப் பொருட்காட்சித் துவக்க விழாவும் சிறப்புடன்
அமைந்திட நல்வாழ்த்துக்கள்.

## பி. மாரியப்பன் & சன்ஸ்

என்ஜினியரிங் காண்டிராக்டர்

87 சி, கிழக்கு கோவிந்தாபுரம்
திண்டுக்கல்



# அண்ணா மாவட்டம் பொது விவரங்கள்

வளர்ச்சிக் கோட்டங்கள் 2
1. திண்டுக்கல்.
2. பழநி.

மொத்த ஊராட்சி ஒன்றியங்கள்: 14

**திண்டுக்கல் கோட்டம்**

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | வட்டத்தின் பெயர் |
|---|---|
| ஆத்தூர்<br>திண்டுக்கல்<br>ரெட்டியார் சத்திரம்<br>சாணார்பட்டி | திண்டுக்கல் தாலுக்கா |
| வத்தலக் குண்டு<br>நிலக்கோட்டை<br>நத்தம் | நிலக்கோட்டை<br>நத்தம் |

**பழநி கோட்டம்.**

| | |
|---|---|
| பழநி<br>தொப்பம்பட்டி<br>ஒட்டன்சத்திரம் | பழநி |
| குஜிலியம்பாறை<br>வேடசந்தூர்<br>வடமதுரை | வேடசந்தூர் |
| கொடைக்கானல் | கொடைக்கானல் |

**ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த பரப்பளவு** 2,33,162.13 (எக்டேர்)

ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த மக்கள்தொகை (1981-ன் மக்கள் தொகை கணக்கின்படி) 13,15,455

மொத்த மக்கள் தொகையில்:

| | |
|---|---|
| ஆண்கள் | 6,63,206 |
| பெண்கள் | 6,52,249 |

தாழ்த்தப்பட்டவர்கள்:
பழங்குடியினர்கள்:

| | |
|---|---|
| ஆண்கள் | 1,34,257 |
| பெண்கள் | 1,33,867 |

மொத்த வருவாய்:

| | |
|---|---|
| கிராமங்கள் | 334 |
| குக்கிராமங்கள் | 2,627 |
| ஊராட்சிகள் | 304 |
| பேரூராட்சிகள் | 24 |

## மாவட்டக் கருவூலம்

### திண்டுக்கல்

அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 2-6-86-ஆம் நாள் 16,700 சதுர அடி பரப்பில் ரூ. 25.50 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மாவட்டக் கருவூலத்தைத் திறந்து வைத்தார். மாநிலத்திலேயே மாவட்டக் கருவூலத்திற்காகத் தனியாகக் கட்டடம் கட்டப்பட்டிருப்பது இதுவே முதல் கட்டடமாகும்.

நத்தத்தில் துணைக் கருவூலம் ரூ. 4.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் இக்கட்டடத்தின் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒட்டன்சத்திரத்தில் சார் நிலைக் கருவூலம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

## விடுதலை வீரர்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மைய அரசு மூலம் 233 நபர்களுக்கு ஒய்வு ஊதியமும், மாநில அரசு மூலம் 67 நபர்களுக்கு ஒய்வு ஊதியமும் வழங்கப்பட்டு வருகிறது.

Grams : "ANGUVILAS"
Red. Nos. 12700 & 149348

Phone : 5071
Estd : 1925

ஸ்தாபகர்:

அங்குவிலாஸ் M. V. முத்தையா பிள்ளை
திண்டுக்கல்

# அங்கு விலாஸ்

M. V. முத்தையா பிள்ளை (பர்ம்)
வாசனைப் புகையிலை தொழிற்சாலை
திண்டுக்கல்-624 001.

**ANGUVILAS M. V. MUTHIAH PILLAI(FIRM)**
SCENTED TOBACCO FACTORY
Dindigul-624 001 Anna Dist. Tamil Nadu

# விவசாய வளர்ச்சி



அண்ணா மாவட்டத்தில் நெல் சாகுபடியாகும் இயல்பான பரப்பு 33,200 எக்டர் ஆக இருந்தாலும், சென்ற ஆண்டு போதிய நீர் வசதி இல்லாததால் 21,168 எக்டர் தான் சாகுபடி ஆகியது. அதில் அமோக விளைச்சல் தரக்கூடிய ரகங்களாகிய ஐ.ஆர். 20, கோ.43, ஐ.ஆர்.50, ஆடுதுறை 31, கோ.33, வைகை ஐஈடி 4786, பொன்னி, ஆடுதுறை 36 முதலியவை 20,810 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. திருந்திய சாகுபடி முறைகள் விவசாயிகளால் அதிகப் பரப்பில் ஏற்றுக் கடைப்பிடிக்கப்பட்டதால், எக்டர் மகசூலானது, இயல்பான மகசூலாகிய 4,500 கிலோவானது 5,500கிலோவாக உயர்ந்துள்ளது.

இம்மாவட்டத்தில் சோளமானது இயல்பாக இறவையில் 12,912 எக்டரிலும் மானாவாரியில் 63,062 எக்டரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு இறவையாக 7,285 எக்டரிலும் மானாவாரியாக சுமார் 67,000 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டது. இதில் அமோக விளைச்சல் தரக்கூடிய ரகங்கள் சுமார் 60,000 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டது. புதிய ரகமாகிய கோ. 25, சோளம் 6,130 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கரும்பு சாகுபடி செய்யும் இயல்பான பரப்பு இறவையில் 8,922 எக்டரும் மானாவாரியில் 7,740 எக்டரும் ஆகும். சென்ற ஆண்டு இறவையில் 2561 எக்டரும் மானாவாரியில் 7440 எக்டரும் ஆக மொத்தம் 10,000 எக்டர்சாகுபடி செய்யப்பட்டது. இதில் அமோக விளைச்சல் ரகங்கள் 9,720 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டது.

புதிய ரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யும் வகையில் சென்ற ஆண்டு நெல்லில் 375 மினிக்கிட்டுகள் சிறிய பரப்பில் பயிரிட்டு அதன் சிறப்புகளைக் கண்டறிய சிறு, மிகச் சிறிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன இதுபோல் சிறு தானியங்களிலும் 836 மினிக்கிட்டுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் சிறு, குறு விவசாயிகள் 1,211 நபர்கள் புதிய ரகங்களின் சிறப்பைப் பயிரிட்டுக் கண்டறிந்துள்ளார்கள்.

சென்ற ஆண்டு 37,700 எக்டரில் பயறுவகை சாகுபடி செய்யப்பட்டது. இதன் மூலம் பயறு உற்பத்தி 18,800 மெ. டன் ஆகும்.

வேர் முடிச்சுகளில் தழைச்சத்தைக் கிரகித்து பயிருக்கு வழங்கும் யுத்தியாக நுண்ணுயிர் பாக்கெட்டுகள் 9,796 விநியோகிக்கப்பட்டன.

உணவில் புரதச் சத்துப் பங்கும், அதன் முக்கியத்துவம் பற்றியும், பயறை இதரப் பயிர்களைப் போல இலாபகரமாகப் பயிரிட்டு இலாபம் பெறுவது பற்றியும், விவசாயிகளுக்கு, பயறு உற்பத்தி சம்பந்தமான நுணுக்கங்களைக் கற்பிக்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் 1,300 விவசாயிகள் பங்கு கொண்டு பயனடைந்துள்ளார்கள்.

சிறிய விவசாயிகளுக்குப் புதிய ரகங்களை அறிமுகம் செய்யும் வகையில் 4 கிலோ மினிக்கிட்டுப் பைகள் 11,196ம், 2 கிலோ மினிக்கிட்டுப் பைகள் 972ம் விநியோகிக்கப்பட்டன.

நெற் பயிரில் குருத்துப் பூச்சியின் தாக்குதல் பொருளாதாரச் சேத நிலையைத் தாண்டிய போது ஒட்டு மொத்தமாக 1,010 எக்டரில் ரூ.97,700 மதிப்புள்ள மருந்துகளைத் தெளித்து, பூச்சி கட்டுப்படுத்தப்பட்டதோடு மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

இதில் மானியத்தொகை எக்டருக்கு ரூ. 15 வீதம் ரூ.15,200 வழங்கப்பட்டது.

பலநோக்கு விவசாயக் கருவிகளையும், திருந்திய முன்னேற்ற விவசாயக் கருவிகளையும் விவசாயிகள் பயன்படுத்துவதன் மூலம் மனித சக்திக்காகும் நேரத்தையும் உழைப்பையும் விவசாயச் செலவையும் குறைக்கும் நோக்கத்தோடு 549 கருவிகள் விநியோகிக்கப்பட்டன.

**எண்ணெய் வித்துப் பயிர்கள்**

அண்ணா மாவட்டத்தில் வறட்சியைத் தாங்கி அதிக லாபம் தர கீழ்வரும் எண்ணெய்வித்துப் பயிர்கள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

நிலக்கடலை, சூரியகாந்தி, எள், ஆமணக்கு, சோயா மொச்சை.

| | பரப்பு எக். |
|---|---|
| நிலக்கடலை சாகுபடி | 47350 |
| சூரியகாந்தி சாகுபடி | 8000 |
| எள் சாகுபடி | 2500 |
| ஆமணக்கு சாகுபடி | 500 |

நிலக்கடலைப் பயிரில் மகசூலை அதிகரிக்க நுண் உரம் இத்துறையின் மூலம் 408 எக்டர் பரப்புக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும், நுண் உரம் மானிய விலையிலும் வழங்கப்பட்டது. இதன் மூலம் 360 விவசாயிகளுக்கு ரூ.15934.40 மானியமாக வழங்கப்பட்டது.

நிலக்கடலைப் பயிருக்குத் தேவையான ஆகாயத்திலுள்ள தழைச்சத்து பூமியில் நிலை நிறுத்த ரைசோபியம் என்ற நுண் உயிர் உரம் எக்டேருக்கு 5 பொட்டலம் வீதம் 264 எக்டருக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதன் மூலம் 245 விவசாயிகளுக்கு ரூ. 3,354 மானியமாக வழங்கப்பட்டது.

நிலக்கடலையில் நல்ல மகசூல் பெறும் பொருட்டு 42 மெ.டன் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 12 டன் டி.ஏ.பி. மற்றும் 3 டன் முசூரிபாஸ் உரங்கள் மானிய விலையில் 289 எக்டேருக்கு விநியோகிக்கப்பட்டது. இதில் 310 விவசாயிகள் ரூ.16,680 ஐ மானியமாகப் பெற்று பயனடைந்தனர்.

அதிக எடையுள்ள திரட்சியான, பொக்கற்ற கடலை விதைகளைப் பெற ஜிப்சம் எக்டருக்கு 200கி.வீதம் மானிய விலையில் 1480 எக்டருக்கு வழங்கப்பட்டது. 296.8 மெ.டன் ஜிப்சம் 950 விவசாயிகளுக்கு ரூ. 59,200 மானியத்துடன் விநியோகம் செய்யப்பட்டது.

பரந்த அளவில் ஒட்டு மொத்தமாகப் பயிர்ப்பாதுகாப்பு செய்ய வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு வலியுறுத்த நிலக்கடலை பயிருக்கு 50% மானிய விலையில் பயிர்பாதுகாப்பு மருந்துகள் 1919 எக்டேருக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதன் மூலம் சுமார் 1500 விவசாயிகளுக்கு ரூ. 1.44 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

50% மானிய விலையில் கைத் தெளிப்பான் மற்றும் விசைத் தெளிப்பான்கள் 30 விவசாயிகளுக்கு வழங்கியதன் மூலம் ரூ. 9,208 மானியமாக அனுமதிக்கப்பட்டது.

### அண்ணா மாவட்டத்தில் மீன் வளம்

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் மண்டல மீன்துறை உதவி இயக்குநரலுவலகம் 1.9.85 முதல் செயல்பட்டு வருகிறது. அண்ணா மாவட்டத்தில் இருக்கும் மூன்று வருவாய்க் கோட்டங்களிலும் மீன் வளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மாவட்டத்தில் அநேக ஏரிகள், குளங்கள், நீர்த் தேக்கங்கள், குளிர் நீரோடைகள் உள்ளன., இவற்றில் மிக வேகமாக வளரக் கூடிய பெருங்கெண்டை இன மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை மீன் குஞ்சுகள் பருவ காலங்களில் இருப்பு செய்யப்பட்டு மீன்கள் வளர்ந்து பிடிக்கும்பொழுது துறை மூலமும், மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களைக் கொண்டும் பிடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மீன் குஞ்சுகள் பவானிசாகர் அணை, சாத்தனூர் அணை, மணிமுத்தாறு அணை மற்றும் வைகை அணை ஆகிய மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்பட்டு இருப்பு செய்யப்பட்டு வருகிறது.



இம்மாவட்டத்தில் மீன்வளப் பணிகளுக்குத் தேர்ந்தெடுத்திருக்கும் நீர்த்தேக்கங்கள் வரதமாநதி அணை, மருதாநதி அணை, பரப்பலாறு அணை, பெரியகோம்பை அணை, பாலாறு புரந்தலாறு அணை ஆகியவையாகும்.

இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீனகுஞ்சுகள் சேகரம் செய்யப்பட்டு துறை ஏரி குளங்களில் இருப்பு செய்யப்பட்டு வருகிறது.

1986-87ஆம் ஆண்டு அண்ணா மாவட்டத்தில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் பாலாறு -புரந்தலாறு அணையில் ரூ.13.2இலட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது.இந்த மீன்பண்ணையிலிருந்து வளர்த்தெடுக்கப்படும் உயரினக் கெண்டை மீன்களான கட்லா, ரோகு, மிர் கால் மீன்களிலிருந்து மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். இந்தமீன் பண்ணையில் 2 சின்ன மீன் குளங்களும், 8 மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்களும், 12 நர்சரி குளங்களும் கட்டப்பட்டு வருகிறது.

அண்ணா மாவட்டத்தில் ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கம் பழநியில் செயல்பட்டு வருகிறது. இந்தமீனவர் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் துறை ஏரிகளில் மீன் பிடிப்பதற்கு பங்கு முறையில் அனுமதிக்கப்பட்டு மீன் பிடித்து வருகிறார்கள்.

### தோட்டக்கலைத் துறை

தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பினை அதிகப்படுத்துவதும், பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விவசாயிகளுக்குப் பழ மரங்களை மானிய விலையில் வழங்குவதும் தோட்டக்கலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கொடைக்கானல் வட்டத்தில் 240.34 எக்டேர் பரப்பில் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 285 மரக்கன்றுகளும், 268 எக்டேர் பரப்பில் 9,501 பயிர்கள் ஆண்டுப் பயிராகவும், 221.10 எக்டேர் பரப்பில் ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 150 பயிர்கள் பொருளாதாரப் பயிர்களாகவும், 28.60 எக்டேர் பரப்பில் 14 ஆயிரத்து 950 பயிர்கள் வாசனைத் திரவியப் பயிர்களாகவும் பயிரிடப்பட்டுள்ளன.

கொடைக்கானல் வட்டம் கீழ் பழனி மலைப்பாதையில் மலைப் பயிர்களான காப்பி, ஏலம் மற்றும் வாசனைப் பயிர்களின் பரப்பளவினை அதிகப்படுத்துவதும், மண் அரித்துச் செல்லுவதைக் கட்டுப்படுத்துவதும், வாசனை மரக்கன்றுகள் நடவு செய்வதும். ஏற்கெனவே நடவு செய்த பயிர்களுக்கு இடுபொருள் வழங்குவதும் மலைப் பயிர்கள் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

103.25 எக்டேர் நிலப் பரப்பில் ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 150 நாற்றுகள் விநியோகம் செய்து பயிரிடப்பட்டுள்ளன.



# தொழில் வளம்

மதுரை மாவட்டத் தொழில் மையக் கிளை அலுவலகம், திண்டுக்கல்லில் கடந்த 26.12.85 முதல் தொடங்கப்பட்டு இயங்கி வந்தது.

தமிழ்நாடு அரசு தொழில் துறையால் முழு அளவில் மாவட்டத் தொழில் மையம் தொடங்குவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, 1.8.86 முதல் அண்ணா மாவட்டத்திற்கான மாவட்டத் தொழில் மையம் முழு அளவில் திண்டுக்கல்லில் இயங்கி வருகின்றது.

அண்ணா மாவட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து கடந்த ஓராண்டுக் காலத்தில் இத்தொழில் மையத்தின் வளர்ச்சிப் பணிகள் பற்றிய விவரங்கள்:

இம்மாவட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஓராண்டுக்காலத்தில் மாவட்டத் தொழில் மையம் 316 சிறுதொழில் நிறுவனங்களுக்கு நிரந்தரச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கியுள்ளது. இதன் மூலம் 1,580 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 418 சிறுதொழில்முனைவோர்கள், மாவட்டத்தொழில் மையத்தால் தெரிவு செய்யப்பட்டு, தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் உற்பத்தி தொடங்கப் பட்டவுடன் சுமார் 2,090 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற இயலும்.

இம்மாவட்டத் தொழில் மையம் கிராமப்புறங்களில் உள்ள கைவினைத்திறன் தொழிலாளர்களைத்தெரிவு செய்துகைவினைத் திறன் தொழில் சான்றிதழ்கள் வழங்கி வருகின்றது. இம்மாவட்டம் தொடங்கப்பட்ட ஓராண்டுக் காலத்தில் 95 கைவினைத் திறன் தொழில்களுக்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 475 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தேவையான, கடன் வசதிகளை தேசியமயமாக்கப்பட்டுள்ள வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் முதலியவற்றின் மூலம் பெறுவதற்குத் தேவையான தொழில் நுட்ப அறிக்கைகள் வழங்கி, கடனுதவி பெறுவதற்கான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றது.

வங்கிகள் மூலம் குறைந்த வட்டிக் கடனுதவி பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 71. தொகை ரூ. 3,52,000

**செயல் திட்டம்**

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள அண்ணா மாவட்டத்தில் சிறுதொழில் வளர்ச்சி அதிகமாகவும் விரைவாகவும் ஏற்படுத்தும் நோக்குடன் மூன்றாண்டுகளுக்கான செயல்திட்டம் (1985-86 முதல் 1987-88 முடிய) தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் பற்றிய விவரங்கள்:

இத்திட்டத்தின்படி, கடந்த நிதியாண்டின் (1985-86) குறியளவான 180 சிறுதொழில்களுக்கும் அதிகமாக 364 சிறுதொழில்கள் தொடங்கப்பட்டு, அதன் மூலம் 1479 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது போன்றே இனிவரும் ஆண்டுகளிலும் இம்மாவட்டத்தில் அதிக சிறுதொழில்கள் தொடங்குவதற்கு விருப்பமுள்ள தொழில் முனைவோர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறு தொழில் ஊக்குவிப்புக் கூட்டங்கள் நடத்தி, தொழில் முனைவோர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அண்ணா மாவட்டத்தில் கைத்தறி வளர்ச்சியின் திட்டப்பணி

தமிழகத்தில் இயங்கி வரும் சுமார் 5.6 இலட்சம் கைத்தறிகளில் அண்ணா மாவட்டத்தில் மட்டும் சுமார் 0.20 லட்சம் கைத்தறிகள் இருந்து வருகின்றன. இந்தக் கைத்தறிகளை நம்பி அண்ணா மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் நெசவாளர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். நெசவாளர்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்த அரசு பல வகைகளிலும் திட்டமிட்டு அவர்களுக்குத்தொடர்ந்துவேலை வாய்ப்பு அளிக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. தமிழ்நாட்டில் இயங்கி வரும் மொத்தம் 1,600 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 45 சங்கங்கள் மதுரை மாவட்டத்தில் இருக்கின்றன. இவைகளில் 11,500 நெசவாளர்கள் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருந்து தொடர்ந்து சங்கத்தில் உற்பத்தி செய்பவர்களுக்கு 'நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ்' வீடு ஒன்று ரூ. 12,000 மதிப்பீட்டில் கட்டிக் கொடுக்கப் படுகின்றது.

தமிழக அரசு, வீடு ஒன்றுக்கு ரூ. 1000 மான்யமாகவும், 'ஹட்கோ' நிறுவனத்தின் மூலம் ரூ. 9,450 நீண்டகாலக் கடனாகவும் வழங்கப்படுகின்றது. மற்றும் அங்கத்தினர்கள் ரூ. 1,550 மசலுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் அண்ணா மாவட்டத்தில் உள்ள ஒட்டன்சத்திரம் கற்பகத் தரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம 30 வீடுகளையும், லந்தக் கோட்டை மார்க்கண்டேயர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 60 வீடுகளையும் கட்டியுள்ளன.

சென்ற ஆண்டில் திண்டுக்கல்லில் நேருஜி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 27.4.86 முதல் 11.5.86 முடிய 32வது அனைத்திந்தியக் கைத்தறிக் கண்காட்சி நடைபெற்றது. இவ்விழாவில் 100 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கேற்று ரூ.77.22 லட்சம் பெறுமான துணிகளை விற்பனை செய்துள்ளது.

## அண்ணா மாவட்டத்தில் பட்டுத் தொழில்

அண்ணா மாவட்டத்தில் முதன் முதலாகப் பட்டுத்தொழில் 1976ஆம் ஆண்டு பழனி தாலுகா

வில் தொடங்கப்பட்டது. தற்போது பட்டுத் தொழிலானது அண்ணா மாவட்டத்தில்அனைத்து தாலுக்காக்களிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. தற்போது சுமார் 2,100 ஏக்கர் பரப்பில் விரிவுபடுத்தப்பட்டு, சுமார் மூவாயிரம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன . இத்தொழிலை மேலும் ஊக்குவிப்பதற்காக, தொழில் நுட்ப மையங்கள், இளம்புழு வளர்ப்பு மையங்கள் பல துவங்கப்பட்டு விவசாயிகளுக்கு அவ்வப்போது தொழில் நுட்ப அறிவுரைகளையும், உதவிகளையும் இத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

புதிதாகப் புழு வளர்ப்பைத் தொடங்கும் விவசாயி புழுவளர்ப்பின் அடிப்படைத்தொழில் நுட்பம் அறிந்து கொண்டு புழு வளர்ப்பைத் தொடங்க உதவியாகப் புதியவிவசாயிகளுக்கு ஒரு மாத காலப்பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் ரூ. 100 உதவிச் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் இவ்வாறாக 110 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் புழு வளர்ப்பைத் தொடங்க அடிப்படை உபகரணங்களாக ரூ. 500 பெறுமானமுள்ள உபகரணங்கள் மேற்படி விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் 40 விவசாயிகளுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ரூ. 5000 வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. பெறப்பட்ட ரூ. 5000 ரூபாயில் புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க ரூ. 2,000 என்றும், புழு வளர்ப்பு மனைகட்ட ரூ. 3,000 என்றும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அண்ணா மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை விற்பனை செய்யும் பொருட்டு, திண்டுக்கல் மற்றும் பழனியில் அரசு பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. 1985-86ல் மட்டும் 97,025 கி.கி. பட்டுக்கூடுகள் மேற்படி அங்காடிகள் மூலம் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தனியார் நூற்பாளர்களும், பட்டுக்கூடு சங்கங்களும் ஏலத்தில் பங்கு கொள்கின்றனர். அரசு நிர்ணயித்த விலையிலிருந்து அதிக பட்ச ஏலம் கோரிய நபருக்குக் கூடுகள் விற்பனை செய்யப்பட்டு, பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

அண்ணா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு பரவலாக 20 இளம்புழு வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களின் மூலம் சுமார் 200 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

பட்டு நூற்பில் கிராமிய மக்களுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு கிராமிய நூற்பு நிலையம் ஒன்று திண்டுக்கல்லில் மாவட்டப் பட்டுத் தொழில் மையத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் மூலம் 85-86 ஆம் ஆண்டில் 64 கிராமிய மக்களுக்குப் பட்டுநூற்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, 846 கி. பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது 21 நபர்களுக்கு இவ்வாண்டு நூற்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அண்ணா மாவட்ட பட்டு விவசாயிகளின் முட்டைத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கென்று கலப்பின வித்தகம் ஒன்று திண்டுக்கல்லில் செயல்பட்டு வருகின்றது. 1985-86 ஆம் ஆண்டின் மூலம் 7.45 லட்சம் நோயற்ற முட்டைத் தொகுதிகள் தயார் செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

அண்ணா மாவட்டத்தைத் தவிர்த்து, மதுரை, காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டப் பட்டு விவசாயிகளின் முட்டைத் தேவைகளையும் இவ்வித்தகம் பூர்த்தி செய்து வருகின்றது. இம்மாவட்டத்திலேயே முட்டை தயார் செய்து இம்மாவட்டத்திலும், அருகில் உள்ள மாவட்டத்திலும் முட்டைகள் வினியோகம் செய்யப்படுவதால், தரமான பட்டுக்கூடுகளை விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர்.

அண்ணா மாவட்டத்தில் 7 பட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் திண்டுக்கல், நத்தம், பழனி, நிலக்கோட்டை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கங்கள் விவசாயிகளுக்குத் தேவையான புழுவளர்ப்புத் தட்டுக்கள், சந்திரிகைகள், மெழுகு தாள், பாரமலின் போன்ற அத்தியாவசிய தேவைகளை வழங்கி, சேவை நிலையமாக விளங்குகின்றன. மேலும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்குப் பட்டு நூற்புப் பயிற்சியும் அளித்து வருகின்றன.

திண்டுக்கல் கலப்பின வித்தகத்திற்குத் தேவையான இருசுழற்சி இன விதைக்கூடுகள் உற்பத்தி நிலையமாக இப்பண்ணை செயல்பட்டு வருகின்றது. பண்ணையின் மொத்தப் பரப்பான 31.38 ஏக்கரில் 20.45 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டு விதைக்கூடு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.



### கதர் கிராமத் தொழில்

அண்ணா மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ்க்கண்ட வாரிய அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாரிய அலகுகள் அனைத்தும் மதுரை கிராமத் தொழில் உதவி இயக்குநரிடமிருந்து அண்ணா மாவட்டத்திலுள்ள திண்டுக்கல் கதர் கிராமத் தொழில் உதவி இயக்குநரின் கீழ் 1.1.86 முதல் மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

சோப்பு உற்பத்தி செய்யும் அலகுகள் 2; காலணி உற்பத்தி செய்யும் அலகுகள் 2;பழுப்பக்குவ அலகு 1; காலணி விற்பனை அலகு 1; கிராமசில்பா1; தேனீ வளர்ப்புக் கிளை நிலையம் 4; தேனீ வளர்ப்புப் பண்ணைகள்2.

அண்ணா மாவட்டத்தில் இரண்டு சோப்பு உற்பத்தி அலகு கள் முறையே வேடபட்டி, குன் னுவராயன் கோட்டை என்ற இடங்களில் செயல்பட்டு வரு கின்றன. இவ்விரு அலகுகளிலும் ஜனவரி முதல் ஜூலை'86 மாதம் முடிய ரூ. 57 லட்சம் மதிப்புள்ள சோப்புகள் 60 டன் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய் யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் இரண்டு காலணிகள் உற்பத்தி செய்யும் அலகுகள் திண்டுக்கல் மற்றும் பேகம்பூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. பேகம் பூரில் உள்ள காலணி உற்பத்தி அலகு,சிறப்பு முன்னேற்றத் திட் டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, பிரதான உற்பத்திக்கேந்திரமாகச் செயல்பட்டுள்ளது. இப்பிரதான உற்பத்திக் கேந்திரத்திற்கு ஐந்து கிளைகள் அண்ணா மாவட்டத்தி லுள்ள சிற்றூர்களில்(லட்சுமணப் பட்டி, சின்னாளபட்டி,கோபால் பட்டி, இராஜாக்கப்பட்டி மற் றும் பேகம்பூர்) செயல்பட்டு வரு கின்றன.

மேற்கண்ட காலணி அலகு களில் நவீன முறையில் காலணி கள் தயார் செய்து, விநி யோகம் செய்யப்பட்டு வருகின் றன. இந்த அலகுகளில் கடந்த ஜனவரித் திங்கள் முதல் ஜூலை '86 வரை ஏறத்தாழ ரூ. 4.75 இலட்சம் மதிப்புள்ள காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

காலணி விற்பனை அலகு ஒன்று திண்டுக்கல் பிரதான வீதி யில் செயல்பட்டு வருகிறது. ஆண்டுக் குறியீடு ரூ. 12 லட்சம். ஜனவரி முதல் ஜூலை '86 முடிய ரூ. 3 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப் பட்டுள்ளன.

கதர் கிராமத் தொழில் வாரி யத்தின் கீழ் திண்டுக்கல்லில் பழுப் பக்குவ நிலையம் ஒன்று 1970 முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு ஜாம், ஸ்குவாஷ் மிக்சர், ஊறுகாய் போன்றவைகள் தயார் செய்யப்படுகின்றன.

அண்ணா மாவட்டத்தில் நான்கு தேனீ வளர்ப்புக் கிளை நிலையங்கள் செயல்படுகின்றன. கொடைக்கானல் மற்றும் காம னூர் என்ற இடங்களில் செயல் படும் இரு தேனீ வளர்ப்புப் பண்ணைகள், ஆண்டுதோறும் 200 உயர்ரகத் தேனீக் கூட்டங் களைத் தயாரித்து, செயற்கைக் காலணியுடன் தேனீ வளர்ப்போர் ருக்குக் குறைந்த விலையில் விற் பனை செய்கின்றன.

கொடைக்கானல் மலையி லுள்ள மலைவாசி மக்களின் நலம் கருதி 400 குடும்பத்தைச் சார்ந்த 400 நபர்களுக்குத் தேனீ வளர்ப்புத் தொழிலில் பயிற்சி யும், மானியமாகத்தேனீ வளர்ப்பு உபகரணங்கள் வழங்கவும் ரூ. 7.25 லட்சம் ஒதுக்கப்பட்டுள் ளது.

கொடைக்கானல் பகுதியில் வாழும் இலங்கை அகதிகளின் நல்வாழ்விற்காக, 400 குடும்பத் தைச் சார்ந்த நபர்களுக்குத்தேனீ வளர்ப்புப் பயிற்சியும் உபகரணங் களும் வழங்க ரூ. 92,000 ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட் டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள் ளது.

இவ்வாண்டு முடிய 5200கிலோ தேன்ரூ.1.30 இலட்சத்துக்கு உற் பத்தி செய்யப்பட்டுள்ளது. 202 குடும்பங்கள் தேனீ வளர்ப்புத் தொழிலில் இம்மாவட்டத்தில் ஈடுபட்டுள்ளன.


பழனி நகர் ரசிகப் பெருமக்களுக்கு
தரமான திரைப்படங்களை
பெருமையுடன் வழங்கும்

**வள்ளுவர் திரையரங்கு—**
**சினி வள்ளுவர் திரையரங்கு**

ரசிகர்களுக்கு எங்களது அடுத்த காணிக்கை
"மினி வள்ளுவர்" குளுகுளு திரையரங்கம்!

அன்பு வாழ்த்துக்களுடன்
திரு ஆர். ஆறுமுகம்
திரு எஸ். நடராஜன்
பழனி.

தந்தி : TNSC Bank　　போன் : 20301　　டெலெக்ஸ் : 41-7225

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்

233, என்.எஸ்.சி போஸ் சாலை, சென்னை-1.

## நீங்கள் இலட்சாதிபதியாக வேண்டுமா?

## எங்கள் வங்கியின் "ஒரு இலட்சம்" திட்டத்தில் சேருங்கள்

**ரூ. 1,00,000/-ஐ இருபத்தைந்தாண்டுகள் கழித்துப்பெற**

இப்போது

(1) ரூ. 6,244/- முதலீடு செய்யுங்கள்

அல்லது

(2) மாதம் ரூ. 75/- வீதம் 157 மாதங்களும், 158-வது மாதம் ரூ. 15/-ம் செலுத்துங்கள்.

**ரூ. 1,00,000/- ஐ இருபதாண்டுகள் கழித்துப் பெற**

இப்போது

(1) ரூ. 10,873/- முதலீடு செய்யுங்கள்

அல்லது

(2) மாதம் ரூ. 150 வீதம் 118 மாதங்களும், 119வது மாதம் ரூ. 145/-ம் செலுத்துங்கள்.

**ரூ. 1,00,000/-ஐ பதினைந்தாண்டுகள் கழித்துப் பெற**

இப்போது

(1) ரூ. 18,935 முதலீடு செய்யுங்கள்

அல்லது

(2) மாதம் ரூ. 250/- வீதம் 129 மாதங்களும், 130வது மாதம் ரூ. 40/-ம் செலுத்துங்கள்.

**ரூ. 1,00,000/-ஐ பத்தாண்டுகள் கழித்துப்பெற**

இப்போது

(1) ரூ. 32,974/- முதலீடு செய்யுங்கள்

அல்லது

(2) மாதம் ரூ. 500- வீதம் 101 மாதங்கள் செலுத்துங்கள்.

**ரூ. 1,00,000/-ஐ ஐந்தாண்டுகள் கழித்துப் பெற**

இப்போது

(1) ரூ. 57,423/- முதலீடு செய்யுங்கள்

அல்லது

(2) ரூ. 1,250/-வீதம் 59 மாதங்களும் 60வது மாதம் ரூ. 550/-ம் செலுத்துங்கள்.

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை




மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பெற்று ஒரு பகுதி அண்ணா மாவட்டம் என்ற பெயரில் திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு 15.9.85 முதல் சீருடனும், சிறப்புடனும் இயங்கி வருகிறது. அண்ணா மாவட்டம் திண்டுக்கல் வளர்ச்சிக் கோட்டத்தின் கீழான திண்டுக்கல், ஆத்தூர், ரெட்டியார் சத்திரம், சாணார்பட்டி, நத்தம், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களையும், பழனி வளர்ச்சிக் கோட்டத்தின் கீழான பழனி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை, கொடைக்கானல் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கியதாகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டம், வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம் ஆகிய தலையாய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு 1985-86ஆம் ஆண்டில் சிறப்பான சாதனைகள் புரிந்துள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழை எளியவர்களின் வருவாயை மேம்படுத்தி அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பெரிதும் உதவிடும் திட்டமாகும். இத்திட்டம் சிறந்த முறையில் உரிய மக்களுக்குச் சென்றடைவதில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கறவை மாடுகளும், உழவு மாடுகளும், வண்டியும், மாடுகளும் வழங்கப்படுகின்றன. மேலும் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வாத்து வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, குதிரை வளர்ப்பு, சிறு தொழில் துவங்குதல், வியாபாரம் செய்தல் ஆகியவற்றிற்காக 6,538 குடும்பங்களுக்கு ரூ. 220 இலட்சம் வங்கிக் கடனாக வழங்கப் பெற்றுள்ளது. இதில் (33 1/3 சதவீதம்) ரூ. 78.86 இலட்சம் மானியமாகும்.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு 558 குடியிருப்பு வீடுகளில் குறைந்தது 20 வீடுகள் ஒரே இடத்தில் குழு வீடுகளாகக் கட்டப்பட்டுள்ளன. இவ்வீடுகள் ரூ. 31.50 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுப் பயன் படுததப்பட்டு வருகின்றன. இக்குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான சாக்கடை கட்டுதல், கிராமிய சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், குடிநீர் வசதிகள் செய்தல் ஆக மொத்தம் 727 வேலைகள் ஆகியவற்றிற்காக ரூ. 216.04 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆயக்குடி, எரியோடு, அம்மைநாயக்கனூர், பண்ணைக்காடு, அய்யம்பாளையம் ஆகிய பேரூராட்சிகளிலும் 67 அபிவிருத்தி வேலைகள் ரூ. 9.78 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இத்திட்டத்தின் மூலம் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 19.57 இலட்சம் மரக்கன்றுகள் 979 எக்டேர் பரப்பில் வளர்க்கப்படுகின்றன. மேலே உள்ள 2 திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ. 14.93 இலட்சம் மனித உழைப்பு நாள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ரொக்கமாக ரூ. 19.87 இலட்சமும், உணவு தானியமாக ரூ. 7.79 இலட்சமும் செலவழிக்கப்பட்டுள்ளன. உணவு தானியங்கள் ஒரு மனித நாளுக்கு, அரிசி 1 கிலோ ஒன்றுக்கு ரூ. 1.85, கோதுமை ரூ. 1.50 வீதம் 2 கிலோ மற்றும் ரூ. 3.15 ரொக்கம் ஆகவும் வழங்கப்படுகிறது.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 350 ஆதி திராவிடர் குடியிருப்பு வீடுகள்

ரூ. 21 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்குக் குடிநீர், சாலை, மின்விளக்கு, கழிப்பறைகள் ஆகிய அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்திரா காந்தி நினைவுக் குடியிருப்புத் திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்காக 563 வீடுகளுக்கு அனுமதி பெற்று 86-87-ஆம் ஆண்டில் வேலைகள் நடைபெறுகின்றன. மேலும் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, விவசாயப் பொறியியல் துறை ஆகிய மற்றைய துறைகள்மூலம் பாசனக் கண்மாய் வேலைகள், பாலம் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகிய வேலைகள் சம்பந்தமாக ரூ. 227.68 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சமூக நலக் காடுகள் வளர்க்கப்படுகின்றன. 18.75 இலட்சம் மரக்கன்றுகள் 938 எக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 13.637 இலட்சம் மனித உழைப்பு நாள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ரொக்கமாக ரூ. 13.669 இலட்சமும், ரூபாய் 5.794 இலட்சம் மதிப்புக்கான உணவு தானியங்களும் ஆக மொத்தம் ரூ. 19.463 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**விவசாய உற்பத்திப் பெருக்குத் திட்டம் (மாஸிவ்)**

இத்திட்டத்தின்கீழ் 2,218 எக்டேர் வறண்ட நிலத்திற்குச் சிறுபாசன வசதியளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2217 சிறு விவசாய மற்றும் குறுவிவசாயக் குடும்பங்களுக்கு ரூ. 39.12 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மற்றும் சுமார் 3,500 எக்டேர் வறண்ட நிலங்களுக்கு, சிறு பாசன வசதியளிக்கும் திட்டம் 86-87-ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஊரக இளைஞர் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

இத்திட்டத்தில் 310 ஊரக இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் அதாவது பொறியியற் பிரிவு, அம்பர் ராட்டை நூற்பு, ஆகிய பிரிவுகளில் ரூ. 6.7 இலட்சம் செலவு செய்யப்பட்டு, பயிற்சியளிக்கப் பெற்று, 128 நபர்களுக்கு கைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 182 நபர்களுக்கு தொழிற் கருவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு, சுயமாகத்தொழில் ஆரம்பிப்பதற்கு $33\frac{1}{3}$ சதவீதம் மானியத்துடன் வங்கிகளில் கடன் பெற்றுத் தரப்படுகிறது. மற்றும் தேனீ வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு, துணிச்சாயம் போடுதல், அச்சுக்கோத்தல் ஆகிய தொழில்களுக்குப் பயிற்சி கொடுக்க 1986-87-ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.



**கொத்தடிமைகள்**

மத்தியப் பிரதேசத்திலிருந்து வந்துள்ள 4 கொத்தடிமைகளுக்கு அரசாங்க மறு வாழ்வுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் குடியிருப்பு வீடு ஒன்று கறவை மாடு, வீட்டு உபயோகப் பாத்திரங்கள் ஆகியவை ரூ. 10,000 மதிப்பில் இனாமாக வழங்கப்பட்டுள்ளன.

**ஏழை எளியோர்க்குக் கடனுதவித் திட்டம்**

கடந்த ஓராண்டில் அண்ணா மாவட்டத்திலுள்ள ஏழை எளியோருக்குப் பல்வகைத் திட்டங்களின் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டு அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி பெற்றுள்ளார்கள். இம்மாவட்டத்திலுள்ள 37,684 அடித்தள மக்களுக்கு இவ்வாண்டில் சுமார் ரூபாய் 9.6 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 4,732 நபர்களுக்கு ரூ. 1.6 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. சிறுவட்டி விகிதத்தில் 2,319 பேர்கள் ரூ. 28 இலட்சம் கடனுதவி பெற்றுள்ளார்கள். சிறிய மற்றும் விளிம்பு நிலை நிலமற்ற தொழிலாளர்கள் போன்ற 30,458 நபர்களுக்கு சுமார் ரூ. 9 கோடி அளவில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராமக் கைவினைஞர்கள் மற்றும் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 953 பேர்களுக்கு ரூ. 25 இலட்சம் அளவில் கடன் உதவி தரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதியினருக்கு உதவும் பொருட்டு இம்மாவட்டத்தில் 4,570 பேர்களுக்குச் சுமார் ரூ. 1.6 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுப் பயன்பெற்றுள்ளனர்.





# பிற்படுத்தப் பட்டோர் நலன்

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகத் திட்டங்கள் அமல் படுத்தப்படுகின்றன. மாவட்டங் களில் மாவட்ட ஆட்சித் தலை வர் அவர்களின் கீழ் இயங்கி வரும் மாவட்ட பிற்படுத்தப்பட் டோர் நல அலுவலர்கள் மற் றும் கள்ளர் சீரமைப்புத் தனித் துணை ஆட்சியர்கள் ஆகியோரால் அரசின் திட்டங்கள் நன்முறை யில் செயல்பட ஆவன செய் யப்படுகிறது.

அண்ணா மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள், மற்றும் கல்லூரி களில் பயிலும் பிற்படுத்தப்பட் டோர் வகுப்பு மாணவ, மாணவி யர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும் தனிக் கட்டணச் சலுகையும், உதவித் தொகை யும் வழங்கப்படுகின்றன.

**சீர் மரபினர்**

முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு முடியக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள்.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்**

ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள்.

1985-86ஆம் நிதியாண்டில் 2718 மாணவ-மாணவியர்களுக்கு ரூ. 42,124.25 தனிக்கட்டணச்சலுகை யாக வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலை, பட்டம், மருத்து வம், மற்றும் தொழிற் கல்வி பயி லும் பிற்படுத்தப்பட்ட வகுப்பி னர், மாணவ-மாணவியர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 5000-க்குக் குறைவாக இருப் பின், அம் மாணவ, மாணவியர் களுக்கு உதவித்தொகை வழங்கப் படுகிறது. 1985-86ஆம் கல்வி யாண்டில் அதற்காக ரூ. 9 இலட்சம் செலவிடப்பட்டு, 3064 மாணவ, மாணவியர்கள் பயன டைந்துள்ளனர்.

மாவட்டத்தில் பிற்படுத்தப்பட் டோர் நல மாணவ, மாணவியர் இல்லங்கள் 12 செயல்பட்டு வரு கின்றன.

1985-86ஆம் கல்வியாண்டில் ரூ. 3.23 இலட்சம், விடுதி பரா மரிப்புச் செலவினமாக வழங்கப் பட்டுள்ளது.

இதில் எரியோடு மாணவர் இல் லம் 1985-86ல் புதிதாகத் தொடங்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஒவ் வொரு ஆண்டும் பள்ளிகள் ஆரம் பிக்கப்படும் நாட்களிலும், பொங்கல் விழாவின் போதும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1985-86ஆம் கல்வியாண்டில் 597 மாணவ - மாணவிகளுக்குச் சீருடைக்காக ரூ. 18,070.80 செலவழிக்கப்பட்டுள்ளது.

அண்ணா மாவட்டத்தில் பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக மான்யம் பெறும் இல் லங்கள் 4 செயல்பட்டு வருகின் றன. 1985-86ஆம் கல்வியாண்டில் ரூ. 59,000 மான்யமாக வழங்கப் பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பின ரான சலவையாளர்கள், முடி திருத்துவோர், கல்லுடைப்போர் களுக்குச் சுய வேலைக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற் காகவும், இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1985-86ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட வாறு இலவசத் தொழிற் கருவி கள் வழங்கப்பட்டுள்ளன.

சலவைப் பெட்டி 100; சவரப் பெட்டி 30; கல்லுடைக்கும் கருவிகள் 25.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், அண்ணா மாவட்டத்தில் மலைப் பகுதியில் சம உயரத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்தின் கீழ், 1265 எக்டேர் பரப்பில் ரூ. 62.34 இலட்சம் செலவில் தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

நிலப்பரப்புப் பகுதிகளில் சம உயரத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்தின்கீழ், 3122 எக்டேர் பரப்பில் ரூ. 17.68 இலட்சம் செலவில், தடுப்புச் சுவர் கட்டப் பட்டுள்ளது.

1,069 எக்டேர் பரப்பில் 10.59 இலட்சம் செலவில், இயந் திரக் கலப்பை கொண்டு உழும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிலத்தைச் சம அளவில் சமப் படுத்தும் வகையில் 62 எக் டேர் பரப்பு ரூ. 2.05 இலட்சம் செலவில் சமதளப் படுத்தப்பட் டுள்ளது.

**குழாய் பதித்தல்**

நிலத்தடியில் குழாய் பதித்துப் பயிர் செய்யும் வகையில், 51 எக்டேர் பரப்பில் ரூ. 1.72 இலட்சம் செலவில் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.

அண்ணா மாவட்டத்தில் கடந்த ஓராண்டில் மட்டும் பாசன வசதியை மேம்படுத்த 106 தடுப்பு அணைகள் ரூ. 4.39 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன.

காடுகள் வளர்க்கும் திட்டத் தின் கீழ் 39 எக்டேர் பரப்பில் ரூ. 0.35 இலட்சம் செலவில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

தனியார் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ், 104 குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. 203 குழாய்க் கிணறுகளும் 236 கிணறுகளும் ஆழப்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத் தின் கீழ், கடந்த ஓராண்டில் அண்ணா மாவட்டத்தில் 20 கழிவுநீர்க் குட்டைகள் ரூ. 20 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளன.

# வளர்ச்சிப் பணிகள்

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மூலம் 10,806 பெண்களுக்கும், 4,658 ஆண்களுக்கும் குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. மேலும், 7,098 பெண்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது.

தேசிய கரிம வாயு அமைக்கும் திட்டத்தின்கீழ், 904 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது அரசின் குறியீட்டினை மிஞ்சிய சாதனையாகும்.

சூளா அடுப்புகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், அரசின் குறியீட்டளவான 4,200 அடுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அண்ணா மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஓராண்டில் ரூ. 525.96 இலட்சம் சிறுசேமிப்பு வசூல் செய்து சாதனை செய்துள்ளது. மேலும் வளரும் சேமிப்பில் 88,679 கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு, குறியீட்டினை மிஞ்சியுள்ளது.

இம்மாவட்டத்தில் 2,342 கை பம்புகளும், 792 விசைப் பம்புகளும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் பழுதுகள் ஏற்படின் உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பொருத்துநரும்கூடுதலாக ஒரு உதவியாளரும் நியமிக்கப்பட்டு நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அண்ணா மாவட்டம் உருவாக்கப்பட்ட ஓராண்டுக் காலத்தில், 754 நபர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியினைப் போக்க, போர்க்கால நடவடிக்கைகள் மேற்கொண்டு, கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டுள்ளன:

1) இம்மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள 256 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் வேலையில், இதுவரை 185 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள 71 வேலைகளையும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரைவினில் செய்து முடிக்க நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2) 320 கிணறுகள் ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள அரசினால் அனுமதிக்கப்பட்டதில், இதுவரை 304 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர 16 வேலைகளை விரைவினில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

3) மேற்கண்ட பணிகளுக்கு ரூ. 17.45 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. அதில் இதுவரை ரூ. 10.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

4) இவ்வாண்டில் 3 குடிநீர்க் கிணறுகள் தோண்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, முடிவு பெறும் நிலையில் உள்ளது.

1985-86ஆம் ஆண்டில் நிறுவனங்களில் 64 கழிப்பிடங்களும், தனியார் வீடுகளில் 134 கழிப்பிடங்களும் கட்டுவதற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறியீடுகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. நிறுவனங்களுக்கு ரூ.93,443 யுனிசெப் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது தனியார் வீடுகளில் கட்டப்பட்ட கழிப்பிடங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 1,11,510. இதில் 40 விழுக்காடு யுனிசெப் பங்குத் தொகையும், 40 விழுக்காடு அரசு பங்குத் தொகையும், மற்றும் 20 விழுக்காடு தனியார் பங்குத் தொகையும் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 26 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், 91 நபர்களுக்குக் காதுகேட்கும்கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.



**கிராமப்புறத் திட்டங்கள்**

1) ஸ்தல சாலை மானியத்தின் கீழ், ரூ. 12.73 இலட்சம் செலவு செய்யப்பட்டு, இம்மாவட்டத்தில் உள்ள கிராமப்புறச் சாலைகள் நன்கு பராமரிக்கப்பட்டுள்ளன.

2) ரூ. 8.8 இலட்சம் செலவில் இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

3) ரூ. 5.6 இலட்சம் செலவில் கூடுதலாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டி, பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4) கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்திற்காக இவ்வாண்டில் ரூ.1.85 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.



# கல்விப் பணி

அண்ணா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்,
ஆரம்ப நாள் : 15—9—85.

புதிய பள்ளிகள் :

சமுத்திராபட்டி மற்றும் மார்க்கம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன.

13 ஆரம்பப் பள்ளிகள் இவ்வாண்டில் புதிதாகத் துவக்கப்பட்டன.

முதலமைச்சர் கல்வி சத்துணவு :

அண்ணா மாவட்டத்தில் அனைத்து நிர்வாகத்திலும் மொத்தம் 1,96,300 மாணவ மாணவிகள் சத்துணவுத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

இலவசச் சீருடை :

**1,11,431 மாணவர்களுக்கும், 84,800 மாணவிகளுக்கும் இலவசச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.**

**இலவசப் புத்தகம்:**

**1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இலவசப் பாடப் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது.**

மாணவர் சேர்க்கை :

1985-86-ம் ஆண்டு அனைத்துப் பள்ளிகளிலும் 10,827 மாணவ, மாணவிகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| அண்ணா மாவட்டத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை | | 680 |
| உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | | 23 |
| மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | | 14 |
| மாணவர்கள் | | 1,05,595 |
| மாணவிகள் | | 71,668 |
| மொத்தம் : | | 1,77,263 |
| கல்லூரிகள் : | ஆண்கள் | 2 |
| | பெண்கள் | 2 |
| பொறியியல் கல்லூரிகள்: | | 2 |
| பாலிடெக்னிக் : | ஆண் | 3 |
| | பெண் | 1 |
| ஐ. டி. ஐ. : | | 2 |

## அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல்



பெண்களின் உரிமை மற்றும் முன்னேற்றத்திற்காக முழு ஆதரவு தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கி வைக்கும் போது, பெண்களுக்கெனத் தமிழ்நாட்டில் ஒரு தனிப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டத்தை அறிவித்தார்.

அதன்படி, பெண்கள் பல்கலைக் கழகம் 1984-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் தேதி தொடங்கப்பட்டது. இப் பல்கலைக் கழகம் பெண்கள் சம்பந்தப்பட்ட கல்வியில் மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும், மகளிர் நலம் பற்றிய திட்டங்களுக்கு ஆதரவு நல்கவும் அமைக்கப்பட்டது.

இப் பல்கலைக் கழகம் மற்ற பல்கலைக் கழகங்களிலிருந்து மிகவும்மாறுபட்டது. பட்டங்கள் வழங்குவதற்காகக் கற்பிப்பதோ அல்லது ஆராய்ச்சி செய்ய உதவுவதோ மட்டும் இதன் குறிக்கோள் அல்ல. பாரதி கூறிய சரிநிகர் சமானம் என்ற நிலையை மகளிர் அடைய என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆராய்ச்சி செய்வதும், அறிக்கைகள் அனுப்புவதும், தொடர்ந்து ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் சொல்வதும் ஆகும்.

# போக்குவரத்து வசதிகள்



அண்ணா மாவட்டம் அமைக்கப்பெற்ற கடந்த ஓராண்டில் போக்குவரத்துத் துறையினரால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகள் விவரம்:

15-9-85 அன்றுள்ள நிலவரப்படி, பொது மக்களின் சேவைக்காக இயக்கப்பட்ட பேருந்துகளின் விவரம் :

| | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|
| நகரப் பேருந்துகள் | 157 | 104 |
| வெளியூர்பபேருந்துகள் | 193 | 178 |
| விரைவுப் பேருந்துகள் | இல்லை | 4 |

கடந்த ஓராண்டுக் காலத்தில் கூடுதலாக இயக்கப்பட்ட பேருந்துகளின் விவரம் :—

பொதுத்துறை :

| | |
|---|---|
| நகரப் பேருந்துகள் | 22 |
| வெளியூர்ப்பேருந்துகள் | 3 |

தனியார்துறை:

| | |
|---|---|
| நகரப் பேருந்து | 1 |

மேற்கண்ட 25 பேருந்துகளும் மொத்தம் 812.6 கி.மீ. தூரமுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புறத் தடங்களில் ஓட்டப்படுகின்றன. இதுவரை போக்குவரத்து வசதி செய்யப் படாத சுமார் 28 கிராமங்களுக்கு நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மொத்த தூரம் 32.6 கி.மீ. ஆகும்.




அண்ணா மாவட்டத்தில் பேருந்துகள் செல்லத் தகுதியான சாலைகள் இருந்தும், பேருந்து வசதி பெறாத கிராமங்கள் பற்றிக் கணக்கீடு செய்யப் பெற்று வருகின்றது. பெரும்பாலான கிராமங்களில் சரியான சாலை வசதி இல்லாததால் பேருந்து வசதி அளிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட கிராமங்கள் பற்றியும் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இவ்விதம் கிராமப் பகுதிகளுக்குப் படிப் படியாக விரைவில் பேருந்து வசதிகள் அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்ணா மாவட்டத் துவக்க விழாவின் பொழுது,15-9-85 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல்லைத் தலைமை இருப்பிடமாகக் கொண்டு புதிதாக ஒரு போக்குவரத்துக் கழகம் செயல்படும் என்று அறிவித்ததின்படி 1-4-86 முதல் 'இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் இப் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது. அண்ணா மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள பெரியகுளம் வருவாய்க் கோட்டப் பகுதியை உள்ளடக்கி, இப் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை இயக்கி வருகிறது.

இப்போக்குவரத்துக் கழகம் துவக்கப் பட்ட பின்பு 22 பேருந்துகள் கூடுதலாக இயக்கப்பட்டு, 31 கிராமங்களில் வாழும் 41,000 மக்களுக்குப் பேருந்து வசதி செய்யப் பட்டுள்ளது. 176 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

மாவட்டத் தலைநகராகிய திண்டுக் கல்லிலிருந்து ஈரோடு, குற்றாலம், காரைக் குடி, திருச்சி, கம்பம் ஆகிய ஊர்களுக்கும், மற்றும் கம்பம், கொடைக்கானல், பழனி யிலிருந்து காரைக்குடி, சத்தியமங்கலம் முதலிய ஊர்களுக்கும் நேரடிப் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

இன்னும் பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கும், திண்டுக்கல்லிலிருந்து பல முக்கிய, பெரிய நகரங்களுக்கும் நேரடிப் போக்குவரத்து வசதி செய்வதற்குத் திட்டங்கள் உள்ளன.

ஓட்டுநர் பயிற்சி பெறுவதற்குப் பயிற்சிப் பள்ளி ஒன்று துவங்கத் திட்டம் உள்ளது.

திண்டுக்கல்-நத்தம் சாலையில் தொழிலாளர்களுக்கான 86 குடியிருப்புகளுக்குக் கட்டட வேலைகள் துவக்கப்பட்டு,வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# கூட்டுறவு வளர்ச்சி

அண்ணா மாவட்டத்தில் கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம் 3-2-86 முதல் செயல்பட்டு வருகிறது. அண்ணா மண்டல இணைப் பதிவாளர் கட்டுப்பாட்டில் 197 கூட்டுறவு விவசாய சேவை சங்கங்களும், 4 கூட்டுறவு நகர வங்கிகளும், 6 கூட்டுறவு நிலவள வங்கிகளும், 17 மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளும் செயல்பட்டு வருகின்றன.

மேலும் மாவட்ட அளவிலான திண்டுக்கல் நுகர்வோர் மொத்த விற்பனைப் பண்டக



சாலை ஒன்றும், 21 கூட்டுறவுப் பண்டக சாலைகளும், 76 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் செயல்பட்டு வருகின்றன.

பெரிய அளவிலான கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஐந்தும், 15 காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 6 கூட்டுறவு நிலவள வங்கிகளும், 2 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

மேலும் ஏழை மக்கள் நல்வாழ்வுக்காக இம் மண்டலத்தில் 5 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு உதவிடும் வண்ணம், திண்டுக்கல் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. அதன் மூலம் உறுப்பினர்க்கு ரூ. 50,000 நிதியுதவி அளிக்கப்பட்டு, விசை பொருந்திய சைக்கிள் ரிக்ஷாக்கள் இதுவரை 35 செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கூட்டுறவு நகர வங்கிகள் அரசின் முக்கியத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னணியில் நிற்கின்றன. இம் மண்டலத்திற்கு ரூ. 190 இலட்சம் நகைக் கடன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.107.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதனால், 4399 மக்கள் பயன்பெற்றுள்ளனர்.

அரசின் மற்றுமொரு முக்கியக் கொள்கையான நலிவுற்ற பிரிவினருக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்குவதை முக்கிய பணியாகக் கொண்டுள்ள நகர வங்கிகள், ரூ. 0.11 இலட்சம் வழங்கியுள்ளன.

இது தவிர நகர வங்கிகள் மூலம் சிறு தொழில் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு விவசாய சேவை சங்கங்களில் ஆதிதிராவிடர் நல்வாழ்வுக்காக ஆதிதிராவிடர் விவசாயிகளுக்குப் பங்கு மூலதனம் ரூ. 100 வீதம் 400 பேருக்கு 40,000 ரூபாய்க்கு அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் பங்குத் தொகை உயர்வாக ரூ. 50, 1986-87-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது இவ்வாறு ஆதிதிராவிடர் வாழ்க்கைத் தரம் உயரக் கூட்டுறவுத் துறை உதவி புரிந்துள்ளது.



இம் மண்டலத்திலுள்ள மாவட்ட அளவிலான பெரிய கூட்டுறவுப் பண்டகசாலையான திண்டுக்கல் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, நகரில் பல இடங்களில் சிறப்புச் சிற்றங்காடிகளை நிறுவி, தனது சேவையைத் திறம்படச் செய்து வருகிறது.

ஒட்டன்சத்திரம் நகர மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஒட்டன்சத்திரம் அருகே அம்பிளிகை என்ற இடத்தில் புதிதாகத் தனது கிளையைத் துவக்கித் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இப்பண்டகசாலைக்குத் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்க ரூ. 1 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இம் மண்டலத்தில் மொத்தம் 498 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு, கிராமப்புறங்களில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

### கூட்டுறவு வங்கியின் பணிகள்

அண்ணா மாவட்டத்தில் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக கடந்த நிதியாண்டில் (1985-86: ஏப்ரல் 85 முதல் மார்ச் 86 முடிய) வழங்கப்பட்ட கடன்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| கடன் விவரம் | பயனடைந்தோர் எண்ணிக்கை | பட்டுவாடா செய்த கடன் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| குறுகிய காலப் பயிர்க் கடன் | 22,494 | 407.70 |
| கலம் 1ல் உள்ளவற்றில் நலிவுற்றவர்களுக்கு வழங்கியது | 9,013 | 190.27 |
| மத்தியகால வேளாண்மைக் கடன் | 2,322 | 75.21 |
| பெருத்த நிதித் திட்டத்தின்கீழ் (நீண்டகாலக் கடன்) | 203 | 13.24 |
| நகைக்கடன்: | | |
| விவசாய சேவை சங்கம் மூலமாக | 6,123 | 135.26 |
| மத்திய வங்கி கிளைகள் மூலமாக | 2,885 | 79.98 |

### கிராமிய வீட்டு வுசதித் திட்டம்

கிராமப் புறங்களில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களின் குடியிருப்பு வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் 1977ஆம் ஆண்டு கிராமிய வீட்டு வசதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை நிறைவேற்ற அண்ணா மாவட்டத்தில் கீழ்க்கண்ட வட்ட மற்றும் கோட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

| சங்கத்தின் பெயர் | தலைமையிடம் |
|---|---|
| பழனிவட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | பழனி |
| திண்டுக்கல்கோட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | சின்னாளபட்டி |

## உயிர் இருந்தென்ன? போயென்ன?

**1968** டிசம்பரில், சென்னை மாநிலத்துக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சட்டப்படி சூட்டப் பட்டது. இதற்கென மாபெரும் விழாவொன்று சென்னை நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அண்ணாவின் உடலோ முழுமையாகக் குண மடையாத நிலை. "முழு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று மருத்துவர்கள் கண்டிப்பாகச் சொல்லியிருந்தும் கேட்டாரில்லை. "தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் தாம் கலந்து கொள்ளாதிருப்பதா?" என்று எண்ணி, விழா விலும் கலந்து பேருரையாற்றினார்.

மருத்துவர்கள் தடுத்தார்கள். வீட்டிலும் போகவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களையும் மீறி, "இத்தகு விழாவில் கலந்து கொள்ளாத உடம்பில் உயிர் இருந்தென்ன போயென்ன?' என்று சொல்லி விட்டுத்தான் இங்கு வந்திருக்கிறேன்" என்று அண்ணா பேசசைத் தொடர்ந்தார். தமிழ் மொழியினிடத் தும், தமிழ்நாட்டினிடத்தும் அவருக்குண்டான ஆர்வந்தான் எத்தகையது பார்த்தீர்களா?

| | |
|---|---|
| வேடசந்தூர்வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | வேடசந்தூர் |
| நிலக்கோட்டைவட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | நிலக்கோட்டை |

1985-86-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், அண்ணா மாவட்டத்திற்கு 299 வீடுகள் கட்ட கீழ்க்கண்டவாறு குறியீடு நிர்ணயிக்கப் பட்டது. குறியீடு முழுமையாக 1985-86-ஆம் நிதியாண்டில் எய்தப் பெற்றுள்ளது.

| சங்கத்தின் பெயர் | குறியீடு: வீடுகள் | சாதனை: வீடுகள் |
|---|---|---|
| பழனிவட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் | 35 | 35 |
| திண்டுக்கல் கோட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் | 50 | 50 |
| வேடசந்தூர் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் | 64 | 64 |
| நிலக்கோட்டைவட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் | 150 | 150 |

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் குடும்பத்திற்கு ஒரு வீடு அளிக்கும் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களுக்கிணங்க பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் ஆகியோருக்காக அடிப் படை வசதிகளுடன் தனித்தனி வடிவமைப்பு களில் வீடுகளைக் கட்டித் தருகின்றது.

அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல் ஒரு பெரிய நகரம். மேலும் தொழில் வளர்ச்சியடைந்த நகரமானதாலும் மக்கள் பெருக்கம் அதிகமான நகரமானதா லும் தமிழக அரசானது திண்டுக்கல் நகரத் தில் வீட்டு வசதியினைப் பெருக்கத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தைப் பணித்தது.

தமிழக அரசின் கருத்தினைச் செய லாக்கும் வகையில் வீட்டு வசதி வாரியம் இது வரை 182 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, அதில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு 40 வீடுகளும், குறைந்த வருவாயினருக்கு 74 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்கு 100 வீடுகளும், மற்றும் உயர் வருவாயினருக்கு 24 வீடுகளும் திட்ட மதிப்பு ரூ. 161 இலட்சத் தில் கட்டி முடித்துள்ளது.

மேலும் கட்டம் இரண்டில் நடுத்தர வருவாயினருக்கு 180 குடியிருப்புகளும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 25 குடியிருப்புகளும், ரூ. 74 இலட்ச மதிப்பீட்டில் கட்டப் பட்டு வருகின்றன. ரூ. 178 இலட்ச மதிப் பீட்டில் நடுத்தர வருவாயினருக்கு 204 குடி யிருப்புகளும், மற்றும் உயர் வருவாயினருக்கு 96 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின் றன.

இது தவிர, திண்டுக்கல்லில், வரும் ஆண்டு களில் வீட்டு வசதியைப் பெருக்க நடுத்தர வருவாயினருக்கு 924 குடியிருப்புகளும், உயர் வருவாயினருக்கு 340 குடியிருப்புகளும், திட்ட மதிப்பு ரூ. 858 இலட்சத்தில் கட்ட உத்தேசிக் கப்பட்டு, அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தவிர, மேலும் சுமார் 381 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அதற் கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

தமிழக அரசானது அரசு ஊழியரின் வீட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு, அரசு ஊழியர்கள் குடியிருப்பு களைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பணித்துள்ளது. திண்டுக் கல்லில் ஏற்கனவே 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் ரூ. 130 இலட்ச மதிப்பீட்டில் 114 அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, நடப்பு ஆண்டில் ஒதுக் கீடு செய்யப்பட்டன. மேலும் 84 வீடுகள் ரூ. 56 இலட்சத்தில் கட்டி முடிக்கும் தறு வாயில் உள்ளன.

இது தவிர கூட்டுறவுச் சங்கங்களுக்கு 'ஹட்கோ' நிதியுதவியுடன் உறுப்பினர் கட்டு மான மதிப்பீட்டில் 30 சதம் பணம் பெற்றுக் கொண்டு வீடுகளைக் கட்டும் திட்டமும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் நிறை வேற்றப்படுகிறது. தற்சமயம் ஒட்டன்சத்தி ரத்தில் இதன் அடிப்படையில் ரூ. 102 இலட் சம் செலவில் 180 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்பட்டு வருகின்றன.

அண்ணா மாவட்ட வருவாய்க் கோட் டங்களில் ஒன்றான கொடைக்கானலில் 6 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 480 குடி யிருப்புகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, அதற்கான பூர்வாங்க வேலைகள் நடை பெற்றுக்கொண்டு இருக்கின்றன. மேலும் நிலக்கோட்டையில் 50 ஏக்கர் நிலமும், பழனியில் 34 ஏக்கர் நிலமும் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



# மருத்துவத் துறையில் வளர்ச்சி

திண்டுக்கல் தலைமை மருத்துவ மனை 277 படுக்கை வசதிகளுடன் இருந்தது. கடந்த ஓராண்டில் அது 325 படுக்கைகள் உள்ளதாக உயர்த்தப்பட்டது.

தீவிர இருதய சிகிச்சைப் பிரிவினை உள்ளடக்கிய 48 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம் ரூ. 6.37 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. இதில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவிற்காக 4 படுக்கைகள் ஒதுக்கப்பட்டு, ஏறக்குறைய 1,20,000 ரூபாய் பெறுமான பிரத்தியோகமான கருவிகள் பொருத்தப் பட்டுள்ளன.

அண்ணா மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும், இந்தத் தலைமை மருத்துவமனைக்குமான நிர்வாகச் செயல்பாட்டினைக் கவனித்து இயங்கி வரும் இம்மாவட்ட மருத்துவ அலுவலகத்திற்கு ரூ. 7.10 இலட்சம் செலவில் நிர்வாகப் பணிகளைத் தங்குதடையின்றி ஆற்ற ஒரு நிர்வாகப் பகுதிக் கட்டடம் கட்டப்பட்டு, செவ்வனே செயல்பட்டு வருகிறது.

அண்ணா மாவட்டத்தில் 15 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் 3 கூடுதல் சுகாதார நிலையங்களும் 293 துணைச் சுகாதார நிலையங்களும் உள்ளன.

ஆரம்பச் சுகாதார நிலையத்தில் வெளிநோயாளிகளாகவும், உள்நோயாளிகளாகவும் இருந்து ஓராண்டில் மருத்துவ நிவாரணம் பெற்றவர்களின் எண்ணிக்கை 7.80 இலட்சம்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் திண்டுக்கல் நகரில் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 3,554 ஆகும். 2 வயது முதல் 5 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு கொடுக்கப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்குக் கோதுமை கொடுக்கப்படுகிறது. இதனால் பயனடையும் கர்ப்பிணிப் பெண்களின் மொத்த எண்ணிக்கை 2,888 ஆகும். 6 மாதம் முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சி. எஸ்.எம். மாவு உருண்டை கொடுப்பதில் பயனடையும் குழந்தைகள் 2,716.

மருத்துவ அலுவலர் மற்றும் அவரின்கீழ் 4 தாய்மைத் துணைச் செவிலியர்களை வைத்து, 100 குழந்தைகள் நல மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, மருத்துவ உதவி செய்யப்படுகிறது. இதன்படி 3,602 குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டுள்ளது.

தொண்டை அடைப்பான், கக்குவான், ரணவாத ஜன்னி வராமல் தடுக்க மாதம்தோறும் முத்தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. இதனால்பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 3,387 ஆகும்.

இளம்பிள்ளை வாதம் வராமல் தடுப்பதற்காகப் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப் பட்டுள்ளது. பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 3,389.

**ஊக்குவிப்பு மருந்து (Booster Dose of Polio)**

2வயது முதல் 3 வயது வரையும், 4 வயது முதல் 5 வயது வரையும் உள்ள குழந்தைகள் மூன்று முறை போலியோ சொட்டு மருந்து கொடுக்கப் பட்டவர்களுக்கு மீண்டும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் முறையில் 6,973 குழந்தைகள் பயனடைந் துள்ளார்கள்.

**மணல்வாரி அம்மை தடுப்பூசி**

9 மாதம் முதல் 12 மாதம் வரையிலுள்ள குழந்தைகளுக்கு மணல்வாரி அம்மை வராமல் தடுக்கத் தடுப்பூசி போடப்படுகிறது. அதன்படி பயனடைந்தவர்கள் 691 பேர்.

தொண்டை அடைப்பான் மற்றும் ரணஜன்னி வராமல் தடுப்பதற்காக 2 வயது முதல் 4வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இரண்டு முறை தடுப்பூசி போடப்படுகிறது. இதன் மூலம் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 5,951 ஆகும்.

கர்ப்பிணிப்பெண்களுக்குப் பிரசவ காலத்தில் ரணவாத ஜன்னி வராமல் தடுப்பதற்காகப்போடப்படும் தடுப்பூசி இரண்டு முறையாக 800 கர்ப்பிணிப் பெண்களுக்குப் போடப்பட்டுள்ளது.

6மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 9 முறை ஒவ்வொரு 6 மாதத்திற்கும் ஒரு முறை ஒரு கட்டமாகக் கொடுக்கப்படுகிறது. இதில் பயனடைந்தவர்கள் 10,125 ஆவர்

இது தவிர காய்ச்சல், சளி, சொறி, சிரங்கு, வயிற்றுப் போக்கு, குடற்புழு நீக்கு மருந்து மற்றும் சிறிய காயங்களுக்குப் போடக்கூடிய மருந்துகள் 100 குழந்தைகள் நல மையங்களில் வைக்கப்பட்டு, மருத்துவ அலுவலர் மற்றும் தாய்மைத் துணை செவிலியர்களின் உதவிகளுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள் 100 குழந்தைகள் மையங்களின் மூலம் 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்களுக்குச் சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. மேலும் தாய்ப்பாலின் முக்கியத்துவம், இணை உணவின் முக்கியத்துவம், நோய் வரும் காலங்களில் குழந்தைகளைப்பராமரிக்கும் விதம் நோய் வராமல் தடுக்கும் தடுப்பு வைத்திய முறைகள், சுற்றுப்புறச் சுகாதாரம் ஆகியவை கற்றுத்தரப் படுகின்றன.

# சமூக நலத்திட்டங்கள்



விதவைகளை ஊக்குவிப்பதற்காக, மறுமணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 18 வயது முதல் 30 வயது வரையுள்ள விதவைகள் இதில் பயன் பெறுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் 1985-86 ஆம்ஆண்டிற்குஅண்ணா மாவட்டத்திற்குத் தலா ரூ.5,000 வீதம் 7 தம்பதியர்க்கு ரூ. 35,000 வழங்கப்பட்டுள்ளது.

விதவை, ஆதரவற்ற பெண், உடல் ஊனமுற்ற ஆண், பெண் ஆகிய 15 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, தையல் இயந்திரங்கள் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 349 பேர்களுக்குச் செவிப்புலன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்காக குழந்தைகள் பராமரிப்பு இல்லம் ஒன்று திண்டுக்கல்லில் சாஸ்திரி நகரில் இயங்கி வருகிறது. பெண் குழந்தைகள் 18 வயது வரையிலும், ஆண் குழந்தைகள் 10 வயது வரையிலும் இந்த இல்லத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு கல்வி பயிலும் வசதி அளித்து வருகிறது. இவர்களுக்கு உடை, உணவு, புத்தகம் யாவும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. தற்சமயம் இல்லத்தில் 9 ஆண் குழந்தைகளும், 65 பெண் குழந்தைகளும் உள்ளனர்.

16 முதல் 30 வயதுடைய, ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்குள் உள்ள ஏழைப் பெண்கள் எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றவர்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், பழனியில் அன்னை இந்திரா தட்டச்சுப் பயிற்சி நிலையத்தில் 15 பெண்கள் தட்டச்சுப் பயிற்சி பெற்று வருகிறார்கள். பயிற்சிக் காலம் 10 மாதம் ஆகும். நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் இவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றவர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், சிறு தொழில்கள் நடத்த வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 122 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் கடன் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது வரையில் 44 உடல் ஊனமுற்ற நபர்கள் வங்கிகளில் கடன் பெற்றுள்ளார்கள்.

ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்கு ரூ. 1,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 10 ஆதரவற்ற பெண்களுக்கு ரூபாய் 1,000 வீதம் ரூ.10,000 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட தன்னிச்சை நிறுவனங்கள் மூலம் அனாதைக் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் நடத்துவதற்கும், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கும் சமூகநலத் துறை மூலம் நிதியுதவி அளிக்கப்படும்.

1. காந்திசேவா சங்கம்— சத்திரப்பட்டி
2. சேவிகாஸ்ரமம்— காந்திகிராமம்

18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட மகளிர் படிக்கவும், தொழிற்பயிற்சி பெறவும் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 60 நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

சமூகநலத் துறையின் கீழ்-மகளிர் முன்னேற்றத்திற்காக 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் 420 மகளிர் மன்றங்கள் சுமார் 12,600 உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றன. இம்மகளிர் மன்றம் மூலம் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளித்தல், முக்கிய அரசுத் திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறல், குழந்தைகள் பராமரிப்புப்பற்றி எடுத்துக்கூறல், காய்கறித் தோட்டங்கள் போடச் செய்தல், இதர கைவேலைகள் செய்தல் போன்ற பணிகள் நடைபெறுகின்றன.



# பேரூராட்சிகள் சாதனை

அண்ணா மாவட்டம் ஏற்படுத்தப்பட்ட போது இருந்த பேரூராட்சிகள்:

தேர்வு நிலை 10; முதல்நிலை 12; இரண்டாம் நிலை 2. ஆக மொத்தம் 24.

அண்ணா மாவட்டத்தில் உள்ள நான்கு முதல் நிலைப்பேரூராட்சிகள், தேர்வுநிலைப் பேரூராட்சிகளாகச் சென்ற ஆண்டில் நிலை உயர்த்தப்பட்டன. ஆகவே தற்போதுள்ள பேரூராட்சிகள் நிலவரம்:

தேர்வு நிலை 14; முதல்நிலை 8; இரண்டாம் நிலை 2 ஆக மொத்தம் 24.

1985-86ல் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் கீழ்க்கண்ட ஐந்து பேரூராட்சிகளில் ரூ. 25,00,000- மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப் பட்டு, இதுவரை கீழ்க்கண்டவாறு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

சென்ற ஆண்டு வடிகால்கள் கட்டுவதற்காக ரூ.1,50,000 அரசு 1/3 மான்யம் கீழ்க்கண்ட பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டது.

சின்னாளபட்டி ரூ. 30,000; வத்தலக்குண்டு ரூ. 30,000; நிலக்கோட்டை ரூ. 30,000: வேடசந்தூர் ரூ. 30,000; நத்தம் ரூ. 30,000.

பேரூராட்சிகளில் மொத்தம் 799 ஆழ்குழாய்க் கிணறுகளும், 117 மின்சாரப் பம்புகளும் குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்தன. இவைகளைப் பராமரிப்பதற்காக ரூ. 3 இலட்சம் மான்யமாகச் சென்ற ஆண்டு பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக 36 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டதில், 21 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

| பேரூராட்சியின் பெயர் | எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் | ஒதுக்கீடு | முடிக்கப் பட்டவை | செலவு |
|---|---|---|---|---|
| | | ரூபாய் | | ரூபாய் |
| அமமயநாயக்கனூர் | 27 | 5,00,000 | 20 | 1,56,547 |
| ஆயக்குடி | 23 | 5,00,000 | 22 | 3,74,100 |
| அய்யம்பாளையம் | 24 | 5,00,000 | 23 | 1,76,891 |
| எரியோடு | 22 | 5,00,000 | 10 | 3,77,018 |
| பண்ணைக்காடு | 21 | 5,00,000 | 20 | 3,32,090 |
| | 117 | 25,00,000 | 95 | 14,16,646 |

சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு என தன்னிறைவுத் திட்டம் வழங்கப்பட்டு ரூ. 2.92 இலட்சம் ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு, பல பணிகள் முடிக்கப்பட்டன.

ஆயக்குடி, அய்யம்பாளையம், பட்டிவீரன்பட்டி, வேடசந்தூர், ரெனூர், ஸ்ரீராமபுரம் ஆகிய பேரூராட்சிகளில்குடிநீர்த்திட்டப் பணிகள் அனுமதிக்கப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1986-87ல், அகரம், சித்தையன் கோட்டை, கன்னிவாடி, வடமதுரை, ஒட்டன்சத்திரம், நெய்க்காரப்பட்டி ஆகிய 6 பேரூராட்சிகளில் ரூ. 11 இலட்சம் செலவில் 32 திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒட்டன்சத்திரம் பேரூராட்சியில் ரூ. 9.45 இலட்சம் நிதி உதவியில் 24 கடைகள் மற்றும் விடுதிகள் கட்டிமுடிக்கப் பட்டு, 17.8.86ல் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேடசந்தூர் பேரூராட்சியில் ரூ. 20 இலட்சம் செலவில் பேருந்து நிலைய வளர்ச்சித் திட்டம் மற்றும் கடைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

1985-86ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்கள் ஈமச்சடங்கிற்காக மான்யம் ரூ. 22,000 வழங்கப்பட்டது.

பேரூராட்சிகளில் தூசிபடியா சாலை அமைப்பதற்காக ரூ. 40,000 வழங்கப்பட்டுள்ளது.

வறட்சியின் காரணமாகப் பேரூராட்சிகளில் ரூ. 4.6 இலட்சம் செலவில் 150 கிணறுகளை ஆழப் படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# பயன்மிகு பழநி திருக்கோயில் பணிகள்

பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் அதிக வருமானம் பெறும் திருக்கோயிலாகும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும், பெரும்பான்மையான பக்தர்கள் கூடும் திருத்தலமாகும். இத்திருக்கோயிலின் சென்ற பசலி ஆண்டு வருமானம் ரூ. 3,33,37,240 ஆகும். இதில் 33 சதவீதம் உண்டியல் மூலமாகப் பெறப்படும் வருவாயாகும். இந்த பசலி ஆண்டு எதிர்பார்க்கும் வருமானம் 4 கோடி ஆகும். இத்திருக்கோயிலின் பல முதலீடுகளில் ரூ. 6½ கோடி அளவில் உபரி நிதி சேமிப்பாக உள்ளது.

நடப்பு ஆண்டில் அதாவது கடந்த 11 மாதங்களில் வந்த வருமானத்தில் செலவு போக, 1,23,73,000 ரூபாய் உபரி நிதி சேமிப்பாகப் போடப்பட்டுள்ளது. இவை நீங்கலாக கிராமப் புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டத்திற்காக இத்திருக்கோயில் நிதியினின்று ரூ. 1 கோடி தனி நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாடு ஆலய மேம்பாட்டுந் திட்ட நிதி, தமிழகத் திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித்திட்டம் ஆகிய இரு திட்டங்களுமாக இத்திருக்கோயில் நிதியினின்று ரூ. 1.68 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள கிராமப் புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் பல பழுதடைந்து திருப்பணி செய்ய நிதி வசதி இன்றி உள்ளன. இக்கோயில்களைப் பழுபார்த்து திருப்பணி செய்வதற்குத் திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரந்தர வைப்பு நிதியாக வங்கிகளில் மூலதனம் செய்யப்பட்டு அதனின்று கிடைக்கும் வட்டி வருவாயினின்றும் கிராமப் புறக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 1985ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள 85 திருக்கோயில்களுடன் மேலும் 65 கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 150 திருக்கோயில்களின் திருப்பணிக்காக சென்னை அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் 13.3.86 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் ரூ.15இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பயனடையத்தக்க ஆலயங்களைக் கணக்கிட்டு, தொடர்ந்து நிதி உதவி அளித்துத் திருப்பணி செய்ய நடவடிக்கைகள் உள்ளன.

இத்திருக்கோயிலின் சமுதாய நலப்பணிகளாகக் கீழே கண்ட கல்வி நிலையங்கள் துவங்கப்பெற்று நடைபெறுகின்றன.

அருள்மிகு பழநி ஆண்டவர் ஆண்கள் கலைக்கல்லூரி, அருள்மிகு பழநி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, அருள்மிகு பழநி ஆண்டவர்ஆண்கள்பாலிடெக்னிக் அருள்மிகு பழநி ஆண்டவர்பெண்கள் பாலிடெக்னிக், அருள்மிகு பழநி ஆண்டவர் மெட்ரிகுலேசன் பள்ளி, அருள்மிகு பழநி ஆண்டவர் தமிழ் போதனா முறைப் பள்ளி, அருள்மிகு பழநி ஆண்டவர் செவிடர், ஊமையர் பள்ளி, அன்பு இல்லம், பாலர் காப்பகம், நாதஸ்வரப் பள்ளி, தவில் பள்ளி, வேதசிவ ஆகம பாடசாலை, மருத்துவமனை, சித்த வைத்திய சாலை, நூலகம், சிறுகுடில்கள் மற்றும் சத்திரங்கள்.





# ஆதிதிராவிடர் நலன்

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ரூபாய் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 648 மதிப்பீட்டில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

* ஆதிதிராவிடர் வகுப்பைச்சேர்ந்த மாணவ, மாணவியர்க்கு மேல்படிப்பு உதவித் தொகையாக ரூ. 5 லட்சத்து 99 ஆயிரத்து 773 வழங்கப்பட்டுள்ளது.

* ஆதிதிராவிடர் வகுப்பைச்சேர்ந்த மாணவ, மாணவியர்க்குப் பள்ளிப் படிப்பு உதவித் தொகையாக ரூ. 42 ஆயிரத்து 69 வழங்கப்பட்டுள்ளது.

* ஆதிதிராவிடர்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்கு மான்யத் தொகையாக ரூ. 16,200 வழங்கப்பட்டுள்ளது.

* ஆதிதிராவிடர்களுக்குப் புதிய கிணறுகள் தோண்டுவதற்கு நிலவள வங்கி மூலம் ரூ. 11 ஆயிரம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

* வீட்டுமனை இல்லாத ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கிய வகையில் ரூ. 2 லட்சத்து 11 ஆயிரத்து 860செலவு செய்யப்பட்டுள்ளது.

* ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்குத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயில உதவித் தொகையாக ரூ. 3 ஆயிரத்து 451 அளிக்கப்பட்டுள்ளது.

* கலப்பு மணம் செய்து கொண்ட தம்பதியர்களுக்குப் பரிசுத் தொகையாக ரூ. 34 ஆயிரத்து 400 வழங்கப்பட்டுள்ளது.

* ஆதிதிராவிடர்களின் காலனிகளில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்ட வகையில் ரூ. 10 ஆயிரத்து 67 செலவு செய்யப்பட்டுள்ளது.

* ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குப் பாதை வசதி மற்றும் மயானத்திற்குப் போகும் பாதைகள் அமைத்துக் கொடுக்க ரூ. 11,023 செலவு செய்யப்பட்டுள்ளது.

* கிறித்துவ மதத்திற்கு மதம்மாறிய ஆதிதிராவிடர்களுக்கு உழவு மாடு வாங்குதற்கு மான்யத் தொகையாக மட்டும் ஆயிரத்து 800 வழங்கப்பட்டுள்ளது.

* கிறித்துவ மதத்திற்கு மதம்மாறிய ஆதிதிராவிடர்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க 5 ஆயிரத்து 39 செலவு செய்யப்பட்டுள்ளது.

## அண்ணா மாவட்டம் ஆதரவற்றோருக்கு உதவிடும் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| முதியோர் ஒய்வூதியம் பெறுவோர் | .. | 5,855 |
| விதவைகள் ஒய்வூதியம் பெறுவோர் | .. | 3,306 |
| ஆதரவற்ற விவசாயக் கூலிகள் | .. | 908 |
| உடல் ஊனமுற்றோர் | .. | 661 |
| கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் | .. | 1,971 |

## இலவசப் பட்டாக்கள் பெற்றோர் விவரம்:

| | | |
|---|---|---|
| வீட்டுமனைப் பட்டா | .. | 7882 பேர்கள் |
| நிலப்பட்டா | .. | 249 பேர்கள் |
| வழங்கப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பளவு | .. | 616.85 ஏக்கர் |



# முதலமைச்சர் குழந்தைகள் கல்வி சத்துணவுத் திட்டம்

அண்ணா மாவட்டத்தில் 2,348 குழந்தைகள் கல்வி சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சத்துணவு மையங்களில் 2 முதல் 15 வயது வரையுள்ள 2,55,788 குழந்தைகளும், 8,026 ஒய்வூதியம் பெறுபவர்களும் தினசரி உணவு உண்ண வருகிறார்கள்.

1986-87ஆம் ஆண்டுக்கு 2 கட்டடங்கள் கட்ட ஒதுக்கீடு ரூ.64,000 வரப்பெற்று மேற்படி தொகையை வடமதுரை ஊராட்சி ஒன்றியம் மற்றும் நத்தம் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தலா ரூ32,000 வீதம் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மாவட்டத்தில் முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2,348 சத்துணவு அமைப்பாளர்களும், 4,696 உதவியாளர்களும் வேலைவாய்ப்புப் பெற்று பணிபுரிந்து வருகிறார்கள்


**Carlton Hotel**

Lake Road, Kodaikanal-624 101. Phone : 252/310 Cable : CARLTON

*With Best Compliments from :*

## The Carlton Hotel

On the Lake

KODAIKANAL - 624 101

Telephone No : 252 / 560 to 576

"The pride of Kodai, CARLTON HOTEL, will shortly be India's first 5-star hotel in a hillresort, attracting an influx of holiday - makers, businessmen, conference traffic and tourists from all over India and abroad".

*WITH BEST COMPLIMENTS FROM:*

# UNITED INDIA MACARONI

*Manufactures of :*

**SAVORIT SEMIA AND OTHER PASTA PRODUCTS**

*Factory :*

131, Trichy Road, Dindigul - 624 009.

Phone : 5603 Grams : MONARCH Telex: 440 206 KSP IN

*Head Office ;*

377, Suryanarayana Street, Madras-600 081.

Phone : 552671 Grams : MONARCH Telex : 41-6179 NFM IN



# கால்நடைத் துறையின் பணிகள்

அண்ணா மாவட்டத்திற்கென புதியதாக மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ஒப்பளிக்கப்பட்டு, 13.9.86 முதல் செயல்பட்டு வருகிறது.

நான்கு சார்நிலை அலுவலகங்களும், 4 கால்நடை மருத்துவ மனைகளும், 27 கால்நடை மருந்தகங்களும், 8 கேந்திர கிராம நிலையங்களும், 80 கேந்திர கிராம கிளை நிலையங்களும், ஒரு கால்நடைப் பராமரிப்புக் கிளை நிலையமும், 2 கோழி விரிவாக்க நிலையங்களும் அண்ணா மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

மேற்கண்ட நிலையங்கள் வாயிலாகக் கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சிகிச்சை அளிக்கப்பட்டவை | 3,30,940 |
| காயடிக்கப்பட்டவை | 8,816 |
| தடுப்பூசி போடப்பட்டவை | 3,31,485 |
| செயற்கை முறை கருவூட்டல் | 74,758 |
| கன்றுகள் பிறந்தவை | 20,453 |

திண்டுக்கல் கேந்திர கிராமத் துணை இயக்குநர் கட்டுப்பாட்டில் எட்டு கேந்திர கிராம நிலையங்களும், தலா 10 கேந்திர கிராம கிளை நிலையங்கள் வீதம் ஒவ்வொன்றிலும்தொடர்ச்சியான பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுஉள்ளன. ஒவ்வொரு கிளை நிலையப் பகுதியும் 1000 பருவமடைந்த பசு, எருமைகளை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு கிளை நிலையத்திலும் 1000 பருவமடைந்த பசு எருமைகளுக்குக் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

விந்து சேகரித்துச் செயற்கை முறை கருவூட்டல் பணி செய்வதற்காக எட்டு கேந்திர கிராம மைய நிலையங்களில் 3 கேந்திர கிராம மைய நிலையங்களான திண்டுக்கல் வட்டத்தில் கன்னிவாடி, வேடசந்தூர் வட்டத்தில் வேடசந்தூர் மற்றும் பழனி வட்டத்தில் தொப்பிம்பட்டி ஆகியவற்றில் ஜெர்சி, காங்கேயம், தர்பார்கர் இனப் பொலிகாளைகளும், முர்ரா பொலி கிடாக்களும் பராமரிக்கப்படுகிறது.

ஆடுவளர்ப்புத் திட்டத்தின் கீழ், 54 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆடுவாங்குவதற்குக் கடன்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இந்தச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நேரடியாக நிதி உதவி செய்துள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கோழி அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு வழக்கமான அரசு மான்யத்துடன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி உதவி பெறுகின்றன.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைத் திண்டுக்கல், வேடசந்தூர் மற்றும் நத்தம் தாலுக்காக்களில் ஏற்படுத்தியுள்ளது. ஏறத்தாழ 180 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்கள் திண்டுக்கல் கோட்டத்தில் உள்ளன. தமிழ்நாட்டிலேயே பால் உற்பத்தியில் அண்ணா மாவட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது.

1985-86க்கு இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 50%அரசு மான்யத்துடன் 114 கொல்லைப்புறக் கோழி அலகுகள் அமைக்கஇலக்கு நிர்ணயிக்கப்பட்டு இலக்கு முழுவதுமாக எட்டப்பட்டது.



**With Best**

**Compliments of**

# G. Packirisamy & Bros

Maligai, Big Bazaar,

DINDIGUL.



WE JOIN IN COMMEMORATING THE FIRST ANNIVERSARY OF THE ANNA DISTRICT

# KODAIKANAL PUBLIC SCHOOL

**KODAIKANAL**

**( PHONE : 375 & 534 )**



*A BRANCH OF :*

**KOTAGIRI PUBLIC SCHOOL**

KOTAGIRI.



# கதர் கிராமத் தொழில்கள்

இம்மாவட்டத்தில் தாய்க்குலத்திற்குப் பெருமை தேடித் தரும் வகையில் இந்த அரசின் பேராதரவினால் 23 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 23 கிராமிய நூற்பு நிலையங்களிலும் 810 பெண் நூற்பாளர்கள் நூற்றுப் பயனடைகின்றார்கள். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 12வரை தினக்கூலியாகக் கிடைக்கின்றது. இவ்வகையில் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 26 லட்சம் கூலியாக வழங்கப்படுகிறது.

**கதர் நூல் உற்பத்தி**

அண்ணா மாவட்டத்தைச் சார்ந்த மிகவும் பின் தங்கியுள்ள, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பலவேறு கிராமங்களில் 145 கதர் நெசவாளர்கள் கதர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து வருகின்றார்கள். இந்த நெசவாளர்களுக்குத் தேவையான நெசவுக் கருவிகளும் மானிய அடிப்படையில் வழங்கி அரசு பேருதவி புரிகின்றது. இந்த நெசவாளர்களுக்குத் தினக்கூலி சுமார் ரூ. 25 குறையாமல் கிடைத்து வருகின்றது. இந்தத் தொழிலினால் 145 நலிவுற்ற குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இத்தொழிலினால் இம்மாவட்டத்தில் ரூ. 24.34 லட்சத்திற்குக் கதர் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் 25 லட்சம் கதர் சிட்டங்கள் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அனைத்தும் அண்ணா மாவட்டத்தில் செயல்படும் நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு, கதர் துணிகளாகப் பெறப்பட்டு, அனைத்துக் கதர் அங்காடிகளின் மூலம் விற்பனை செய்து முடிக்கப்பட்டு தன்னிறைவு செய்யப்படுகிறது.

அண்ணா மாவட்டத்தில் எட்டு கதர் அங்காடிகளும், ஒரு சிற்றங்காடியும் செயல்பட்டுவருகின்றன. இந்தக்கதர் அங்காடிகளின் மூலம் கண்கவரும் தரமுள்ள, பருத்தி, கதர் துணிகளும், நவீன முறையில் தயாரிக்கப்படும் பாலி வஸ்திரத் துணிகளும், கதர்ப்பட்டு இரகங்களும் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடாகிய 30 லட்சத்தினையும் தாண்டி 35 லட்சம் எய்தி பெரும் சாதனை புரிந்துள்ளது.

**கிராமத் தொழில் விற்பனை**

அண்ணா மாவட்டத்தில் தரம் மிகுந்த சமையலுக்குப் பயன் பெறும் எண்ணெய் வகைகளும்* மக்கள் விரும்பி வாங்கும் வாசனைச் சோப்பு மற்றும் சலவைச் சோப்புகளும், அரும் மருந்தாகக் கருதப்படும் தேன் வகைகளும், பனைப் பொருட்களும், பல்வேறு நோய்களுக்குச் சிறப்பாகக் கருதப்படும் பனங்கற்கண்டு, பிரஷ் வகைகளும், குக்கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் மட்பாண்ட வகைகளும், மக்கள் போற்றிப் புகழ்ந்து திரும்பி வாங்கப்படும் நவீன டிசைன்களில் உள்ள பிரம்பு சேர் மற்றுமுள்ள பொருட்களும் செய்யப்படுகின்றன.

தமிழகமே போற்றிப் புகழும் வண்ணம் தயாரிக்கப்படும், காலணிகள், மற்றுமுள்ள தோல் பொருட்களும், கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் தரமுள்ள பருப்பு வகைகளும், அரசுத்துறை விநியோகத்திற்குத் தேவையான அட்டை, கோப்பு மற்றும் எழுதும் பேப்பர் வகைகளும், விற்பனை செய்யப்படுகின்றன. இது தவிர வாரியக் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கோரப்பாய் மற்றும் பொம்மை வகைகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படும் கிராமப் பொருட்கள் அனைத்தும் இம்மாவட்டத்திலேயே வருடத்திற்கு ரூ. 14.45 லட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



Telephone No.: 2800 & 381 Telegram : 'RATNA' PALANI

*WITH BEST COMPLIMENTS FROM*

# The Rajaratna Mills Private Limited

**NEIKARAPATTI**

**A. Kalayamputhur Post, Pin. 624615**

**Palani Taluk, Anna District.**

"Spinners of Quality Cotton Yarn "DELUXE YARN"
In Hanks, Double Hanks and Cones"

FOR EFFECTIVE EMPLOYERS AND
CARING PARENTS

TALCO SUPPLIES BEST

DERBY SHOES

SAFETY SHOES

AMMUNITION BOOTS

CHILDREN SHOES.

ASSURED QUALITY

COMPETITIVE PRICE.

TAMILNADU LEATHER
DEVELOPMENT CORPORATION
LIMITED : (A GOVT. OF
TAMILNADU ENTERPRISE)
857, PERIYAR EVR HIGH RD.,
KILPAUK, MADRAS-10.

## அண்ணா ஒரு மகர யாழ்

தேருவோர மக்களுக்கு நானோர் தூதன்!
தில்லிநகர் மாமன்றில் சொன்னீர் அண்ணா!
அருவியென நாடாளும் மன்றம் தன்னில்
ஆற்றியநின் உரையாவும் அறிவின் தேக்கம்!
அறிவார்ந்த பெருந்தகையாம் ராதா கிருஷ்ணன்
ஆசியாவின் பேரொளியாம் அருமை நேரு
செறிவார்ந்தநின் உரையைச் செவி மடுத்துச்
சிந்தைமிக மகிழ்ந்ததெலாம் வரலா றாகும்!

அந்திவேளை வந்துவிட்டால் போதும், வான
அறிவுநிலா மேடையேறி விட்டாற் போலச்
செந்தமிழின் ஒளிசிந்தி எளிய மக்கள்
சிந்தனையை வளர்த்தறிவு வெளிச்சம் தந்தீர்!
சொந்தமிகு அறிவறிந்த தம்பி மாரைச்
சூழ்ந்தவர்க்குப் பகுத்தறிவுச் சுடர ளித்தீர்!
செந்நாவால் இந்நாட்டை வென்று விட்டீர்!
செழும்புலவர் இடைப்பட்ட தமிழை மீட்டீர்!

இன்னும்கொஞ்சம் நீள்தா உமது பேச்(சு) என்று
எல்லோரும் ஏங்குகையில் சட்டென் றந்தோ
பொன்னுரையை ஏன்அண்ணா முடித்து விட்டீர்?
பூந்தென்றல் உயிர்மூச்சேன் நிறுத்திக் கொண்டீர்!
மன்னாதி மன்னரெல்லாம் இருந்தும் என்ன?
மகரயாழே! உமைப்போலப் பேசு தற்கு
இன்னொருவர் இனிமேல்தான் பிறக்க வேண்டும்!
இசையருவி முழக்கம் அண்ணா நினைவைத் தூண்டும்!

—கவிஞர் பல்லவன்





## அரசியலிலே ஓர் அசுணப் பறவை

ஈரோட்டுத் தலைவாழைக் கீழ்க்கன் றாக
இளந்தமிழர் தலைமகனாய் வளர்ந்த ஏந்தல்
போராட்டக் களத்தினிலும் பண்பு மாறாப்
புதுப்பாணிப் புலிப்பாய்ச்சல் காரன்! எந்தப்
பாராட்டும் பதவிகளும் பொருந்து மாறு
பழகுதமிழ் நல்லறிஞன்! அண்ணா என்று
நீராட்டும் விழிகளொடு நெஞ்ச ஏட்டில்
நின்புகழை இந்நாளில் எழுது கின்றோம்!

முதறிஞர் இராஜாஜி பெரியா ரென்னும்
முந்துதலை முறைமதித்துக் காம ராசர்
பாதைதனை யும்மதித்த நாக ரிகம்
பஞ்சைமக்கள் கண்ணீர்க்குப் பதைத்த நெஞ்சம்
மோதுதமிழ்ச் சொல்லடுக்கில் மேடை யேறும்
முத்தமிழின் வாள்வீச்சு - அறிஞர் அண்ணா
சாதனைநாம் உள்ளமட்டும் மறக்கப் போமோ!
தலைவனவன் பேரின்றேல் தமிழ்நா டுண்டோ!

மேடையிலே ஓடிவந்த வேக ஓடை
மேடுபள்ளம் சமன்செய்து வியக்க வைத்து
சாடுகிற புயலாகி வீசி னாலும்
தமிழ்மனத்தில் இளந்தென்ற லாகத் தோய்ந்து
நாடுவிட்டு நாடறிய நடந்த போது
நம்தோள்கள் பூரித்து மகிழ்ந்த தன்றோ
ஆடுகிற அரசியலாம் காட்டுக் குள்ளே
அசுணமெனும் பறவைநம் அண்ணா அன்றோ!

— கவிஞர் தங்க. அன்புவல்லி

# உங்கள் எல்லாத் தேவைகளுக்கும் எங்களை நாடுங்கள்

# டாப்கோ




- தரமான கோழித் தீவனங்கள்
- பாப்காக், வெண்காப் குஞ்சுகள்
- முட்டை, பிராய்லர் விற்பனை வசதி
- புதிய பண்ணைகள் அமைக்க ஆலோசனை

TAPCO **டாப்கோ**

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்
561, அண்ணா சாலை, சென்னை-600 018.

# வைக்கம் வீரர்

—கவிஞர் குழ கதிரேசன்



வைக்கம் வீரரைப் பாடுங்கடி—அவர்
வாழ்க்கையின் சாதனை கூறுங்கடி!
நாட்டைத் திருத்திய நல்லமனிதரை
நாள்தொறும் பாடியே ஆடுங்கடி!

சொத்துக்கள் ஏராள மாயிருந்தும்—சாதிப்
பித்துக்குள் இருந்திவர் வேறுபட்டார்!
ஈராயிர மாண்டுகள் மாற்றமிலா—சமயக்
கொள்கையி னின்றிவர் மாறுபட்டார்!

எத்தனை எத்தனை தடைக்கற்கள்—இவர்முன்
எக்காள மிட்டன தோழியரே!
அத்தனையும் தூள்தூ ளாக்கியே—இவர்தான்
அஞ்சா நெஞ்சினர் ஆகிவிட்டார்!

சமுதாயம் திருந்திட மக்கள் மத்தியில்
சிந்தனை ஈட்டியைப் பாய்ச்சிவிட்டார்
தமிழ்மொழி வாழ தமிழினம் ஆளத்
தடைகளை நையப் புடைத்துவிட்டார்!

விதவைக்கு மறுமணம் செய்துவைத்து—புது
விளக்கொளி வாழ்க்கையில் ஏற்றிவைத்தார்!
ஆணுக்குப் பெண்ணிங்கே அடிமையில்லை—பெண்கள்
அனைவர்க்குமே கல்வி வேண்டுமென்றார்!

பெண்ணுக்குச் சொத்திலே உரிமைதந்து—பெரும்
பேதையர் கண்ணீரைத் துடைத்துவிட்டார்!
துன்பத்தை இன்பமாய்க் கொண்டுவிட்டார்—வயது
தொண்ணூறும் ஐந்தும் தொட்டு விட்டார்!

இலட்சிய நோக்குடன் பாடுபட்டே—எதிலும்
இடையறா உழைப்புடன் ஈடுபட்டார்!
எத்தனை சோதனை வாழ்க்கையிலே—எனினும்
எதிர்நீச்சல் போட்டதை வென்றுவிட்டார்!

இந்திய நாட்டிலே மறுமலர்ச்சி—எங்கும்
தோன்றவே பற்பல வழிவகுத்தார்!
எதிர்காலச் சமுதாயம் நலம்பெறவே—உயிர்
உள்ள வரையிலும் சிறைபுகுந்தார்!

தன்னல மற்ற தனிப்பிறவி—இவர்
தமிழினம் போற்றும் மலையருவி!
எதிர்வாதம் புரிவதில் இமயமலை—இவர்
இந்திய நாட்டுக்கோர் புரட்சிமலை!

ஈரோடு பெற்றெடுத்த சிங்கமடி—இவர்
ஏழை எளியவர்க்குத் தங்கமடி!
புரட்சிச் சிந்தனை பூத்தநல் பூங்காவை
போற்றுவோம் வாருங்கள் தோழியரே!



## தமிழகத்தின் மேன்மைக்காக....

வான்புகழும் திருக்குறளை உலகுக் கீந்து
வகைமலிந்த கலைபலவும் வளர்த்த
தாயாம்
தேன்வடியும் தமிழ்மொழியின் திறத்தைப்
போற்றி
தென்னகத்தின் பழஞ்சிறப்பை மீட்போம்
என்று
ஊன்உருக உளம்உருக உணர்ச்சி பொங்க
ஊக்கமதைத் தூக்கிவிடும் உரைகளாற்றி
தான்பிறந்த தமிழ்நாட்டின் மேன்மைக்காகத்
தவிக்கும் அண்ணாத் துரையவர்கள்
வாழ்க! வாழ்க!

— நாமக்கல் கவிஞர்

வெ. இராமலிங்கம் பிள்ளை

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




போராடிப் பொழுதெல்லாம்
உழைத்தபின்...ஜோராக ஆடிய பின்,
நீராடுவீர் லைப்பாய் கொண்டு...குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர் சுத்தமே
உருவான ஆரோக்கிய மலர்ச்சி!

## லைப்பாய்

அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

LINTAS L 95 2317 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# ஏழையின் சிரிப்பில் இறையைக் கண்டவர்



சங்கத் தமிழின் சாரம் தன்னைத்
தனது மனமாய்க் கொண்டவர்—புவி
எங்கும் 'அண்ணா அண்ணா' என்றே
இயம்பும் மேன்மை கண்டவர்!

பாச மழையால் தம்பிகள் நெஞ்சப்
பயிரை வளர்த்த கார்மேகம்—தமை
ஏசிடு வோர்க்கும் இன்னருள் சுரந்த
இதயம் அன்பின் ஓர்யாகம்!

சிதறிக் கிடந்த செந்தமிழ் உணர்வைச்
சேர்த்து வடிவம் கொடுத்தவர்—இங்கு
உதிரிப் பூக்களை ஒன்றாய் இணைத்து
உயரிய மாலை தொடுத்தவர்!

உறங்கிக் கிடந்த தமிழர் நெஞ்சில்
உணர்ச்சித் தீயை மூட்டியவர்—நிலை
இறங்கிக் கிடந்த நாட்டின் புகழை
எங்கும் எடுத்துக் காட்டியவர்!

பெரியார் என்னும் மலையில் தோன்றிப்
பெருகிப் பாய்ந்த நதிவெள்ளம்—சுய
மரியா தையெனும் புரட்சிச் செடியில்
மலர்ந்த பூவே அவருள்ளம்!

மேதினி எங்கும் அறிவைப் பரப்பி
மேடையில் வீசிய பூங்காற்று—நம்
காதினில் பாய்ந்து நெஞ்சினில் நிற்கும்
கருத்தைச் சிந்திய தேன்ஊற்று!

ஊழித் தீயை உளத்தே கொண்டு
உருகும் பனிபோல் தோன்றியவர்—நமை
வீழ்த்தும் மடமை தனையே வீழ்த்தும்
விதையை நெஞ்சில் ஊன்றியவர்!

சினத்தைப் போக்கி எதையும் தாங்கும்
சிந்தையால் பிறரை வென்றவர்—ஆனால்
இனத்தை மொழியைப் பழிப்போர்க் கென்றும்
இடியே றெனவே நின்றவர்!

மாற்றான் தோட்ட மல்லிகைப் பூவின்
மணத்தைப் போற்றி மதித்தவர்—நாம்
ஏற்றம் பெற்றே வாழ்ந்திட வேண்டி
இரட்சக ராக உதித்தவர்!

—கவிஞர் கரு. நாகராசன்



தெய்வப் பழநியில் புகழ்பெற்றது!




பழநி
பரிமள விலாஸ்

S. சித்தனாதன்

ஜவ்வாது வாசனை விபூதி & ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
வாங்கி உபயோகியுங்கள்

**Prop. S. சித்தனாதன் சன்ஸ்**

அடிவாரம், பழநி - 624601.

போன் கடை : 405 வீடு, ஸ்டோர் : 406

பரம்பரை வைத்திய சேவை !

பழனியில் பரம்பரை வைத்தியம் எதுவென விசாரியுங்கள்

"மலையப்பசாமி வைத்தியசாலை"

என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்!
அங்கே உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்ட

உண்மையான சித்த மருந்துகள் கிடைக்கும்.

மக்கள் சேவையே மகத்தான சேவை !

# குலைவாழைத் தலைவர்!



கவிஞர் தமிழ்முடி

காந்தம்போல் பேச்சாளர்; பட்ட தாரி;
கனிச்சுவையின் எழுத்தாளர்; சீர்தி ருத்த
வேந்தர்; உயர் பத்திரிகை ஆசான்; நல்ல
வியப்புடைய ஓவியர்;நற் பள்ளி ஆசான்
சாந்தம்முதல் நவரசமும் நடித்துக் காட்டும்
தலைநடிகர்; முதலமைச்சர்; சர்வ கட்சி
மாந்தருக்கும் ஒருதலைவர் தமிழ்நா டென்றே
வரலாற்றுப் பெயர்தந்த அறிஞர் அண்ணா!

தன்னைப்போல் தன்னுடைய விழுதை யெல்லாம்
சமமாக ஆலமரம் வளரச் செய்தே
அன்னையைப்போல் அரவணைத்துப் புகழ்பெ ருக்கும்!
அதைப்போல அண்ணாவே! தம்பி மார்க்குத்
தன்னைப்போல் பெருமைபெறும் வாய்ப்பை நல்கித்
தலைமைதரும் பதவிகளும், பொறுப்பும் ஈந்தே
முன்னைப்போல் பன்மடங்கு புகழைப் பெற்ற
முகில்மனத்தர் உன்போல்வார் உலகில் உண்டோ?

விதைகொடுக்கும் தாவரங்கள் தம்மி னத்தை
விருத்திசெய்ய நாளாகும் என்ப தாலே
விதையின்றித் தன்னினத்தைச் சீக்கி ரத்தில்
விளைவித்து வழிவழியாய் வளரச் செய்து
சிதைவின்றிப் பலகன்றைத் தோற்று வித்துச்
சீக்கிரத்தில் தான்மடியும் குலையின் வாழை!
அதைப்போல அண்ணாவே! தன்பின் வந்தோர்
அரசாள இடம்தந்து விடைபெற் றாயே!

கண்ணாடி முன்போய்த்தம் குறையை யெல்லாம்
கண்டறிந்து குறைநீக்கி மகிழ்தல் போல,
அண்ணாவின் முன்செல்வோர் யாரா னாலும்,
அவரவர்தம் குறைநீக்கி நிறைவு கொள்ள
உண்ணாமல் உறங்காமல் இருந்து பேசி
உபசரித்து வழிசெய்வாய்! இந்தப் பண்பை
விண்ணாட்டில் உள்ளவர்க்கும் வாழ்ந்து காட்டி
விண்ணாளச் சென்றனையே மண்ணை விட்டே!

தன்மதிப்பே இல்லாத 'பூஜ்யம்' கூடத்
தக்கதொரு முழுஎண்ணைச் சார்வ தாலே
தன்மதிப்பும் உண்டாகி முழுஎண் ணிற்கும்
தன்மதிப்பை மிகவுயர்த்தும் தன்மை கண்டு
தன்மதிப்பை முன்மதிப்பில் அதிக மாக்கித்
தன்வழியில் வந்தவர்க்கும் புகழ்உண் டாக்கி
பொன்வேய்ந்த கோபுரம்போல் போற்றச் செய்த
புவித்தலைவர் பேரறிஞர் அண்ணா ஆவார்!



# அண்ணா தந்த பண்பாட்டுத் தமிழ்

புலவர் பாலைக்கண்ணன்

மூன்றுதமிழ் என்றேநாம் முழங்கி வந்தோம்!
மூவேந்தர் நாள்முதலாய் முழங்கு கின்றோம்!
ஆன்றதமிழ்ப் புலவோரும் அதிச யிக்க
அணிமேடைத் தமிழ்என்றே ஒன்று கண்டு
நான்குதமிழ் எனவாக்கி அளித்தார் அண்ணா
நானிலத்தில் இதைமறுப்போர் எவரே யுள்ளார்?
ஈன்றதமிழ் அன்னைக்கு மகுட மாக
எழில்'மேடைத் தமிழ்'அண்ணா தந்த தன்றோ?

தம்பிக்குப் பாசமட லாய்ம லர்ந்தும்
தரணிக்கு நேசமட லாய்ம லர்ந்தும்
நம்பிக்கை யூட்டுமட லாய்ம லர்ந்தும்
நலம்பயக்கும் திட்டமட லாய்ம லர்ந்தும்
அம்புவியில் மணம்பரப்பித் திகழ்ந்த தெல்லாம்
அண்ணாவின் அருந்தமிழ்தான், ஐயம் இல்லை!
கம்பனுக்குப் பின்னிந்தக் காஞ்சி வேந்தன்
கருத்தில்தான் தமிழ்மலர்ந்த காட்சி கண்டோம்!

அண்ணாவின் அருந்தமிழில் பொடி யிருக்கும்!
அதனுடைய நெடிதெரியும் சிலநே ரத்தில்!
அண்ணாவின் அருந்தமிழில் உலக நாட்டின்
அரசியலும் வரலாறும் கலந்தி ருக்கும்!
அண்ணாவின் அருந்தமிழில் கனிவி ருக்கும்!
அனைவரையும் ஈர்க்கும்கண் ணியமி ருக்கும்!
அண்ணாவின் அருந்தமிழில் இசையி ருக்கும்!
அதனாலே தமிழன்னை இசையைப் பெற்றாள்!

பெண்பாட்டால் தமிழ்வளர்த்தோர் பல்லோ ருண்டு!
பிறர்பாட்டால் தமிழ்வளர்ப்போர் பல்லோ ருண்டு!
வெண்பாட்டுத் தமிழ்வளர்த்து வையந் தன்னில்
வீங்குபுகழ், புகழேந்தி பெற்றுக் கொண்டான்
ஒண்பாட்டுத் தமிழ்வளர்த்த பாவேந் தர்போல்
உலகத்தில் பொதுமைநெறி மலர்வ தற்குப்
பண்பாட்டுத் தமிழ்தந்தாய் அண்ணா; தூய
பைந்தமிழ்த்தாய் அண்ணாவால் ஆட்சி பெற்றாள்!

*With best compliments from :*

# Dhanalakshmi Paper Mills Pvt. Ltd.

Ethilodu Village, Vilampatti-624 219
ANNA DISTRICT

**Manufacturers Of Good Quality Printing Papers**

---

*With Best Compliments From:*

# Servall Engineering Industries Pvt. Ltd.

Ethilodu Village, Vilampatti-624 219
ANNA DISTRICT

**Manufacturers Of Good Quality Printing & Writing Papers**

* MANIFOLD
* COLOURWOVE
* CREAMWOVE
* AZUREWOVE
* AZURELAID
* WHITEWOVE
* PULP BOARD
* UNBLEACHED PRINTING
* COLOUR ROUGH PRINTING

Regd. Office : 10-z, KRISHNASWAMY NAIDU LAY OUT,
COIMBATORE-641 011.

Telex No : 0855-428 SRVL IN

Telephone No : 26076

# அன்பிற்குரிய அண்ணா

**திருமதி கல்யாணி ராமசாமி**

**தலைவர்**

**கோழி வளர்ப்பு நிறுவனம்**

அறியாமை மண்டிக்கிடந்த இருள் சூழ்ந்த தமிழகத்தில் பகுத்தறிவு என்ற ஒளியைப் பரப்பிய தன் மூலம் இருளைப்போக்கி மக்களின் சிந்தனைக் கதவுகளைத் திறக்கச் செய்த பேரறிஞர் அண்ணா அவர்களும் அண்ணா அவர்களின் படைப்புகளுக்கு உயிரூட்டம் தந்து குன்றின் மேல் விளக்காய் கோபுரத்தின் கலசமாய் விளக்கிக் காட்ட ஒரு மெழுகுவர்த்தியாக ஒளி காட்டி நின்ற கே.ஆர்.ஆர். அவர்களும் அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும ஒன்றுபட்டு இரவென்றும் பகலென்றும் பாராது 26 ஆண்டுகள் இந்த நாட்டின் நலனுக்காகப் பாடுபட்டு வந்தார்கள். ஒரே குடும்பமாகப் பாசமிக்க அண்ணா அவர்களின் அன்புத் தங்கையாக வாழ்ந்த காலத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் சிந்துகிறேன்.

அண்ணா அவர்களும் கே.ஆர். ஆர். அவர்களும் ஒன்றாக உணவருந்தி இரவை எல்லாம் பகலாக்கிப் பேசிக் கொண்டிருந்த அண்ணா, கே.ஆர்.ஆர். அவர்களை ஒரு நாளைககு மேல் பார்க்காமல் இருக்க மாட்டார்கள். எங்கே ஷூட்டிங் நடந்தாலும், நாடகம் நடந்து கொண்டிருந்தாலும் அங்கெல்லாம் போய் கே. ஆர்.ஆர். அவர்களிடம் பேசிவிட்டுத் தான் போவார். முடிந்தால் அழைத்துக் கொண்டும் போய்விடுவார் அண்ணா.

அதற்கு மேலாக கே.ஆர்.ஆர். அவர்கள் என்னை ஒருவாரம் பார்க்காமல் இருந்தாலும் இருப்பார், அண்ணா அவர்களைப் பார்க்காமல் கே.ஆர்.ஆர். அவர்களால் இருக்கவே முடியாது. தன் வேலைகள் முடிந்ததோ இல்லையோ காஞ்சிபுரம் புறப்பட்டு விடுவார் அண்ணாவைப் பார்க்க.

கூட்டங்களுக்கு அண்ணாவோடு போகமுடியாமல் வேலை இருந்தால் தன்னுடைய பாண்டியாக் காரை நிறைய பெட்ரோல் போட்டு டிரைவரிடம் பணத்தையும் கொடுத்தனுப்புவார் அண்ணாவிற்கு. சென்னைக்கு அண்ணா அவர்கள் வந்தால் முக்காலும் எங்கள் வீட்டில்தான் தங்குவார்கள். காந்தி நகர் அடையாறில் நாங்கள் குடி இருந்தபோது அருகில் புற்றுநோய் மருத்துவமனையைப் புதிதாகக் கட்டிமுடித்திருந்தார்கள். ஆஸ்பத்திரியின் அருகில் வீடு இருந்ததால் அங்கே இருந்து வேதனைக் குரல் இரவில் நன்றாகக் கேட்கும். இந்தக் குரலைக்கேட்ட அண்ணா அவர்கள் ராமசாமி புற்றுநோய் ஆஸ்பத்திரியின் அருகில் வீடு இருப்பது சரியல்ல. இந்தச் சப்தம் கேட்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. நீ டவுன் பக்கமாக வீடு பார்த்து வந்து விடேன் என்றார் அண்ணா. அதற்கு கே.ஆர். ஆர். அவர்கள் சொன்னார்கள் பிள்ளைகளுக்கு ஸ்கூல் பக்கமாக இருப்பதால இங்கே இருக்கிறேன். சரியண்ணா வேறு இடத்தில் வீடு பார்க்கிறேன் என்றார். இதைச் சாதாரணமாக இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள.

1962ஆம் ஆண்டில் நடந்த இந்தியாவின் 3வது பொதுத்தேர்தலில் 50 சட்ட மன்றத் தொகுதிகளிலும் 17 பாராளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றிபெற முடிந்தது. இதில் பரங்கிமலைத் தொகுதியில் போட்டி இட்ட புரட்சித் தலைவர் அவர்களும் வெற்றி பெற்றார்கள். அண்ணா அவர்கள் காஞ்சியில் போட்டியிட்டபோது பிரச்சாரங்கள் எல்லாம் ஓய்ந்து ஓட்டுப் போடும் நாளில் அண்ணா அவர்கள் ஓட்டுப் போட்டு முடிந்ததும், சென்னை அடையாறில் இருந்த எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார்கள். தம்பிமார்களும் ஒவ்வொருவராக வந்துசேர்ந்தார்கள். அந்த இரண்டு நாளும் எங்கள் வீடு கொள்ளாத அளவுக்குக் கூட்டம் நிரம்பி வீட்டுக்கு வெளியேயும் காத்திருந்தார்கள்.

மறுநாள் மதியத்துக்கு மேல் தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்தன. அண்ணா அவர்களின் தொகுதியின் முடிவு மாலையிலேயிருந்து வர ஆரம்பித்தது. மிகவும் ஆர்வமாக எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார்கள். நிச்சயம் அண்ணா வெற்றி பெறுவார் என்று அனைவரும் நம்பிக்கையோடு காத்திருந்தார்கள். மாலை 3 மணி இருக்கும் போதே கே.ஆர்.ஆர். அவர்களால் பொறுமையாக இருக்க முடியாததால் அண்ணாவிடம் சொல்லி காரில் காஞ்சிபுரத்துக்கே போய்விட்டார். நிலைமைகளை அறிந்துவர உடன் அரங்கண்ணலையும் அழைத்துப் போனார். கே.ஆர்.ஆர். நானும் அண்ணா அவர்களின் வெற்றிச் செய்தி கேட்டதும் எல்லோருக்கும் இனிப்பு வழங்க வேண்டும் என்று சாக்லைட் டின் ஒன்றை வாங்கி வைத்து 3 வயதான என் மகள் கலைச்செல்வியிடம் நான் சொல்லும்போது முதலில் அண்ணா அவர்களுக்கும் பிறகு எல்லோருக்கும் சாக்லைட் கொடுக்க வேண்டும் என்று சொல்லி வைத்திருந்தேன். அவளும் அடிக்கடி சாக்லைட் எப்போ கொடுக்கணும் அம்மா என்று கேட்டபடியே இருந்தாள். தேர்தல் முடிவுகள்



வந்து கொண்டிருந்தது. முடிவில் யாரும் எதிர்பாராத வகையில் அண்ணா அவர்கள் தோல்வியுற்றதாக அறிவித்தார்கள். அனைவரும் இடிவிழுந்த மரம்போல் அதிர்ச்சியோடும், கண்கலங்க தேம்பித் தேம்பி அழுது கொண்டும் இருந்த நேரம் கே.ஆர்.ஆர். அவர்களும் காஞ்சியிலிருந்து சோகமாக வீடு வந்து சேர்ந்தார்கள். கூட்டம் நிறைந்த எங்கள் வீடே சோக மயமாகக் காட்சி அளித்தது.

அண்ணா அவர்கள் எதைப் பற்றியும் எந்தக் கவலையும் இல்லாமல் சாதாரணமாக பத்திரிகைக்கு அறிக்கை எழுதிக்கொண்டிருந்தார்கள். எழுது முடித்ததும் பத்திரிகைக்கு கொடுக்கச்சொல்லி தம்பிமார்களிடம் விடைபெற்று இரவு கே.ஆர்.ஆர். அவர்களுடன் பெங்களூர் புறப்பட்டார் அண்ணா. அண்ணா அவர்களுக்கு மன அமைதி இல்லாத நேரத்திலும் சில தம்பிமார்களால் மன வேதனை ஏற்படும் நேரங்களிலும் கே.ஆர்.ஆர். அவர்களை அழைத்துக் கொண்டு தனியாக இரவு நேரங்களில் இருவரும் கலந்துரையாடிக் கொண்டே இருப்பார்கள். உடன் சி.வி.ராஜகோபாலும் இருப்பார். அண்ணாவிற்கு ஆறுதல் கூறுவார். கே.ஆர்.ஆர். சாதாரணமாகவே விடிய விடியப் பேசி காலையில் தான் எல்லோரும் தூங்குவார்கள்.

தேர்தல் முடிந்ததும் அண்ணா விடுத்த அறிக்கையில் கூறி இருப்பதாவது; என் அணி வகுப்பு உள்ளே போகிறது. நான் வெளியே நிற்கிறேன். தலைவர் இல்லாத அணிவகுப்பு அமைக்க முடியும். ஆனால் அணிவகுப்பு இல்லாத தலைவனை அமைக்க முடியாது. என் தோல்வியைப் பற்றி வருத்தப்படுபவர்களுக்கு இதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நேரம் கழகம் பெற்றுள்ள வெற்றி குறித்து இன்றைக்கு மகிழ்ந்து நாளைமுதல் கடுமையாக கடமை உணர்ச்சியோடும் பொறுப்புணர்ச்சியோடும் தம்பிமார்கள் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று அறிக்கை விடுத்தார். காஞ்சியில் அண்ணா அவர்கள் தோற்றது பின்னால் ஒருவகையில் நல்லதாகவும் அமைந்தது என்றே கூறலாம். பின்னால் டெல்லி மேல் சபையிலே எம்.பி யாக பதவியேற்று அங்கே நேரு முதல் இந்திராகாந்தி வரை அனைவரும் அண்ணாவின் பேச்சாற்றலை உணரும் நிலை ஏற்பட்டு இந்தியா முழுதும் ஏன் உலகம் முழுவதுமே அண்ணா அவர்களின் ஆற்றல் மிக்க அறிவுரைகளை கேட்கும் வாய்ப்பும் கிடைத்தது என்பதே உண்மையாகும்.

அண்ணா அவர்களின் இதயத்திலே வைத்துப் போற்றிய இதயக்கனியாம் புரட்சித் தலைவர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்குத் துணை நின்று பாடுபட்ட கே.ஆர்.ஆர். அவர்களுக்கு நினைவுச் சின்னமாகத் தமிழ் நாடு மின்சார வாரியத்தின் புதிய கட்டடத்திற்கு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை என்ற பெயரைச் சூட்டி அண்ணா அவர்களின் இதயமாகவே வாழ்ந்தார். கே.ஆர்.ஆர் என்று மனமார பாராட்டிப்பெருமைப்படுத்தினார்.

அண்ணா அவர்களுக்கு பின் திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் கொடுத்து காப்பாற்றிய பெருமைக்கும் உரியவராக சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் அவர்கள் நம் தமிழகத்திற்குகிடைத்தால்தான் அண்ணா அவர்களின் ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்தி அண்ணா அவர்களுக்கு பெருமைகளை சேர்த்து தமிழகமும் தலை நிமிர்ந்து நிற்க முடிந்தது.

ENC FED

"என்கோஃபெட்"

**தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்**

*117, தியாகராய ரோடு, சென்னை - 600 017.*

**எங்களின் 12 மாவட்ட மற்றும் 220 வட்டார சங்கங்களின் பணிகள்**

1. விவசாய இயந்திரங்கள், கருவிகள் வாடகைக்கு விடுதல்.
2. விவசாய இடு பொருள்கள் நியாய விலையில் விற்பனை.
3. நவீன கருவிகள் செயல் விளக்கமும் - மானிய விலையில் விற்பனையும்.
4. அரசு வறட்சிப் பணியில் குடிநீர் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல்.
5. அரசுத் திட்டங்கள் சில நிறைவேற்றல்.
6. கட்டுமானப் பணிகள், மேற்கூரைகள், நீர்ப்பாசன மதகு வாய்க்கால் கதவுகள், அரசு திட்டத்தில் தேவைப்படும் பொருட்கள் விநியோகம் - போன்ற வேலைகள்.
7. வங்கிக் கடன்களுக்கு பம்பு செட் விலை நிர்ணயம் செய்து வழங்குதல்.
8. தொழில் நுட்ப ஆலோசனை வழங்கல்.

**"உழவர்களின் உற்ற தோழன் என்கோஃபெட்"**

இரா. முத்தையா, எம்.எஸ்சி., எம்.எல்.ஏ.,
பெருந்தலைவர்

ஜோர்சிங் சியாம், இ.ஆ.ப.
நிர்வாக இயக்குநர்

# இனிக்கும் அண்ணா நினைவுகள்

—மு. முத்துக்காளத்தி



பேரறிஞர் அண்ணாவுக்கு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தவர் திரு. திருஞான சம்பந்த முதலியார் ஆவார். அவர் ஒரு சமயம் பல நண்பர்களோடு திருத்தல யாத்திரை சென்று இருந்தார். ஓர் ஊரில் முகச் சவரம் செய்து கொள்ள வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. சலூனுக்குள் சென்றார். தொழிலாளியிடம் செய்தியைச் சொன்னார். அந்தத் தொழிலாளி அவரை அன்புடன் வரவேற்று நாற்காலியில் உட்கார வைத்தார்.

முடி வெட்டும் தொழிலாளி, ஆசிரியர் அவர்களுக்கு முகச்சவரம் செய்யும்போது அவரோடு பேச்சுக் கொடுத்தார்.

“ஐயா எந்த ஊரு?”

''எனக்கு சொந்த ஊர் காஞ்சிபுரம் அப்பா. இங்கே திருத்தலங்களைச் சுற்றிப் பார்க்க நாங்கள் யாத்திரையாக வந்திருக்கிறோம்.''

''உங்களுக்குச் சொந்த ஊர் காஞ்சிபுரமா? அப்படியானால் அண்ணாவைத் தெரியுமா?''

''தெரியுமாவது! அண்ணா எனது மாணவர் தான்.''

''அண்ணாவின் ஆசிரியரா நீங்கள்? நான் என்ன பேறு செய்தேன்!''

அந்த முடி திருத்தும் தொழிலாளி தெய்வத்தையே நேரில் கண்டது போல பிரமிப்பும் பெருமகிழ்வும் அடைந்த தோடு, அண்ணாவின் ஆசிரியரிடமிருந்து முகச் சவரக் கட்டணம் வாங்குவதையும் மறுத்துவிட்டார்.

டாக்டர் ப. சிற்சபை அண்மையில் பவள விழா கொண்டாடிய அண்ணாவின் நண்பர். அவரிடம் பேரறிஞர் அண்ணா மருத்துவம் செய்து கொள்வது வழக்கம். அத்துடன் தனது நண்பர்களையும் டாக்டர் சிற்சபையிடம் சித்த வைத்தியம் செய்து கொள்ளும்படி கூறுவார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சர் ஆன பிறகு டாக்டர் சிற்சபையிடம் வைத்தியம் செய்து கொள்ள நேர்ந்த ஒரு சந்தர்ப்பத்தை, டாக்டர் சிற்சபை பின் வருமாறு குறிப்பிடுகிறார் :

''அண்ணா அவர்கள் மூச்சு விடுவதற்குத் தொல்லைப் படுவதைக்கண்டேன். விவரங்களைக் கேட்டறிந்தேன். பலமாக விருந்து அருந்தி ஓய்வு எடுக்காமல் பிரயாணம் செய்ததால் ஏற்பட்ட வாய்வு பந்தனம் என்பதைத் தெரிந்து கொண்டேன். உடனே சீரணமாவதற்குச் சூரணம் கொடுத்தேன். சிறிது நேரத்திற் கெல்லாம் காற்றுப் பிரிந்து ஏப்பம் வந்தது. பின் மூச்சு விடுவதற்கு எளிதாகி விட்டது.

''அப்பொழுது அண்ணா அவர்கள் தெரிவித்த ஒரு கருத்து இன்றும் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது. ''நான் முதலமைச்சர் பதவி ஏற்பதற்கு முன்பு எனக்குப் பெரும்பாலும் நோயே வருவதில்லை. அப்படி ஏதேனும் வியாதி வந்தால் உங்களிடம் வருவது வழக்கம். நீங்கள் என்னைச் சோதித்து விட்டு ஆறு அல்லது பத்து பொட்டலம் மருந்து தருவீர்கள். இரண்டு மூன்று பொட்டலம் சாப்பிடுவதற்குள் நோய் குணமாகிவிடும். மீதி பொட்டலத்தை ஒரு மாடத்தில் போட்டு வைப்பேன். திரும்ப எப்போதாவது உடல் நோயுற்றால் முன்பு வைத்திருந்த பொட்டலத்தை எடுத்துச் சாப்பிடுவேன். நோய் குணமாகி விடும்.

இதைத் தவிர வேறு நவீன மருந்துகளே நான் சாப்பிடுவதில்லை. முதலமைச்சர் ஆனதற்குத் தண்டனை போன்று இப்பொழுது அளவற்ற சோதனைகளும், மருந்துகள் அருந்துவதும் வழக்கமாகிவிட்டன....''

காஞ்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பாலாஜி பேரறிஞர் அண்ணாவைப்பற்றி நினைவு கூரும்பொழுது குறிப்பிடார்:

''நானும் எனது நண்பர்களும் 1952-ல் இருந்தே பேரறிஞர் அண்ணாவின் பேச்சாற்றல், எழுத்தாற்றல் ஆகியவற்றால் இழுக்கப்பட்டு அவரது கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தோம். இராஜாஜி மார்க்கெட் நிர்வாகிகளாக நாங்கள் இருந்த பொழுது அண்ணாவை சிலர் இழிவாகப் பேசி விட்டார்கள். அது எங்களுக்குத் தாளவில்லை. பொங்கி எழுந்தோம்.

அண்ணா எங்களைக் கூப்பிட்டுப் பேசினார். சமாதானமாகப் போகச் சொன்னார். 'அவர்கள் உங்கள் காலில் விழுவதாகச் சொல்கிறார்கள், அத்துடன் விடுங்கள்' என்றார் அண்ணா. இது எங்களுக்குத் தாங்கவில்லை. 'அண்ணா! உங்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கட்டும். நாங்கள் விட்டு விடுகிறோம்' என்றோம்.

ஒரு திருமண விழாவிற்குச் சென்றிருந்தோம். மண விருந்து, வீடு சாணி போட்டு மெழுகி, ஒரே துர்நாற்றமாக இருந்தது. எங்களால் சாப்பிடவே முடியவில்லை. அண்ணாவோ தேவாமிருதமாகச் சாப்பிட்டார். திரும்பி வரும் வழியில், 'அந்தச் சாப்பாட்டை எப்படி அண்ணா சாப்பிட்டீர்கள்?' என்று கேட்

டேன். அண்ணா சொன்னார்: 'நீ சாப்பாட்டையும் இடத்தையும்தான் பார்த்தாய். நான் அவனது உள்ளத்தைப் பார்த்தேன். அவன் நம்மை எல்லாம் தெய்வம்போல் நினைத்துச் சாப்பாடு போட்டான். அதனால் தான் நான் அப்படிச் சாப்பிட்டேன்.'

அண்ணாவுக்கு நாங்கள் விருந்து வைக்கும்போது, ஒவ்வொரு வரும் போட்டி போட்டுக் கொண்டு அவரது இலையில் அதிகம் வைப்போம். அண்ணாவோ தமது இலையில் உள்ளதையெடுத்து, இல்லாதவர்கள் இலையில் வைத்து விடுவார். இதற்கு அவர் சொல்லும் காரணம்: 'எனக்கு இருக்கும் வயிறுதானே அவனுக்கும் இருக்கிறது? நீங்கள் எல்லோரும் என்னையே கவனித்தால் அவனை யார் கவனிப்பது? பந்தியில் வஞ்சனை செய்யக் கூடாது.'

பேரறிஞர் அண்ணாவிடம் இருந்த இன்னொரு பெரும் குணம், சிறியவர்களையும் பெரியவர்கள் போல் நடத்துவது. 'நான் வயசுக்கு மதிப்பு கொடுப்பதில்லை. செயலுக்குத்தான் மதிப்புக் கொடுக்கிறேன். உங்கள் செயல் சிறந்ததாக இருப்பதால் உங்களை எல்லாம் பெருந்தன்மையோடு நடத்துகிறேன்' என்பார்.

நான் புரட்சித் தலைவரை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணாவிடம் காணப்பட்ட இந்தப் பெருந்தன்மை புரட்சித் தலைவரிடமும் இருப்பதுதான். ஒரு சமயம் நான் புரட்சித் தலைவரைப் பார்க்கப் போயிருந்தேன். அப்பொழுது காலை மணி 11. 'நீங்கள் தோட்டத்தில் சாப்பிட்டு 5 மணிக்கு வாருங்கள்' என்று சொல்லிவிட்டுப் படப் பிடிப்புக்குப் போய் விட்டார்.

புரட்சித் தலைவர் அவர்கள மீண்டும் வந்தபொழுது நாங்கள் தோட்டத்தில் சாப்பிடாமல் வெளியே சாப்பிட நேர்ந்ததை அறிந்து, அதற்குக் காரணமான நபரை மிகவும் கடிந்து கொண்டார். எங்களை அந்த நபர் சாதாரணமாக நினைத்து, வெளியே சாப்பிட அனுப்பி விட்டார். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களோ எங்களை மிக உயர்வாக நினைத்து, தான் சாப்பிடும் உணவையே தனது தொண்டர்களும் சாப்பிட வேண்டும் என விரும்பினார். இதனால் தான் புரட்சித் தலைவரின் உருவத்தில் நான் பேரறிஞர் அண்ணாவைப் பார்க்கிறேன்.



## நம்முடைய மொழி

நம்முடைய மொழியை நாம் கண்போல் காத்து வருகிறோம். அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும். அந்த நேரத்தில் யாராவது ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம். இது பட்டவர்களுக்குத்தான் தெரியும்.

கண்ணுக்கு மை இடுவது போல் பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்; மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ, அதுபோல் பிறமொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலைமையை உண்டாகும்.

அந்தக் காலத்தில் காஞ்சியில் இருந்து நாங்கள் எப்பொழுது புரட்சித் தலைவரைப் பார்க்கச் சென்றாலும், அண்ணாவைப் பற்றியே அக்கறையுடன் விசாரிப்பார். அந்த அளவிற்கு அண்ணாவிடம் அன்பும் மரியாதையும் வைத்து இருந்தார். அண்ணாவிடம் காணப்பட்ட மனிதாபிமானம், கண்டிப்பு, குடும்பப் பாசம் இவை அனைத்தும் புரட்சித் தலைவரிடம் ஒருங்கே குடிகொண்டுள்ளன''.

18 வயதிலிருந்தே பேரறிஞர் அண்ணா அவர்களுடன் பழகி 'பையா' என்று அண்ணா அவர்களால் அழைக்கப் பெற்ற திரு காஞ்சி பன்னீர்செல்வம் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிச் சொல்லும்போது குறிப்பிட்டார்:

''பேரறிஞர் அண்ணா இரவெல்லாம் விழித்திருந்து படிப்பார், எழுதுவார், பெரிய புத்தகங்களைக்கூட ஒரே இரவில் படித்து முடித்து விடுவார். இடை இடையே தண்ணீர் அருந்துவார். எழுதும் பொழுதோ, அல்லது படிக்கும் பொழுதோ வெளியே என்ன நடந்தாலும் அவரை அது பாதிக்காது. எந்தச் சப்தமும் அவர் படிப்பையோ அவர் எழுத்தையோ தடங்கல் செய்துவிட முடியாது.

அன்னையார் தொத்தா தொந்தரவின் பேரில் தான் சேவிங் செய்து கொள்வது, ஆடை உடுத்துவது, சாப்பிடுவது எல்லாமே! விரும்பிச் சாப்பிடும் சூடான டீயும் சுறுசுறுப்புக்குப் போடும் பொடியும் மட்டுமே அவர் வேண்டி ஏற்றுக்கொள்வது. எளியவர்களின் இணையற்ற தலைவராய் - காலில் செருப்புக் கூட இல்லாமல் அவர் திகழ்ந்த காட்சி என்னை வியப்பிலும், வேதனையிலும் ஆழ்த்தியிருக்கிறது. அந்த அளவுக்கு ஆடம்பரங்களை அறவே வெறுத்து வாழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா. அவர் விரும்பி இருந்தால் உல்லாசமாக வாழ்ந்து இருக்கலாம். ஆனால் அவர் எளிமையாக வாழ்ந்ததோ கொள்கைத் திட்டங்களைப் பற்றிச் சிந்தித்து முடிவெடுக்கும் பொழுது என்னைப் போன்ற சாமான்ய-பாமர மக்களைக் கூட அது பற்றிக் கருத்துக்களைக் கேட்டு அறியும் பெரிய உள்ளம் பேரறிஞர் அண்ணாவிடம் இருந்தது.''

ஆசிரியராகப் பணியாற்றும் திரு பா. மாணிக்கவேலு தனது அனுபவத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

''1955-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் எனக்குத் திருமணம். அண்ணா இன்னும் வரவில்லையே என்ற கவலையோடு நான் வெளியே வந்து அண்ணா வந்துவிட்டாரா என்று விசாரித்தேன்.

அண்ணா எப்பொழுதோ வந்து திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்துத் திடுக்கிட்ட நான், அண்ணா உள்ளே வந்து நாற்காலியில் உட்காருங்கள் என்று வேண்டினேன். அதற்கு அண்ணா இன்றைக்கு நீதான் நாற்காலியில் உட்கார வேண்டும் நீ உட்கார்ந்த பிறகு தான் நான் நாற்காலியில் உட்கார வேண்டும் என்று சொன்னார்.

இதை இன்றைக்கு நினைத்தாலும் என் நெஞ்சம் நெகிழ்கிறது''.

இவ்வாறு தங்கள் நெஞ்சக் கடலில் அமிழ்ந்து கிடக்கும் அரிய அனுபவ முத்துகளை ஆரமாக்கி அண்ணாவின் நினைவுக்குச் சூட்டி மகிழ்வோர் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கில் இருப்பார் என்பது திண்ணம்.



# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க விழா

**வி. புண்ணியமூர்த்தி, செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.**

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க விழாவை ஆகஸ்ட் மாதம் 9 முதல் 17 முடிய தமிழ்நாடு அரசும் மத்தியஅரசும் இணைந்து நடத்தின.

வேளாண்மையில் பசுமைப் புரட்சி, உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு, ஊட்டச் சத்து, சத்துணவு, மருத்துவ வசதி, கல்வி முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, சுயவேலை வாய்ப்பு, ஊரகத் தொழில் வளர்ச்சி, மரம் வளர்ப்பு, சமூகக் காடுகள் அமைப்பு, குடும்ப நலம், சிறு சேமிப்பு, நலிவுற்றோருக்குக்கடன் உதவி, தொழில் துவங்க வங்கிக் கடன் போன்ற அரசின் பல்வேறு திட்டங்கள் பற்றியும், அவற்றின் செயல்முறைகள் பற்றியும் மக்களுக்குக் குறிப்பாக கிராமப் பகுதி மக்களுக்குப் பல்வேறு விளம்பர சாதனங்கள் மூலம் எடுத்துக் கூறுவதே, இந்தப் பல்துறைப் பணி விளக்க விழாவின் நோக்கமாகும்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரான சிவகங்கை நகரிலும், மாவட்டத்திலுள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 450 இடங்களில் தமிழ்நாடு அரசின்செய்தித் துறை, மத்திய அரசின் களவிளம்பரத்துறை, பாட்டு, நாடகப் பிரிவு, தமிழ்நாடுஅரசின்வேளாண்மைத்துறை, குடும்பநலத்துறை, உடல் நலத்துறை, ஊட்டச்சத்துத் துறை போன்ற பல்வேறு பிரிவினரின் படக்காட்சிக் கருவிகள், கலைக் குழுக்கள் மூலம் ஏதாவது ஒரு கிராமத்தில் கலைநிகழ்ச்சி நாடகம் ,வில்லுப்பாட்டு, படக் காட்சி, சிறப்புக் கூட்டம் ஆகியவை நாள்தோறும் நடத்தப்பட்டன. இந்த விழாக்காலமான 9 நாட்களில் 35 படக் கருவிகள் மூலமாக 31[illegible] கிராமங்களில் படக் காட்சிகளும் 9 கிராமங்களில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் 18 கிராமங்களில் கலைநிகழ்ச்சிகளும் 115 கிராமங்களில்நாடக நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பான முறையில் கிராமமக்கள்மிகவும் விரும்பி பார்த்துப் பாராட்டுகின்ற வகையில் நடைபெற்றன.

சிவகங்கை அரண்மனைத் திடலில் அமைக்கப்பட்ட அண்ணா கலையரங்கில் நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பல்துறைப் பணிவிளக்க விழா பொருட்காட்சியில் தமிழ்நாடு கனிம நிறுவனம், காவல்துறை, மத்திய அரசுப் பொருட்காட்சிப் பிரிவு (டி.ஏ.வி.பி), கூட்டுறவுத் துறை, பட்டுவளர்ப்புத்துறை, இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை தொழில்துறை, கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியம், சமூக நலத்துறை, குடும்பநல்த்துறை, மருதுபாண்டியர்போக்குவரத்துக் கழகம், செய்தி மக்கள் தொடர்புத்துறை, வனவளத்துறை, தமிழ்நாடு ஊட்டச்சத்து, நெடுஞ்சாலை துறை போன்ற துறைகள் தமது துறைகளின் வளர்ச்சிப் பணிகள், முற்போக்குத் திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை விளக்கும் வகையில் சிறந்த முறையில் அரங்குகள் அமைத்துக் கண்காட்சி நடைபெற்றது. கணகாட்சியைப் பார்ப்பதற்கும் அங்கு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளைப் பாரப்பதற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் வருகை தந்தனர்.

பொருட்காட்சியில் அமைக்கப்பட்ட அண்ணா கலையரங்கில்

9.8.86-ஆம் தேதி பல்துறைப் பணிவிளக்கத்தொடக்கவிழா மற்றும்வேளாண்மை நாள் விழாவை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஆதிர்க் கட்சித் தலைவர் திரு.உ. சுப்பிரமணியம் அவர்கள் பொருட்காட்சியினைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். இந்த தொடக்கவிழாவிற்கு, செய்தி சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ.பி.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். செய்தித்துறை இயக்குநர் திரு இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் விழா விளக்கவுரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். கோபாலன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். மத்திய கள விளம்பரத்துறையின் இணை இயக்குநர் திரு கருப்பசாமி அவர்கள் நன்றியுரையாற்றினார். விழா முடிவில் மத்திய அரசு இசை நாடகப்பிரியாவின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

10.8.86ஆம் தேதிபல் துறைப் பணியின் இரண்டாம் நாள் ஊரக வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு.ஜி. சாந்தசீலன் அவர்கள் தலைமை தாங்கினார். சிவகங்கை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு சுதர்சனநாச்சியப்பன் அவர்கள் ஊரக வளர்ச்சிக்காக மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். கவிஞர் சுபாஷ் சந்திரபோஸ், மத்திய அரசு கள விளம்பர அலுவலர்கள் திரு தெரசநாதன், திரு ரெங்கநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு வை. புண்ணியமூர்த்தி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு கே. நடராஜன் நன்றி தெரிவித்தார். விழா முடிவில் செய்தித்துறையின் சார்பில் கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. பொருட்காட்சியையும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் சிவகங்கை மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்கள் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பார்த்து மகிழ்ந்தனர். வில்லுப்பாட்டு நிகழ்ச்சி முடிந்த பின்னும் இரவு 12 மணி வரை மக்கள் வரிசையில் நின்று பொருட்காட்சியைப் பார்த்துச் சென்றனர்.

பல்துறைப் பணிவிளக்கவிழாவில் 3-வது நாளான 11.8.86ஆம் தேதி குடும்பநல நாளாகக் கொண்டாடப்பட்டது. மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு ஆர்.சேகர், ஐ.பி.எஸ். அவர்கள் விழாவிற்குத்தலைமை தாங்கினார். சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு அ.கருப்பையா அவர்கள் குடும்ப நலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அரசின் வளர்ச்சிப் பணிகள்குறித்தும், கண்காட்சியின் சிறப்புபற்றியும்எடுத்துரைத்தார். மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் ஜெய்சங்கர், மாவட்ட உடல்நல அலுவலர் டாக்டர் இக்பால்சுல்தான், மத்திய அரசு கள விளம்பர அலுவலர் திரு தெரசநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். செய்தித்துறையின் துணை இயக்குநர் திரு கே.நடராஜன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு வே. இராமநாதன் நன்றியுரையாற்றினார். விழா முடிவில் காவல்துறையின் சார்பில் தர்மபுரி மாவட்ட காவல்துறையினரின் புகழ்பெற்ற கரகாட்டம் நடைபெற்றது. கண்காட்சியையும் கலைநிகழ்ச்சியையும் இப்பகுதியிலுள்ள சுமார் 13 ஆயிரம் மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்.



12.8.86ஆம் தேதி, பல்துறைப் பணி விளக்க விழாவின் 4வது நாள் சமூக நல நாளாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு




தாட்கோ கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு ஏ.சண்முகம் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி நாகரெத்தினம், ஊட்டச்சத்து மாவட்டத் தொடர்பு அலுவலர் திரு அன்பழகன் ஆகியோர் சமூக நலத்தைப்பற்றி மிகச் சிறப்பாக உரையாற்றினார்கள். களவிளம்பர அலுவலர் திரு ரெங்கநாதன், வரவேற்புரையாற்றினார். உதவி மக்கள்தொடர்பு அலுவலர் திரு வே.இராமநாதன் நனறி கூறினார். விழா முடிவில் காரைக்குடி பால்வள நிறுவனத்தினர் சாாபில் மதுரை ஜெய்சேகர் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவை சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பார்த்துச் சென்றனர்.

13.8.86ஆம் தேதி 5-வது நாள், வனவளம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் நாளாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குக் கோட்ட வன அலுவலர் (சமூக நலக்காடு) திரு காளியப்பன் தலைமை வகித்து மரங்கள் வளர்ப்பதன் அவசியத்தையும் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாகவும் சுகாதாரத்தோடும் வைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார். விழாவையொட்டி சிவகங்கையிலுள்ள பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட பாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவ்லர் திரு நயினாமுகமது பரிசு வழங்கி,சிறப்புரையாற்றினார். கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு மானாமதுரை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு அழ. சுதந்திரபாண்டியன் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். செய்தித்துறை இயக்குநர் திரு கே. நடராஜன் வரவேற்புரையும், கள விளம்பர அலுவலர் திரு ரெங்கநாதன் நன்றியுரையும் கூறினார்கள். விழா முடிவில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட அரிசிஆலை உரிமையாளர்கள் சங்கம் சார்பில் மதுரை உடையப்பா குழுவினரின் சத்திய அரிச்சந்திரா நாடகம் நடைபெற்றது. இந்த நாடகம் மிகச் சிறப்பாக இருந்தது. சுமார் 15 ஆயிரம் பேர்கள் இந்த நாடகத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

பல்துறைப்பணி விளக்கவிழாவின் 6வது நாள் (14.8.86) தொழில் வளர்ச்சி நாளாக மாவட்டத் தொழில் மையப் பொதுமேலாளர் திரு ஆர்.இராமசாமி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. மானா மதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு கே. பாரமலை, சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு இராம அருணகிரி, முன்னோடி வங்கியின் (ஐ.ஓ.பி) மண்டல மேலாளர் திரு என். இராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். திருப்புவனம் ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவ்வர் திரு பாலகுருசேர்வை விழாவில் கலந்துகொண்டார். விழாவையொட்டி நடந்த பேச்சுப் போட்டியில், வினாடிவினா போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழா முடிவில் கூட்டுறவுத் துறையின் மூலமாக அரசு நர்த்தகி செல்வி சுவர்ணமுகியின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்குப் பல்லாயிரம் மக்கள் வந்திருந்தார்கள்.

7வது நாள் (15.8.86), விடுதலை நாளாகவும் அறிவியல் நாளாகவும் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர். கோபாலன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். விடுதலை நாள் விழாவை முன்னிட்டு மாவட்ட அளவில் நடந்த பேச்சு-கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகளையும் நலிந்த பிரிவினருக்கு 'தாட்கோ' மூலமாக தையல் இயந்திரங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கிச் சிறப்புரையாற்றினார். நாடு முன்னேற நாம் அறிவியலில் நாட்டம் காட்ட வேண்டும். அறிவியலில் அறிவு வளர்ச்சி பெற்றால்தான் நாம் தொழில் வளர்ச்சியில் முன்னேறி நாடும் வளர்ச்சி பெற முடியும் என்றும், விடுதலைக்காகப் போராடிய தியாகிகளின் கனவுகள் நனவாக நாம் எல்லாம் ஒன்று

பட்டுப் பாடுபட்டு நாட்டை வளமையாக்குவோம் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு சுப.துரைராஜ், காரைக்குடி நகர்மன்றத் தலைவர் திரு சிதெ.சிதம்பரம், காரைக்குடி சிக்ரி விஞ்ஞானி டாக்டர் நோயல், கள விளம்பர அலுவலர் திரு தெரசநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு வை.புண்ணிய மூர்த்தி வரவேற்புரையாற்றினார். உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு வெ.இராமநாதன் நன்றி கூறினார். விழா முடிவில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டப் பேருந்து உரிமையாளர்சங்கத்தின் சார்பில் சினிமாப்புகழ் ஏ.எம். ராஜா-ஜிக்கி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவிற்கு சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வந்திருந்தார்கள்.



16.8.86-ஆம் தேதி பல்துறைப் பணி விளக்கவிழாவின் 8வது நாள் கூட்டுறவு நாளாகக் கொண்டாடப் பட்டது. இவ்விழாவிற்கு இராமநாதபுரம் கூட்டுறவு மத்திய வங்கியின் செயலாளர் திரு எஸ். சிவராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டுறவுத்துறை பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றுவதைப் பற்றியும் "கூட்டுறவே நாட்டுயர்வு; எனவே இந்தத் துறைக்கு மக்கள் அதிக அளவு அக்கறைசெலுத்தி,வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்டினால் நாமும் உயரலாம். நாட்டையும் உயர்த்தலாம் "என்றும் குறிப்பிட்டார். கூட்டுறவுத்துறையின் நிர்வாக அலுவலரும், உதவிச் செயலாளரும் சிறப்புரையாற்றினார்கள். செய்தித்துறையின் துணை இயக்குநர் திரு கே. நடராஜன் அவர்கள் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. வை புண்ணியமூர்த்தி நன்றிகூறினார். விழா முடிவில் மருதுபாண்டியர்போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

17.8.86ஆம் தேதி பல்துறைப் பணி விழாவின் நிறைவுநாள் விழா தேசிய ஒருமைப்பாட்டு நாள் விழாவாகக் கொண்டாடப் பட்டது. இவ்விழா மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு என்.நல்லுசாமி அவர்கள் தலைமையில் நடை பெற்றது. கண்காட்சியில் பங்கும்பற்று சிறந்த அரங்குகள் அமைத்த மருதுபாண்டியர்போக்குவரத்துக் கழகத்திற்கு முதல் பரிசையும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தினருக்கு இரண்டாம் பரிசையும், காவல்துறையினருக்கு மூன்றாம் பரிசையும்,கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு ஆறுதல் பரிசையும், மத்திய விளமபரத் துறையினருக்கு (டி.ஏ.வி.பி.) சிறப்புப் பரிசையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். "பல்துறைப்பணி விளக்கவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது போன்ற விழாக்கள் மூலமாகத்தான் மக்கள் அறிவு வளர்ச்சி பெற முடியும்"என்று குறிப்பிட்டார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் விழா திட்டமதிப்பீட்டுரையாற்றினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர்.கோபாலன்,இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு எம்.தங்கவேலு, மாவட்டக் குற்றவியல் முதன்மை நீதிபதி திரு சிவகுமாரன், மானாமதுரை திரு இராஜேந்திரன்,எம்எல்சி., சிவகங்கை நகர்மன்றத்தலைவர் திரு சாத்தையா, காளையார் கோவில் ஊராட்சிஒன்றியப்பெருந் தலைவர் திரு அ. சண்முகம், சிவகாசி கூட்டுறவு நகரவங்கியின் தலைவர் திரு கண்ணப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். செய்தித்துறை துணை இயக்குநர் திரு கே. நடராஜன் நன்றி கூறினார். விழா முடிவல் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பில் தில்லைராஜன்-பிரமிளா நடித்த 'சூ மந்திரக்காளி நாடகம் நடைபெற்றது.

இந்தப்பல்துறைப் பணி விளக்க விழாவின் சிறப்பு அம்சம் மாவட்டத்திலுள்ள 450 ஊராட்சி கிராமங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள் நாடகங்கள் நடத்தியதாலும் ஒவ்வொரு கிராமத்திலும் பல்துறைப் பணி விளக்க விழாபற்றி சிறப்புக் கூட்டங்கள் மூலம் மக்களுக்கு விளக்கப்பட்ட பின்னர் கலை நிகழ்ச்சிகள், படக்காட்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் இணைந்து நடத்திய இந்த விழாவின் பெரும் வெற்றிக்குச் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் உறுதுணையாக இருந்தனர்.



# பெரியார்-அண்ணா வழியிலே...


**மு. மாசிலாமணி, எம்.எல்.சி.,**
**தலைவர்**
**தமிழ்நாடு ஆசிரியர் வீட்டு வசதி வாரியம்,**


உலகம் தோன்றிய காலம் முதல் இன்று 20ஆம் நூற்றாண்டுக் காலம் வரை சமுதாயச் சீர்திருத்தச் செம்மல்கள் பலர் தோன்றி, மக்கள் சமுதாயத்திற்கு மாபெரும் தொண்டினைச் செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த வரிசையில் தென்னகத்தில் சுயமரியாதைத் தத்துவத்தை விளக்கி, மக்கள் மக்களாக வாழத் தன் சலியா உழைப்பைத் தநதவர் வைக்கம் வீரர் தந்தை பெரியார், ஈ.வெ.இராமசாமி அவர்கள் ஆவார்கள்.

அவர் வாழ்ந்த காலத்தில் மூடப்பழக்க வழக்கங்களை எல்லாம் முறியடித்து, மதச்சார்புடைய மகோன்னதர்களைச் சந்தித்து, இன்றைய தினம் வாழ்ந்து வருகிற சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கினார். தந்தை பெரியார் அவர்கள் மிகப் பெரிய கல்விமானாகத் திகழவில்லை. ஆனால் உலகத்தில் தோன்றிய உத்தமர்கள் சொன்ன தத்துவங்களைச் சிந்தித்து, 'நான் சொல்வதைச் சிந்தித்துச் செயல்படுங்கள்' என்று ஆணித்தரமாக அச்சமின்றிக் கூறினார். அந்தப் பணியில், ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் அவரைச் சமுதாயச் சீர்திருத்தத் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள்.

அவர் அடியினைப் பின்பற்றி அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்களும், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களும், மாயூரம் நடராசன் அவர்களும், குத்தூசி குருசாமி அவர்களும், திரு கே.கே.நீலமேகம் அவர்களும், சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசு அவர்களும், ஆங்கிலமும்-தமிழும் கற்றறிந்த நாடாளுமன்ற மற்றும் சட்ட மேலவை உறுப்பினராக இருந்த டார்பிடோ ஏ.பி.சனார்த்தனம் அவர்களும், திரு.எஸ்.வி.லிங்கம் அவர்களும், குடந்தை திரு எஸ்.கே.சாமி அவர்களும், மற்றும் மருத்துவக் குல மேதை டாக்டர் பண்டிட் எஸ்.எஸ்.ஆனந்தம் அவர்களும் தந்தை பெரியார் அவர்களிடம் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு சமுதாயப் பணியினை ஆற்றிவந்தார்கள்.

தந்தைபெரியார் அவர்கள் இயக்கத்தைத் தொடங்கி, பல முனைகளில் தமிழகம் எங்கும் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்துவந்த காலத்தில் மிகப் பெரிய சீரிய பேச்சாளராகத் தந்தை பெரியார் அவர்களுக்குப் பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களும் துணை புரிந்துவந்தார்கள்.

ஏதென்ஸ் நகரத்துல் சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ் எந்தத் தத்துவத்தைச் சொன்னாரோ, அதைத் திராவிடத்தில் தந்தை பெரியார் அவர்கள சொனனார்கள். அந்த நேரத்தில் எந்த எதிர்ப்பு ஏற்பட்டாலும் நம் கடமை பணி செய்வதே என்று கண் துஞ்சாது, அயராது பணியாற்றி வந்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

இந்த நிலையில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர்இயக்கத்திற்காக பாடுபட்டு வந்த திராவிடர் கழகத்திலிருந்து விலகி 1949ஆம் ஆண்டு தனி இயக்கத்தைத் துவக்கினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரை விட்டுத்தனி இயக்கத்தைக் கண்ட நாள்முதல் அன்பின பிறப்பிடமாய், தாய் உள்ளத்தோடு இயக்கத்தைப் பாச உணர்வோடு நடத்தி வந்தார்கள். இயக்கத்தை அந்நிலையில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்து மக்கள் சக்தியைப் பெருமளவு பெற்றுவந்தார்கள். அண்ணா அவர்களின் தம்பிமார்கள் பல துறைகளில் வல்லுநர்களாகச் சிறப்புப் பெற்று பணியாற்றி வந்தது கழகத்தின் ஒரு மாபெரும் வளர்ச்சியாகப் பயன் பட்டது. அண்ணா அவர்கள் உடன்பிறவா தம்பிகளிடத்தில் அளவு கடந்த பாசத்தையும் பண்பையும் காட்டினார்கள்.

அண்ணா அவர்கள் எழுதிய நூல்கள் தமிழகத்தில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தின. இலட்சிய வரலாறு, கம்பரசம், பணத்தோட்டம் இன்னும் பல நூல்கள், சிறுகதைகள் எழுதி, திராவிட சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். அதுமட்டுமல்ல, அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடநாடு, காஞ்சி என்ற பத்திரிகைகளை நடத்தி, அதன் மூலமாக, தம்பிமார்கள் மனம் குளிர, 'தம்பிக்கு' மடல் தீட்டி, அவர்களின் அன்பைப் பெற்றுவந்தார்.

ஒரு முறை சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. மூர்மார்க்கெட் அருகில், மறைந்த ஜனாப் ஜின்னா அவர்கள் முஸ்லீம் லீக் மாநாடு நடத்தியபோது, தந்தை பெரியார் அவர்கள் கலந்துகொள்கிற வாய்ப்பு ஏற்பட்டது. அத்தகைய இஸ்லாம் நடத்துகிற மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் தமிழில் பேசியதை அமரர் அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அப்போது மாநாட்டில் அமர்ந்திருந்த ஜனாப் ஜின்னா அவர்கள் தந்தை பெரியாரைப் பார்த்து, 'யார் இவர்? இவ்வளவு அழகாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கிறாரே?' என்று கேட்டார். அதற்குத்தந்தை பெரியார் அவர்கள் அவருக்கே உரித்தான முறையில் 'அவர் என் உதவியாளர், குமாஸ்தா', எனப் புன்முறுவலுடன் சொன்னார். அப்போது ஜனாப் ஜின்னா அவர்கள் தந்தை பெரியாரிடம் அண்ணா அவர்களைக் குறித்து 'இவர் எதிர்காலத்தில் பெரிய அறிஞராய்த் திகழ்வார். நாடுபோற்றும் நல்லவராகத் திகழ்வார்' எனப் பாராட்டிச் சென்றார்.

அதற்கிணங்க தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும், சிறந்த கல்வியாளராகவும், கவிஞராகவும், வசனம் எழுதுபவராகவும், சிந்தனையாளராகவும், நடிகராகவும், தத்துவ மேதையாகவும், தலைசிறந்த அரசியல் தலைவராகவும், உலகம் போற்றும் அரசியல் தீர்க்கதரிசியாகவும் இருந்து விளங்கி வந்தார்.

இதைச் சாதாரணத் தொண்டனான நான் சொல்லவில்லை. இந்திய பூபாகத்தில் மூதறிஞராகவும், பெருந் தலைவராகவும் விளங்கிய இராஜாஜி அவர்களும், பெருந் தலைவர் காமராசர் அவர்களும், நிதி அமைச்சராக விளங்கிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், அறிஞர் அண்ணாவைப் பாராட்



டிப் பேசியது இன்னும்கூட நம் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல; இந்திய பூபாகத்தில் சீரான முறையில் ஆட்சிபுரிந்து வந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள், அண்ணா அவர்களைத் தமிழகம் இழந்து தவித்த நேரத்தில், தாங்கொணாத் துயர் கொண்ட மக்கள் கூட்டத்தில் அவர் பேசும் போது 'உலக ஜோதி அணைந்துவிட்டது' என்று கண்ணீருடன் கூறினார். அத்தகைய அண்ணாவை இழந்து கிட்டத்தட்ட 40 இலட்சம் மக்கள் கண்ணீர்க் கடலில் மூழ்கினார்கள்.

இலட்சோப இலட்சம் தொண்டர்கள் அண்ணாவை இழந்திருக்கும் நேரத்திலேதான் அவரது பிம்பமாக, நிழலாக டாக்டர் புரட்சித் தலைவர் நமக்குக் கிடைத்திருக்கிறார். அண்ணாவை இழந்து தவிக்கும் என்போன்ற தொண்டர்கள் 'எங்கு உள்ளோம்; எப்படி உள்ளோம்' என்று அறியாமல் கலங்கிய நேரத்தில் - அந்த சத்தியத்தாய் ஈன்ற தவப் புதல்வன் இதய தெய்வம்- டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் கொலு மண்டபத்தில் எங்களுக்குச் சிறப்பு தந்து செயல் வீரர்களாகவும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், வாரியத் தலைவர்களாகவும் எங்களை நியமித்து ஆதரவு அளித்துள்ளார் என்று சொன்னால் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் உருவத்தில் நாங்கள் தந்தை பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணா அவர்களையும் காண்கிறோம். தன்னலம் கருதாது எதையும் தனக்காக வைக்காமல் - மாவீரன் அலெக்சாண்டர்சொன்னதுபோல மக்கள் கொடுத்ததை மக்களுக்கே அளிக்கிறேன்; எனக்கு என்று எதுவும் இல்லை என்று புரட்சித் தலைவர் அவர்கள் பொன்னாட்சி நடத்துகிறார்.

5 கோடி மக்களின் தளநாயகன், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகளும், அறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியாரும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு விடிவெள்ளியாக வந்த அம்பேத்கார் அவர்களும், பெருந்தலைவர் காமராசரும் அன்று எதையெதைச் சொல்லி விட்டுச் சென்றார்களோ, அதையெல்லாம், கனவாக இருந்தவை நனவாகச் செயல்பட்டுக்கொண்டு செய்து வருகிறார்.

தமிழுக்குத் தொண்டு செய்த தலைவர்களுக்கெல்லாம் - பாரதியார், பாரதிதாசன், வ.உ.சி. இன்னும் பல தலைவர்களுக்கெல்லாம்-தமிழாய்ந்த தமிழ்த் தொண்டு செய்த அத்தனைப் பேருக்கும், தமிழக அரசின் சார்பிலும், தன் சார்பிலும் நாடு அறியும் வகையில் இன்று நீங்காத நல்லதொரு பணியினைச்செய்து வருகிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். அது மட்டுமல்ல; தமிழகத்தில் ஓடுகிற பேருந்து கழகங்களுக்கெல்லாம் திருவள்ளுவர், அண்ணா, பெரியார், நேசமணி, தீரன் சின்னமலை, பட்டுக்கோட்டை அழகிரி, பாண்டியன், சோழன், சேரன், ஜீவா, கட்டபொம்மன், பல்லவன் ஆகியோர் பெயர்களை வைத்து நாட்டு மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெறும் அளவில் செய்துள்ளார்.

வாழ்க அண்ணா நாமம்!
வாழ்க தந்தைபெரியார்நாமம்!
ஓங்குக புரட்சித்தலைவர்
அவர்களின் புகழ்!

*WITH BEST COMPLIMENTS FROM:*

# CHETTINAD CEMENT CORPORATION LIMITED

Kumararajah Muthiah Nagar;
PULIYUR CEMENT FACTORY (Pin : 639 114).
Karur Taluk : : Tiruchirapalli District.

Grams : 'CEMENT' PULIYUR C.F.

Phone : KARUR 21144
22744
21745

Telex : 0456-215

*Registered Office :*

"CATHOLIC CENTRE"
64, Armenian Street, MADRAS-600 001.

Grams : 'BEST CEMENT' Telex : 041-7829 Phone : 21106

*Branches :*

BOMBAY, BANGALORE, CALCUTTA & ERNAKULAM.

*For strength & durability :*

Use

"CHETTINAD BRAND"

* PORTLAND CEMENT
* PORTLAND POZZOLONA CEMENT
* LOW HEAT CEMENT
* SULPHATE RESISTANT CEMENT

# தந்தை பெரியாருடன்


பேரறிஞர் அண்ணா அவர்களுடன்


பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடன்


மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன்


அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்களுடன்


தொழில்மேதை ஜி.டி. நாயுடு அவர்களுடன்


நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடன்

# பெருமக்கள்



தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன்



தொழிற் சங்கத் தலைவர் ஏ.எஸ்.கே. ஐயங்கார் அவர்களுடன்



பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன்



பாபு ஜகஜீவன்ராம் அவர்களுடன்



ஈழத்தலைவர் செல்வநாயகம் அவர்களுடன்



ஜின்னா, அம்பேத்கார் ஆகியோருடன்

# தமிழ்நாடு ஆசிரியர் வீட்டு வசதி வாரியம்

சென்னை



'ஆசிரியர்கள் எதிர்கால சமுதாயத்தை
உருவாக்கும் சிற்பிகள்'

—பேரறிஞர் அண்ணா



எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்
என்பது பழைய மூதுரை
அத்தகைய புகழ்பெற்ற ஆசிரியர் பலர்
சொந்த வீடின்றிச் சோர்வுறுதல் கண்டு



டாக்டர் புரட்சித் தலைவர்

## எம்.ஜி.ஆர்

அவர்களின் அரசு



**ஆசிரியர் வீட்டு வசதி வாரியத்தை அமைத்து**
அவர்களுக்கு வீடு தரும் பணியில்
விடிவெள்ளியாகச் செயலாற்றிவருகிறது.

*ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்—ஆசிரியராக இருந்து அலுவலராக மாறியவர்கள் ஆகியோரும் இந்த வாரியத்தின் மூலம் பயன்பெறுவர்*



ஈ.வி.கே. சம்பத் மாளிகை
காலேஜ் ரோடு, சென்னை-6.

**மு. மாசிலாமணி** எம்.எல்.சி,
தலைவர்,
தமிழ்நாடு ஆசிரியர் வீட்டுவசதி வாரியம்.




ஈரோட்டில் 1978ல் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு தொடக்க விழாவில்......

# தந்தை பெரியாருக்கு தமிழக அரசின் காணிக்கை

தமிழ்ச் சமுதாயத்திற்கும், அறிவுலகத்திற்கும் சீரிய பணியாற்றி மறைந்த, சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுச் சிங்கம் தந்தை பெரியாருக்கு நன்றி கூறும் வகையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசு ஆற்றிய அருஞ் செயல்கள் :

* தந்தை பெரியார் பிறந்த ஊரான ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்ட பெரியார் மாவட்டம் 1978ல் உருவாக்கப்பட்டது.
* மாவட்டம்தோறும் பெரியார் நூற்றாண்டு விழா, எழுச்சியும் ஏற்றமும் இணைந்ததாய் கொண்டாடப்பட்டது.
* பெரியார் அவர்களின் சீரிய பொன் மொழிகளைத் தொகுத்து "பெரியார் புரட்சி மொழிகள்'' என்ற நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது.
* அரசு அலுவலகங்கள் அனைத்திலும் பெரியார் உருவப்படம் வைக்கப்பட்டுள்ளது.
* பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1979 முதல் அரசுத் துறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
* பெரியார் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் பெரியார் ஒளி, ஒலிக் காட்சிகள் ! மாவட்டங்களில் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாய் நடத்தப்பட்டன.
* பெரியார் பொன் மொழிகள் பொறித்த, நினைவுத் தூண், மாவட்டத் தலைநகர்களில் அமைக்கப்பட்டுள்ளது.
* ஈரோட்டில் தந்தை பெரியார் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, நினைவகமாக்கப்பட்டுள்ளது.
* சென்னையில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை, பெரியார் நெடுஞ்சாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
* பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் ஒன்று சென்னையில் உருவாக்கப்பட்டு வருகிறது.
* வைக்கத்தில், தந்தை பெரியார் தீண்டாமை ஒழிப்புப் போர் நடத்திய இடத்தில் பெரியாரின் சிலை, நூலகம், குழந்தைகள் பூங்கா ஆகியவை கொண்ட பெரியார் நினைவு வளாகம் அமைக்கப்பட உள்ளது.
* தந்தை பெரியார் பெயரில், ஆசியாவிலேயே மிகப் பெரிய மாநாட்டு அரங்கம் தமிழகத் தலைநகரில் நிறுவப்பட உள்ளது.
* தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறும், தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை சிறுவர்களுக்கும் விளக்கிடும் வகையில் வண்ணப் படங்களில் 'பெரியார்' என்ற நூலும் வெளியிடப்பட உள்ளது.

## மைய அரசின் பங்கு

* விடுதலைப் போரில் ஈடுபட்ட தியாகிக்குரிய தாமிரபத்திர விருது பெரியாருக்கு அளிக்கப்பட்டது.
* நூற்றாண்டையொட்டி பெரியார் அஞ்சல் தலை வெளியிடப் பெற்றது.






## சென்ற இதழில்.... ...

தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் திருவுருவப் படத்தை சென்ற இதழ் (1-9-86) அட்டை அலங்கரித்தது.

# இடைத் தேர்தல் முடிவுகள்

திருநெல்வேலி, அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளுக்குக் கடந்த 31.8.86 அன்று இடைத்தேர்தல் நடைபெற்றது. அகில இந்திய அண்ணா தி.மு. கழக வேட்பாளர்களாகத் திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்ட மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களும், அருப்புக்கோட்டை தொகுதியில் போட்டியிட்ட திரு வி.எஸ். பஞ்சவர்ணம் அவர்களும் வெற்றி பெற்றார்கள்.

## வாக்குகள் விவரம் வருமாறு:

### திருநெல்வேலி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்குகள் | : | 1,31,041 |
| பதிவானவை | : | 95,585 |
| செல்லாதவை | : | 1,423 |

| | | |
|---|---|---|
| திரு இராம. வீரப்பன் | அஇஅதிமுக | 52,729 |
| திரு ஏ.எல். சுப்பிரமணியன், | திமுக | 39,495 |
| திரு பி. ஜெயபால், | ஜனதா | 1,006 |
| திரு பி. ஜெகதீசபாண்டியன், | சுயே | 526 |
| திரு பி. ஜான் | ,, | 75 |
| திரு எம். முகமது மத்தார் | ,, | 66 |
| திரு டி கே. கருத்தபாண்டி | ,, | 59 |
| திரு எம். இராயப்பன் | ,, | 46 |
| திரு எஸ். சூரியமுத்து | ,, | 44 |
| திரு எம். இராமகிருஷ்ணன் | ,, | 37 |
| திரு ஜெயவீரபாண்டியன் | ,, | 33 |
| திரு பி. இராஜகோபால் | ,, | 25 |
| திரு எஸ். முருகேசன் | ,, | 21 |

### அருப்புக்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்குகள் | : | 1,23,204 |
| பதிவானவை | : | 91,366 |
| செல்லாதவை | : | 1,115 |

| | | |
|---|---|---|
| திரு வி.எஸ். பஞ்சவர்ணம் | அஇஅதிமுக | 55,125 |
| திரு வி. தங்கபாண்டியன் | திமுக | 34,202 |
| திரு ஜி. முத்துகிருஷ்ணன், | ஜனதா | 381 |
| திரு கோவிந்தன் வி. துறவி விபூதி சாமியார் | சுயே | 162 |
| திரு எஸ்.பி. பூஜ்யநாதன் | .. | 92 |
| திரு ஐ. இராமன் | .. | 65 |
| திரு டி.கே. கருத்தபாண்டி | .. | 54 |
| திரு ஏ. சங்கரலிங்கம் | .. | 50 |
| திரு எம். மாரிமுத்து | .. | 50 |
| திரு ஜே. ரவிக்குமார் | .. | 47 |
| திரு ஏ. இராமசாமி | .. | 23 |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

